Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 15/00

දිනමුරසු වාරමලර්

மார்ச். 07 - 13, 2004

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 553

## வடக்கு~கிழக்கில் தேர்தல் களேபரம்

## கூட்டுக்குள் வெளிப்படும் குழம்பிய கருத்துக்கள்



வர்ண ஜாலம் ஒரு கலக்கல்

பாதுணி இல்லாத பாதுங்களோடு -வி.பி-

அதிகரித்து வரும் சமூகச் சீரழிவுகள்

Belmarsh - திகில் -தருவது- ஜெஃப்ரி ஆச்சர்

## ஆன்மீகம்

### ஆன்மீகம் ஒன்றே மருந்து



எல்லாக் குழந்தைகளும் மண்ணில் நல்ல [illegible] வாழத்தான் பிறந்தார்கள். பிறக்கிறார்கள். ஆனால், வாழ்வியல் நீரோட்டத்தில் இவர்கள் பல திசைகளில் சிக்குப்பட்டு பேராசை, அவா, சுயநலம், கோபம், பொறாமை போன்ற கீழான உணர்வுகளுக்கு ஆட்படும் போது ஆன்மீக உணர்வு எங்கோ ஒளிந்து மறைந்து விடுகிறது. சூழ்நிலைகளால் மனிதன் ஆசைக்கு அடிமையாகும்போது [illegible] விபரீதங்களைத் தோற்று விக்கின்றன. அமைதிக்கும் சாந்திக்கும் இன்று உலகம் தவிக்கிறது. மனித குலத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களே இத்தகைய தவிப்புக்குக் காரணமாகும். [illegible]தை விளங்கிக்கொண்டால், இந்த நோய்க்கேற்ப வைத்தியரையும் மருந்தையும் நாடிச் செல்வதற்கு யாரும் தயங்க வேண்டியதில்லை.

விஞ்ஞானம் வெளியுலகத்திலிருந்து வாழ்க்கைச் சுகத்தை இறக்குமதி செய்கிறது. உண்மை நோக்குடைய ஆன்மீகம் உண்மைச் சுகமானது. அகவுலகே அதன் தளம். அமைதியைக் குலைக்கும் வெளியுலக நாசகாரச் செயல்களுக்கு அடிப்படையாக அமைந்தது வாழ்க்கைச் சுகத்தின் பேராசையும் நான் என்ற அகம்பாவமுமே.

சத்தியமே பேச வேண்டும்; தாம வழியில் நடக்க வேண்டும். பொதுவாக மனிதர்களிடம் அன்பு, கருணை, இரக்கம் என்ற இனிய சுபாவங்கள் இல்லாமல் இல்லை. ஆனால் சுயநலப் பித்தேறிய எண்ணங்களை வளர்த்துச் செல்லும்போது நல்ல பண்புகள் நலிவடைந்து அரக்க குணம் நாச வேலைகளில் ஈடுபடுத்திவிடுகிறது.

தர்மக வழியில் நம்மை வழிநடத்திச் செல்லக் கூடிய ஒரே மருந்து ஆன்மீக நெறியே.

சி. இரத்தினம்,மட்டக்குளி

### வேதனை நேரம் அன்பு செய்யும் நேரம்

நமது வாழ்க்கையில் வேதனைகள் பல வந்திருக்கக் கூடும். அதற்காக பழி வாங்க வேண்டும் என்றுகூட நினைத்து இருக்கலாம். பெற்றோரிடம் பகை, நண்பர்களாக இருந்தவர்களிடம் கோபம். மேலதிகாரிகளிடம் மனவருத்தம். இவை அனைத்தும் அன்புக்கு எதிரானவை. இயேசு சிலுவையில் தன்னை அறைந்தவர்களுக்காக மன்றாடினார் அல்லவா? "தந்தையே இவர்களை மன்னியும் ஏனெனில், தாங்கள் செய்வது என்ன என்று இவர்களுக்குத் தெரியவில்லை." (லூக் 23:34) இவ்வாறு நம்மால் மன்றாட முடியுமா? முடிந்தால் நாம் ஆண்டவரின் சாயலிலும் உருவிலும் படைக்கப்பட்டவர்கள் ஆவோம். "மகனே! மகளே! உன் வேதனையை என்னிடம் விட்டு விடு" என்று ஆண்டவர் நம்மை அழைக்கிறார். மன்னித்துவிடு. உன் பாவங்களும் மன்னிக்கப்படும் என்பதுதானே நம் ஆண்டவரின் போதனை! சகோதரர்களே! இயேசு கிறிஸ்துவின் அன்பை நாம் உணர்ந்து அநுபவித்து அதன்படி வாழக் கற்றுக்கொள்ளுவோம். புதிய மனிதர்களாக இப் புதிய ஆண்டில் மாறுவோம். ஆண்டவரின் தூய ஆவியானவர் எமக்குத் துணை புரிவார்.

நமது தனிப்பட்ட செபத்தில் அன்றாடம் ஆர்வத்துடன் நமது நாவை தூய்மைப்படுத்துமாறு மன்றாட வேண்டும். அப்போதுதான் வாழ்வில் நம்மால் வெற்றி பெற முடியும்: "அப்பொழுது என் நா உம் நீதியை எடுத்துரைத்து நாள் முழுதும் உம் புகழ் பாடும். (தீபா 35:28) நேர்மையாளரின் வாய் ஞானத்தை அறிவிக்கும் அவர்களின் நா நீதிநெறிகளை எடுத்துரைக்கும்.

தீச் சொல்லினின்று உன் நாவைக் காத்திடு. வஞ்சக மொழியை உன் வாயை விட்டு விலக்கிடு. நாம் மற்றவர்களுக்காக மன்றாட வேண்டும். நமக்கு வேதனை அளித்தவர்களுக்கு ஆசீர் கூறிச் செபிக்க வேண்டும். இறை வார்த்தை கூறும் எம் நாவு தூய்மையாக இருக்க அனுதினமும் கணத்திற்குக் கணம் செக்கனுக்குச் செக்கன் மன்றாட வேண்டும்.

எல். சதா, கொழும்பு-13

### 'ஜமா அத்' இல்லையென்றால்...

ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடம் ஒருவர் வந்து, ''இன்ன மனிதர் பகலெல்லாம் நோன்பு நோற்கிறார். இரவெல்லாம் தொழுகிறார். ஆனால், 'ஜம் ஆ' தொழுகையிலும், 'ஜமா அத்' தொழுகையிலும் கலந்துகொள்வதில்லை. இவரைப் பற்றிய தீர்ப்பென்ன?'' என வினவினார். அதற்கு ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் ''இவர் நரகவாதி'' என்று பதிலுரைத்தார்கள்.

(திர்மிதி)

இஸ்லாத்தில் சில கடமைகளை 'ஜமா அத்' என்னும் கூட்டுறவு முறையில் ஆற்றப்பட வேண்டும். ஏனென்றால் இஸ்லாம் உலக மாந்தர்களை ஒன்றிணைக்கவே வந்தது. மொழியால், இனத்தால், நிறத்தால், அந்தஸ்தால், நாட்டால் எவ்வித வேறுபாட்டையோ, தனிச் சிறப்பையோ இஸ்லாம் கற்பிக்க வில்லை. அனுமதிக்கவில்லை.

ஆமினா ஹஸனி, கல்முனை-07.

---

கவிதைப் போட்டி இல: 550

பரிசுக்குரிய கவிதை

### தற்காப்பு

வருகிறது திருவிழா
அதனால் வெளியாலே
சமைக்கிறோம்.
வாக்குச் சீட்டை
பறிக்க வருபவர்கள்
கிடைத்த ஒரு முட்டி
சோற்றையும்
உடைத்து விட்டுச்
சென்றிடாமல் - இருக்க.

எம்.கே.ஸதகா,
மாத்தளை.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### புதிய திட்டம்

பணம் கொடுத்து
ஓட்டுக் கேட்டனர் - சில
உதவாக்கரைகள்!
சோற்றைக் காட்டி - வெல்ல
முயற்சிக்கின்றனரோ - இன்றைய
அரசியல்வாதிகள்!

கலைச்செல்வன், சங்கமன்
கிராமம்.

### நிரந்தரமில்லை.....

நித்தமும் ஒவ்வொரு
இடத்தில் நிர்க்கதியாய்
பொங்குகின்றோம்.
நிரந்தர இடமில்லைதான்
நிரந்தரத் தீர்வு வரும் எப்போ?
எங்களுக்கு நிரந்தர
வதிவிடம் வரும் அப்போ.

இராமச்சந்திரன்
தவேந்திரன், ஹாலி - எல.

### எங்களின் தேவை

தேர்தல் வருவதால்
தேவைப் படுவோம்
தேடி வருவார்கள் அகதி
முகாமையும்
உங்கள் தேவைகளைப்
பூர்த்தி செய்கிறோமென்று
எங்கள் தேவைகளெல்லாம்
இன்னும்
ஓர் அகதி முகாமல்ல
சாந்தியும் சமாதானமுமே.

யோகராஜா,
நீர்கொழும்பு.

### சமாதானப் பேச்சுவார்த்தை

பானையில்
அரிசியில்லை - ஆனால்
எல்லோர் பசிக்கும்
உலை கொதிக்குது.

எஸ்.பி.பாலமுருகன்,
பதுளை.

### யாருக்கு?

உலை கொதிப்பது
அகதிகளுக்கல்ல
தேர்தலில் போட்டியிடும்
அரசியல்வாதிகளின்
அடியாட்களுக்கு!

அ.சந்தியாகோ,
கண்டி.

### சுதந்திரமா?

ஐம்பத்தாறு வருடங்களைக் கடந்த
சுதந்திரம்
எங்களுக்கு இன்னும் விடிவது
எல்லாம்
வீதியில் என்ற நிலையில் இருண்டு
கிடக்கிறது.
இன்னும் எத்தனை சகாப்தங்
களுக்கு இந்த
வீதியோர விடியலில்லா வாழ்க்கை!

து.குலலக்ஷ்மி,
மாமாங்கம்.

### குடிசைப் பூச்சிகள்

விற்பனைச் சிலந்தியின்
கற்பனை வலைகளில்
விழுந்து கிடக்கின்றன
குடிசைப் பூச்சிகள்.

எம்.எம்.அப்துல் ஹகீம்,
பறகஹதெனிய.

### கவிதைப் போட்டி இல: 553



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி 13.03.2004

கவிதைப் போட்டி இல. 553
தினமுரசு வாரமலர், தபெஇல-1772,
கொழும்பு.

### திண்டாட்டம்

தேர்தல் வந்தால்
ஆசை வார்த்தைகள்
சொல்லி போடுகிறார்கள்
மன்றாட்டம்!
தெரிவான பின்பு
தேடுவார் யாருமின்றி
நாங்களோ போடுகிறோம்
திண்டாட்டம்!

எஸ்.பி.பி.கணேஷ்,
தாண்டியடி.

### தோள்களில் சவாரி

தோள்களில் அல்லவா
சுமந்தோம் உங்களை
ஊருக்குள் வரவழைக்க
இப்ப எங்களை அல்லவா
சுமக்க வைக்கிறீர்கள் உங்கள்
காவல் அரண்களின் மண்
மூட்டைகளை. உள்ளதையும்
பறிகொடுத்தே அலைகிறோம்.
ஊர் சுற்றிகளாக.

என்.தயாளன்,
வவுனியா.

### புரிந்தால் போதும்

அகதி வாழ்க்கையில்
அல்லற்பட்ட எங்களுக்கு
இந்தத் தேர்தலும்
அரசியல் நெருக்கடியும்
புதியதுமல்ல புரியாததுமல்ல.

சுரேஷ் பொன்னையா,
பதுளை.

---

## உங்கள் பக்கம்

### நிரந்தர நியமனம் வழங்குதல்

தேர்தல் காலத்தில் நியமனம் வழங்குவதும் தற்காலிக ஊழியர்கள் நிரந்தர ஊழியர்கள் ஆக்கப்படுவதும் இயல்பானது. இம்முறை தேர்தல் காலத்தில் இவை இரண்டில் எதுவுமே நடக்கவில்லை. புதிய நியமனங்கள் விடயத்தில் சில தாமதங்கள் ஏற்பட வாய்ப்பிருந்தாலும் தற்காலிக ஊழியர்கள் ஆகிய எமக்கு நிரந்தர ஊழியர்களாக நியமனம் வழங்குவது சாத்தியமகலாம் அல்லது அரசியல் சாயம் பூசாமல் எல்லாத் தரப்பாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேன்மைதகு ஜனாதிபதி இது விடயத்தில் கருணை உள்ளம் கொண்டு சிபாரிசுகளைச் செய்ய முன்வரவேண்டும் எனக் கோரி நிற்கிறோம். இந்த வேண்டுகோளை தற்காலிக ஊழியர்கள் சார்பில் முரசில் பிரசுரிக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன். எமது பிரச்சினை களை வாக்குறுதிகள் இல்லா மல் செயலாற்ற யார் முன்வருவார்களோ, அவர்களுக்கே எமது வாக்கு.வீடுகள் தோறும் ஏறி இறங்கி வாக்கு கேட்கும் அரசியல் சாணக்கியர்கள், தேர்தலில் வென்றதும் திரும்பிக் கூடப்பார்ப தில்லை. இந்நிலைமை மாறவேண்டும்.

- மு. ராஜேஸ்வரன்,
திருகோணமலை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் - உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
தபெ.இல: -1772,கொழும்பு.
தொலைபேசி: 4514282
தொலை நகல் (Fax): 4513266
ஈ-மெயில்: (E-mail):
murasu@sltnet.lk

---

## வாசக[ர்] சாலை

### தேன் சொட்டும் தினமுரசே!

சென்ற வாரம் 551 ஆவது முரசில் பிரசுரமான ஆக்கங்கள் இனிமையிலும் இனிமை. ஆன்மீகம் என்னைச் சிந்திக்க வைத்தது. அதிரடி அய்யாத்துரையில் அலசப்பட்ட விடயங்கள் உண்மை பூர்வமாக இருந்தது. காதில பூ கலக்கல். சிந்திக்கத் தூண்டும் உனது சேவை தொடரட்டும்.

எம். பாலகுமார்,
மட்டக்களப்பு.



### என் அன்பிற்கினிய முரசே!!

வாரம் ஒரு முறை பூத்திட்ட உன்னை என்றும் எதிர்பார்த்தேன். 550 ஆவது இதழாய் என்னுள்
பூத்த நீ - என்றும் சிறப்பாய் பூக்க
என்றும் தளராமல் வாழ
வளமாய் வளர வாழ்த்துகிறேன்
வாழ்க! வாழ்க! வாழ்க!

ச. புவனேந்திரன்,
மட்டக்களப்பு.

### தினமுரசு வாசகன் வரையும் அன்பான மடலிது!

வாரந்தோறும் எமக்குப் பல செய்திகளைத் தந்து எம்மை அதிசயிக்க வைக்கும் தினமுரசு என்றும் புதுமையுடன் வெளிவர என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

பிரியமுடன் வாசகன்
எம்.எம். றிஸ்வான்,
கண்டி.

### முகப்பில் ஒரு வியப்பு

முரசின் முகப்புப்பக்கம் உள்ளே உள்ளதைச் சொல்லும் விதம் எம்மைப் பிரமிக்க வைக்கிறது. இதன் பக்கங்களைப் புரட்டினால் மூக்கின் மேல் விரலை வைக்க வேண்டியுள்ளது.

எதை விடுவது, எதைப் படிப்பது என வாரா வாரம் வாசகர்கள் திண்டாட்டம்தான். முகப்பிலே வியப்பைத் தந்து சூடு, சுவை, சுவாரசியம் என்று சும்மா சொல்லவில்லை முரசு.

ச. ஸ்ரீசங்கர்
கொழும்பு-05

### உன்னை வார்த்தைகளால் வாழ்த்த முடியவில்லை. வணக்கத்துடன் முரசே!

அட்டை முதல் பக்கம் யாவும் அறிவின் பக்கங்களை கொண்ட முரசே! உன் அறிவுப் பத்திரிகையின் கோடிக் கணக்கானவரின் நானும் ஒருவன். உன் பணி மிகவும் வரவேற்கத் தக்கதாக மக்கள் மத்தியில் பிரபல்யமாகி வருகிறது. செய்திகளை உடனுக்குடன் தருவது துணிச்சலான செய்திகளைக் கொடுப்பதில் உனக்கு நிகர் கிடையாது. அது மாத்திரமின்றி ஒவ்வொரு வாரமும் நீ வாசகர்களை காக்கவைத்து வேதனைப் ப்படுத்துகிறாய்! தமிழில் வாசனையான தினமுரசே! உன் பணி மேலும் வளர வாழ்த்துகிறேன்.

வே. ராஜேந்திரன்
இல. 49, காந்திநகர்
செட்டிக்குளம்.

### தித்திக்கும் முரசே!

வியாழன் தோறும் நீ எம்மை இன்ப வெள்ளத்தில் மகிழ வைக்கிறாய். சுவையூட்டும் தேன்கிண்ணம், சிந்திக்க காதில பூ, சிரிக்க சிந்தியா, அதிசயிக்க தகவல் பெட்டி என பல சுவையான செய்திகளுடன் எமை மகிழ்வூட்டும் உன் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

உன் வாசகி
எஸ். சர்மிளா,
முல்லைத்தீவு.

### என்றும் என்னுள் நிலைத்திருக்கும் முரசே!

உன் வருகையால்
சூரியனைக் கண்டு
மலரும் செந்தாமரை
போல்
நான் மலர்கின்றேன்.
காலத்தின் தேவையை
அறிந்து தகவல்கள்
பல தரும் உன்பணி
தொடர என்
வாழ்த்துக்கள்.

- வாசகி
ஆர். மதுமிதா,
பண்டாரவளை.

# புலிகளின் வன்செயல்களுக்கு அமெரிக்கா கண்டனம்

தேர்தல் பிரசாரங்களின்போதும் அதற்குப் பின்னரும் புலிகள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறான வன்செயல் சம்பவங்கள் அரசியல் தீர்வில் புலிகள் கொண்டிருக்கும் நம்பிக்கையைச் சந்தேகத்துக்கு இடமாக்குகிறது. அமெரிக்காவின் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் புலிகள் தொடர்ந்தும் இருப்பதற்கான காரணம் இதுதான் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பில் ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர் சுந்தரம்பிள்ளை சுட்டுக் கொல்லப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்து அமெரிக்கா இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. இப்படுகொலைக்கு யாரும் பொறுப்பேற்கவில்லையென்றபோதிலும் தாம் விரும்பாத தமிழ் வேட்பாளர்கள் போட்டியிடக் கூடாதென்று புலிகள் அண்மையில் விடுத்த அறிக்கை இதனைத் தெளிவாக விளக்குகிறது.

அரசியல் வன்செயல்கள் இல்லாமல் பொதுத் தேர்தல் நடைபெற வேண்டுமென்று பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி நடைபெற்ற வாஷிங்டன் மாநாட்டில் உதவி வழங்கும் நாடுகள் கோரியிருந்ததைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். அரசியல் படுகொலைகள் உட்படப் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென்றும் தாம் கைச்சாத்திட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையைப் புலிகள் மதித்து நடக்க வேண்டுமென்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. ○

## யாழ். வீரர்களுக்குச் சோதனை!

கடந்த வாரம் கிளிநொச்சியில் இடம்பெற்ற புலிகளின் விளையாட்டு விழாவுக்குச் சென்ற யாழ். குடாநாட்டைச் சேர்ந்த வீரர்கள், வன்னியில் கடுமையான சோதனைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்று வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன. யாழ். வீரர்களோடு உளவாளிகளும் வந்திருக்கலாமென்ற சந்தேகத்தின் பேரிலேயே தீவிர சோதனை நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது. குடாநாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்திய விளையாட்டு வீரர்கள் தனித்தனியாகப் புலிகளின் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். அத்துடன் இவர்கள் தங்கிய இடம் மற்றும் விளையாட்டு மைதானம் தவிர்ந்த ஏனைய இடங்களுக்குச் செல்லக் கூடாதெனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தனர். ○

## நிராகரிப்பு

தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குப் புலிகள் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பது யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணியல்ல. புலிகளுக்கும் அரசுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்பு வேலைகளில் ஈடுபடுவதே எமது பணியாகும் என்று கண்காணிப்புக் குழுவின் பேச்சாளரான திருமதி அக்னஸ் பிரகொடிற்றிர் தெரிவித்தார். ○

## 3 கோடி ரூபா செலவு

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை அச்சிடுவதற்கு மூன்று கோடி ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக விசேட கடதாசி பிரிட்டனிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. வாக்காளர் அட்டைகளை அச்சிடும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அச்சகர் நெவில் நாணயக்கார தெரிவித்துள்ளார். கடந்த தேர்தலின்போது வாக்காளர் அட்டைகளை அச்சிடுவதற்குச் செலவு செய்யப்பட்ட தொகையிலும் பார்க்க இம்முறை ஐம்பது இலட்ச ரூபா அதிகம் செலவாகுமென்றும், ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு மற்றும் விசேட கடதாசியை இறக்குதி செய்வதற்கான செலவு அதிகரிப்பு ஆகியவையே இம்முறை அச்சுச் செலவு அதிகரித்தமைக்குக் காரணமென்றும் அவர் தெரிவித்தார். ○

## படுகொலைகளை நிறுத்தவும் மன்னிப்புச் சபை கோரிக்கை

அரசியல் எதிரிகள் மீது வன்முறைகளைப் பாவிக்கவோ அல்லது அவர்களைக் கொலைசெய்யவோ வேண்டாமென்று சர்வதேச மன்னிப்புச் சபை புலிகளைக் கோரியுள்ளது. பொதுவாகச் சகல அரசியல் கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ள மன்னிப்புச் சபை புலிகளிடம் பிரத்தியேகமாக இக்கோரிக்கையை விடுத்துள்ளது. தேர்தலில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினரும் மனித உரிமைகளை மதித்து நடக்க வேண்டும். மனித உரிமை மீறல்களுக்கு முடிவு கட்டுவதோடு சிறந்த நெறிகளைக் கடைப்பிடிப்போமென்று மக்களுக்கு உறுதி வழங்க வேண்டுமென்றும் மன்னிப்புச் சபை கேட்டுள்ளது.

இது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

பரந்த அளவிலான மனித உரிமை மீறல்களுக்கான சாத்தியம் இத்தேர்தலின்போது காணப்படுவது கவலைக்குரியதாக உள்ளது. இதுவரை தேர்தல் தொடர்பான சுமார் 100 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதோடு 40 கட்சித் தொண்டர்கள் தென் மற்றும் வட மத்திய பிராந்தியங்களில் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். இவை தேர்தல் மனுக்கள் சமர்ப்பித்த மூன்று நாட்களுக்குள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் கிழக்கில் நான்கு பொதுமக்கள் புலிகளால் கடத்தப்பட்டுள்ளதாகவும் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த 2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இடம்பெற்ற தேர்தலின்போது அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 40 பேர் கொலைசெய்யப்பட்டதோடு பலர் காயமடைந்ததாகவும் முறையிடப்பட்டிருந்தது.

குறிப்பாக, விடுதலைப் புலிகள் ஆதரிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சாராத இதர கட்சிகளின் ஆதரவாளர்கள் படுகொலைக்கான இலக்காக அமையலாம் என்ற அச்சம் உள்ளது. இதில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சார்ந்த சுயேச்சை வேட்பாளர்கள், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி என்பன அச்சுறுத்தப்பட்டுள்ளன.

கடந்த 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் அமுலுக்கு வந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் 50க்கு மேற்பட்டோர் கொலைசெய்யப்பட்டோ அல்லது கொலை முயற்சிக்கு உட்படுத்தப்பட்டோ இருந்தமையின் பின்னணியில் புலிகள் இருந்துள்ளனர்.

இடைக்கால நிர்வாக ஒழுங்கு ஏற்படும் வரை வட கிழக்கில் இடம்பெற்று வரும் சட்டம் ஒழுங்கு அற்ற நிலை காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அரசாங்கமும் புலிகளும் அப்பகுதியில் வாழும் மக்களின் சுதந்திரமான போக்குவரத்தினையும், சுதந்திரமாகக் கூட்டம் கூடும் உரிமையினையும் தத்தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அம்மக்களுக்கு இத் தேர்தல் காலத்தில் வழங்க வேண்டுமென மன்னிப்புச் சபை கோரியுள்ளது. ○

## மட்டக்களப்பில் முதலாவது தேர்தல் படுகொலை!

2004ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், இலங்கையின் முதலாவது தேர்தல் படுகொலை மட்டக்களப்பில் இடம்பெற்றிருக்கிறது. ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளரான சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை என்பவர் கொலைசெய்யப்பட்டதானது, வடக்கு - கிழக்கில் எவ்வாறு தேர்தல் நடைபெறப் போகிறதென்பதற்கு எடுத்துக்காட்டாக உள்ளதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளரான இவரைப் போட்டியிட வேண்டாமென்று ஏற்கெனவே இனந்தெரியாத நபர்கள் எச்சரித்திருந்தனரெனக் கூறப்படுகிறது. கடந்த 28ஆம் திகதி ஆரையம்பதியிலுள்ள இவரது வீட்டுக்குள் நள்ளிரவு வேளையில் புகுந்த மூவர், சுந்தரம்பிள்ளை மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததோடு வீட்டிலிருந்த பொருட்களையும் அடித்து நொறுக்கி விட்டுச் சென்றுள்ளனர். : 29ஆம் திகதி அதிகாலை இவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் பதினோராம் இலக்க நோயாளர் விடுதியில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டிருந்தார். இத்துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக சுந்தரம்பிள்ளையின் மைத்துனரான சீனித்தம்பி சசிகுமார் என்பவர் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இத்தாக்குதலை நடத்தியவர்கள் புலிகளேயென்று சசிகுமார் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (முறைப்பாட்டு இலக்கம் E1B 4/25). இத்தாக்குதல் தொடர்பாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் புலி இயக்கப் பிராந்தியத் தலைமையுடன் பேசியதாகவும் இத்தாக்குதலுக்கும் தமக்கும் சம்பந்தமில்லையெனப் புலிகள் தெரிவித்ததாகவும் மேற்படி அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர், மார்ச் முதலாம் திகதி வைத்திசாலைக்குள் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

புலிகள்தான் தாக்குதல் நடத்தினார்களென்று காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் சுந்தரம்பிள்ளையின் மைத்துனர் முறைப்பாடு செய்திருந்தபோதிலும் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவருக்கு ஏன் பொலிஸார் பாதுகாப்பு வழங்கவில்லையென்று தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் கேள்வி எழுப்பியுள்ளது. பொலிஸ்மா அதிபரும் ஏனைய பொலிஸ் அதிகாரிகளும் வன்முறைகளுக்கு இடமளிக்கமாட்டோமென உறுதியளித்திருந்தபோதிலும் சுந்தரம்பிள்ளைக்குப் பாதுகாப்பு வழங்காததேன் என்று இந்த அமைப்பு கேட்டிருக்கிறது.

2001ஆம் ஆண்டுத் தேர்தலின்போது புதிய இடதுசாரி முன்னணியின் வேட்பாளராகச் சுந்தரம்பிள்ளை போட்டியிட்டாரென்றும் அப்போது புலிகளால் கடத்தப்பட்டு நாற்பது நாட்கள் தடுத்து வைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டாரென்றும் காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கொப்பேவல தெரிவித்தார். ○

## சம்பந்தரின் வேட்பு மனுவில் தவறெனப் புகார்

திருமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுவில் குளறுபடிகள் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் திருமலை எம்.பி.யுமான இரா.சம்பந்தன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வேட்பு மனுவை அத்தாட்சிப்படுத்திய சமாதான நீதவான் கையெழுத்திட்ட விதத்தில் தவறு இருப்பதாகக் கூறப்படுகிறது. சம்பந்தன் ஒரு சட்டத்தரணி மட்டுமல்ல, பல தடவைகள் வேட்புமனுத் தாக்கல் செய்தவரும் கூட. இருந்தும் இவ்வாறு தவறிழைக்கப்பட்டிருப்பது குறித்துப் பல கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இது தொடர்பாகத் திருமலை தெரிவத்தாட்சி உத்தியோகத்தருக்கு முறைப்பாட்டுக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் கூட்டமைப்பின் வேட்புமனு நிராகரிக்கப்பட வேண்டுமென்று கோரப்பட்டிருப்பதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. ○

## இரட்டை வேடம்

கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் போட்டியிடும் முன்னாள் இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்குச் சார்பாக யாழ். குடாநாட்டில் பிரசாரம் செய்யவுள்ளதாக யாழ்ப்பாணப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிடக் கூடாதெனப் புலிகள் விடுத்த உத்தரவையடுத்தே அங்கு ஐ.தே.மு போட்டியிடவில்லை; மகேஸ்வரனும் போட்டியிடவில்லை. இருந்தும், யாழ். குடாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்ய மகேஸ்வரனுக்கு பிரதமர் அனுமதி வழங்கியுள்ளாரா? புலிகளின் முன்னணி அமைப்பே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. 'ஏன் அம்பாறை, மட்டக்களப்பு, வன்னி மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து மகேஸ்வரன் பிரசாரம் செய்யமாட்டார்.? என்று தமிழ் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். ○

## வாழைச்சேனையில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் சுட்டுக் கொலை

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினரான தயா என்றழைக்கப்படும் பொன்னையா யோகேந்திரன் (வயது 28) புலிகளினால் கடந்த முதலாம் திகதி இரவு 9.30 மணியளவில் வாழைச்சேனை கல்லடி வீதியிலுள்ள அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவரை புலிகளின் பிஸ்டல் குழுவினரே சுட்டுள்ளனர். கட்டடத்தின் பின்புறமாக வந்து மறைந்திருந்த கொலையாளி சுட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளார். ஸ்தலத்திலேயே யோகேந்திரன் பலியாகியுள்ளார். மட்டக்களப்பிலுள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகத்தில் மக்களின் அஞ்சலிக்காக இவரது பூதவுடல் வைக்கப்பட்ட பின்னர் கடந்த புதன்கிழமை மாலை தகனக் கிரியைகள் இடம்பெற்றன. பெருந்தொகையான மக்கள் காலஞ்சென்றவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.புலிகள் இயக்கத்தினால் யோகேந்திரனுக்கு தொடர்ந்து அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வந்நதாகவும் இத்தகைய அடாவடித்தனமான சம்பவங்கள் வடக்கு, கிழக்கில் சுதந்திரமான தேர்தல் நடைபெறுவதற்கு இடையூறாக அமையுமென்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளென்று தம்மைத் தாமே அழைத்துக்கொள்ளும் புலிகள், தமது பாசிச இலக்கை அடைவதற்காக இவ்வாறான படுகொலைகளில் ஈடுபடுகின்றனர். புலிகளின் இப் பயங்கரவாத நடவடிக்கைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் டக்ளஸ் தேவானந்தா கேட்டுள்ளார். ○

## வரலாற்றில் முதல் அணி!

இலங்கையின் வரலாற்றிலேயே முதல் தடவையாக முற்றுமுழுதான மகளிர் அணியொன்று தேர்தலில் போட்டியிடுகிறது. கொழும்பு மாவட்டத்தில் சுயேச்சையாகப் போட்டியிடும் இந்த அணியில் நான்கு சட்டத்தரணிகள், ஐந்து பல்கலைக்கழக மாணவிகள், மூன்று திருமணமான பெண்கள், ஒரு ஓய்வுபெற்ற ஆசிரியை, ஒரு மத்திய கிழக்கில் பணிப்பெண்ணாக வேலை செய்து திரும்பிய பெண் ஆகியோர் போட்டியிடுகின்றனர். உலக சனத்தொகையில் பெண்கள் அரைப் பங்கினர் இலங்கை, இந்தியா உள்ளிட்ட சகல நாடுகளிலும் நிலைமை இதுதான். ஆனால், இந்தியா உட்படச் சகல நாடுகளிலும் பெண்கள் கேட்பது முப்பது சதவீதப் பிரதிநிதித்துவம்தான். ஆனால், பிரிட்டன், அமெரிக்கா, நோர்வே மற்றும் ஸ்கண்டிநேவியன் நாடுகளிலும் பெண்களுக்கு முப்பது சதவீதப் பிரதிநிதித்துவம் கூட இல்லை. ஏன் தெரியுமா? பெண்கள் தாமாகவே முன்வந்து தமது பிரதிநிதித்துவத்தை எடுக்காதவரை அவர்களுக்காக ஆண்கள் எதுவும் செய்யப்போவதில்லை. ○

## சூயஸ் கால்வாயில் 54 இலங்கையர்கள் கைது

இலங்கையிலிருந்து ட்ரோலர்கள், படகுகள் மூலம் கடல் வழியாக இத்தாலிக்கு ஆட்களைக் கடத்தி வந்தவர்கள் இப்போது இந்தியாவிலிருந்து ஆட்களைக் கடத்துகின்றனரென்று இரகசியப் பொலிஸ் சுப்ரிண்டன் டி.எஸ்.வை. சமரதுங்கா தெரிவிக்கிறார். கொழும்பிலிருந்து சட்ட ரீதியாக ஆட்களைக் கூட்டிச்சென்று பின்னர் அங்கிருந்து சட்ட விரோதமாகக் கடத்துகின்றனரென்றும் அவர் சொன்னார். சூயஸ் கால்வாய் வழியாகவே ஆட்கள் கடத்தப்படுகின்றனரென்றும் இதற்காக எகிப்திய அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுக்கப்படுகிறதென்றும் அவர் சொன்னார். இரு வாரங்களுக்கு முன்னர் எகிப்தியக் கடலில் 54 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டனர். கள்ளத்தனமாக இத்தாலி செல்ல முயன்ற இவர்கள் இப்போது கெய்ரோவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் விசாவோ, பாஸ்போர்ட்டுகளோ இல்லாமல் கடல் வழியாக இத்தாலி செல்ல முயன்ற 326 இலங்கையர்கள், 398 பாகிஸ்தானியர்கள், 318 இந்தியர்கள், 35 பங்களாதேஷ் வாசிகள் இலங்கையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவ்வருடம் நீர்கொழும்புக் கடலில் இத்தாலி செல்ல முயன்ற 177 இலங்கையர்களைக் கடற்படையினர் கைதுசெய்தனர். இரண்டாவது தடவையாக மேலும் 65 பேர் கைது செய்யப்பட்டனர். கடந்த வருடம் தங்காலை, திக்வெலையிலிருந்து ட்ரோலரொன்றின் மூலம் இத்தாலி செல்ல முயன்ற 254 பாகிஸ்தானியர்களை இலங்கை இரகசியப் பொலிஸார் கைதுசெய்தமை குறிப்பிடத் தக்கது. ○

## பொலிஸ் பாதுகாப்புக்கு அஞ்சும் வேட்பாளர்கள்

வடக்கு - கிழக்கில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பொலிஸ் பாதுகாப்புக் கோர அஞ்சுகிறார்களென்று பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா கூறுகிறார். மட்டக்களப்பில் சுட்டுக் கொல்லப்பட்ட ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர் சுந்தரம்பிள்ளைக்கு ஏன் பொலிஸ் பாதுகாப்பு வழங்கவில்லையென்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். வீட்டில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சுந்தரம்பிள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோதே சுட்டுக் கொல்லப்பட்டாரென்பதும் அவருக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவில்லை யென்பதும் குறிப்பிடத் தக்கது.

பொலிஸ் பாதுகாப்பைப் பெற்றால் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகலாமென வேட்பாளர்கள் அஞ்சுவதாகவும் அவர் கூறினார். அப்படியானால் மாற்று வழியென்ன என்று கேட்டபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடாத ஏனைய வேட்பாளர்களை ஏதாவது ஓரிடத்தில் வைத்துப் பாதுகாப்பு வழங்குவது பற்றி யோசித்து வருகிறோம். அப்படிச் செய்தால் கூட வேட்பாளர்களின் குடும்பத்தவர்கள் தாக்குதலுக்குள்ளாகக் கூடிய சாத்தியம் உண்டென்கிறார் பொலிஸ்மா அதிபர்.

அப்படியானால் இராணுவ அதிரடிப் படை வீரர்களைப் பாதுகாப்பாக வழங்கலாமேயென்று கேட்டபோது, அதுகுறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக அவர் சொன்னார். ○

# முரசம்

## வன்முறைக் களமாகிறதா வடக்கு - கிழக்கு?

அன்புள்ள உங்களுக்கு வணக்கம்

இந்தத் தேர்தலில் மக்களின் கருத்து என்ன என்பதையே அனைவரும் அனைத்துலகமும் எதிர்பார்த்து நிற்கிறது. தென்னிலங்கையில் மட்டுமல்ல, வடக்குக் கிழக்கிலும் மக்களின் விருப்பு வெறுப்புகள் பற்றிய சரியான மதிப்பீடுகள் தற்போது தேவைப்படுகின்றன. இந் நிலையில் உண்மையான மக்கள் கருத்து வெளிப்படும் வகையில் முறையான, நியாயமான தேர்தல் அவசியப்படுகிறது. ஆனால், இத் தேர்தலின் நியாயத் தன்மையைக் கேள்விக்குறியாக்கும் விடயங்கள் பல ஆரம்ப கட்டத்திலேயே தலைதூக்குகின்றன. குறிப்பாக வடக்குக் கிழக்கில் நியாயமான வாக்கெடுப்பு நிகழுமா என்ற பலத்த சந்தேகம் இப்போது வலுப்பெற்று வருகிறது. இத் தேர்தல் அறிவிக்கப்பட்டு வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டபின் முதலாவது தேர்தல் படுகொலை கிழக்கு மாகாணத்திலேதான் நிகழ்ந்தது. இத் தேர்தலில் முதல் படுகொலையை அரங்கேற்றி வைத்த அவப்பெயரைத் தமிழ்ப் பிரதேசம்தான் முதன்முதலில் சுமந்துகொள்ள நேர்ந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ஒருவர் மட்டக்களப்பில் அவரது வீட்டில் வைத்துச் சுடப்பட்டு, தெய்வாதீனமாக உயிர்தப்பி, பின்னர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தபோது, அங்கு வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளமை இலங்கை மக்களை மட்டுமல்ல, சர்வதேச சமூகத்தையே அதிர வைத்துள்ளது. இதனைக் கண்டித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் உடனடியாக அறிக்கை வெளியிட்டது. சர்வதேச மன்னிப்புச்சபை இத் தேர்தல் நியாயமாக நடத்தப்படுமா என்பது குறித்துச் சந்தேகம் தெரிவித்துள்ளது. இவையனைத்தையும் பொருட்படுத்தாமல் அடுத்து வாழைச்சேனையில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இது உலக அபிப்பிராயத்துக்குச் சவால் விடுவதாகவே அமைந்துள்ளது. இத் தேர்தலில் வெற்றியீட்டுவதற்கான மார்க்கமாக வன்முறைகளை நம்பும் நிலை வடக்குக் கிழக்கில் தலைதூக்கியுள்ளதாகப் புலப்படுகிறது. மன்னாரில் ஈ.பி.டி.பி. கட்சிக்காக வாடகைக்கு அமர்த்தப்பட்ட தனியார் ஒருவரின் வாகனம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளமை, யாழ்ப்பாணத்தில் இவ்வாறு ஈ.பி.டி.பி.க்கு வாகனங்களை வாடகைக்கு விட்டவர்கள் இருவர் எச்சரிக்கப்பட்டமை போன்ற சம்பவங்கள் மாற்றுத் தரப்பினரின் தேர்தல் நடவடிக்கைகளை பலாத்காரமாகத் தடுக்கும் முனைப்பையே வெளிக் காட்டுகிறது. உண்மையில் இவ்வாறான நடவடிக்கைகளால் ஒருபுறம் மாற்றுக் கட்சிகளின் தேர்தல் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்திக்கொண்டு, மறுபுறம் பெருவாரியான கள்ள வாக்குகள் மற்றும் தேர்தல் முறைகேடுகள் மூலம் வெற்றியீட்டவே திட்டமிடப்படுகின்றதா என்ற சந்தேகம் அவதானிகள் மத்தியில் ஆரம்பத்திலேயே தலைதூக்கிவிட்டது. இவ்வாறான வழிவகைகளைக் கையாண்டு யார் தேர்தலில் வெற்றியீட்டினாலும் அதனை உண்மையான மக்களபிப்பிராயமெனப் புற உலகம் நம்பும் நிலை இருக்காது. இவ்வாறன செயற்பாடுகள், எதிர்காலத்திலும் மக்கள் ஆதரவு பற்றி சர்வதேச சமூகத்தை நம்பவைக்க முடியாத நிலைமையையே தோற்றுவிக்கும்.

■ ■

மீண்டும் மறு மடலில்
வந்து கலக்கும் வரை

என்றென்றும் அன்புடன்
ஆசிரியர்

---

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# கூட்டுக்குள் வெளிப்படும் குழம்பிய கருத்துக்கள்

இந்தமுறை தேர்தல் களத்தில் குதித்துள்ள கூட்டமைப்பினரின் முகத்தில் உற்சாகமேயில்லை. தாம் என்ன செய்கிறோம் ஏது செய்கிறோம் என்ற சுயசிந்தனை கூட இல்லாதவர்களாக, சொல்வதை இயந்திரத் தனமாகச் செய்து செல்லும் செயற்பாடும், சொல்வதையே திரும்பத் திரும்ப ஒரு மந்திர உச்சாடனமாகச் சொல்லிக்கொண்டிருக்கின்ற நிலையும்தான் அவர்களிடம் காணப்படுகிறது.

இது ஏன் வந்ததென்று அனுமானிப்பது எவருக்குமே சுலபமான விடயம்தான். அவர்களின் சுயத்தன்மை அற்றுப்போனதே இதன் காரணம். தங்கள் கட்சிகள், அவற்றின் பாரம்பரியங்கள், நீண்ட வரலாற்றுப் பாதையின் சுவடுகள், குணாம்சங்கள், சுயகௌரவங்கள் உள்ளிட்ட சொந்த முகங்களை அவர்கள் இழந்துபோனார்கள். இன்று தேர்தலில் முகங்காட்டும் இவர்கள் ஒவ்வொருவரும் தமது சொந்த முகத்தையா அடையாளப்படுத்துகிறார்கள்? இல்லையே! அவர்கள் வேறொரு முகத்தையல்லவா பிரதிபலிக்கிறார்கள்! அவர்கள் முகம் பார்ப்பதற்காகக் கண்ணாடியைப் பார்த்தாற் கூட, அதில் தம் சொந்த முகத்தைக் காணமாட்டார்களென விமர்சகரொருவர் சொல்லி யிருந்தது நையாண்டியாக இருந்தாலும் அர்த்தமுள்ளதே.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், 'கடந்தமுறை புலிகள் தேர்தலில் நேரடியாக ஈடுபடவில்லை. இந்தமுறை அவர்கள் நேரடியாக ஈடுபட்டுள்ளதால், மக்கள் அவர்கள் மீது கொண்டுள்ள கருத்தை உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டும்' எனப் பேசியிருந்தார். இது மேற்சொன்னபடி அவர்கள் சொந்த முகமிழந்து நிற்பதை அப்பட்டமாக எடுத்துக் காட்டுகிறதல்லவா?

சம்பந்தன் யார்? அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர். அவர் இப்போது தமிழர் விடுதலைக் கூட்டணிக்காகவா வாக்குக் கேட்கிறார்? இல்லை! சரி போகட்டும். கடைசி, தாம் அங்கம் வகிக்கும் கூட்டமைப்புப் பற்றி மக்களின் அபிப்பிராயத்தை உலகுக்குக் காட்டும்படியாவது கேட்டாரா? அதுவுமில்லை! அதையும் தாண்டி, புலிகள் பற்றிய அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும்படி கோரியே தனது சொந்த அடையாளத்தை விற்கிறார். புலிகள் பற்றிய மக்களபிப்பிராயத்தைப் பெற வேண்டுமென்றால் அதைப் புலிகள் தமது சொந்தப் பிரதிநிதியொருவரை வேட்பாளராக நிறுத்தி அறிந்து கொள்ளலாமல்லவா? ஏன் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாரம்பரியத்தில் வந்த இவர் அதற்குப் போய் தன்னை முன்னிறுத்த வேண்டும்?

புலிகளின் ஆயுதப் போராட்டப் பாரம் பரியத்துக்கும் கூட்டணியின் அகிம்சை வழிப் பாரம்பரியத்துக்கும் என்ன சம்பந்தம்? இவ்வாறு சம்பந்தன் புலிகளின் செல்வாக்கை வெளிக் கொணர்வதற்காகத் தான் போட்டியிடு வதானது புலிகளின் செல்வாக்கால்தான் தாம் வெற்றியீட்டப் போகிறார்களென்றா? அல்லது தமது அரசியற் பாரம்பரியத்தின் செல்வாக்கால்தான் புலிகள் வெற்றியீட்டப் போகிறார்கள் என்றா? இது புலிகளின் செல்வாக்குக்கான உண்மையான அளவீடாகுமா? ஒருவேளை சம்பந்தனுக்குப் பதிலாக புலிகள் தமது சொந்தப் பிரதி நிதியொருவரை தேர்தலில் நிறுத்தியிருப்பார்களானால் அவர் சம்பந்தன் எடுக்கக் கூடிய வாக்குகளை எடுப்பாரா? அப்படி எடுப்பாரானால் இவ்விடத்தில் சம்பந்தன் போட்டியிடத் தேவையே இல்லையே. அவர் சம்பந்தனை விட அதிக வாக்குகள் பெறுவாரெனக் கூறுவீர்களேயானால், சம்பந்தர் அடையாளப்படுத்துகின்ற கூட்டணிப் பாரம்பரியத்தை விடப் புலிகளின் பாரம்பரியத்துக்கே மக்கள் செல்வாக்கு அதிகமென அர்த்தமாகும். மாறாக, அவர் சம்பந்தரை விடக் குறைவான வாக்குகளைப் பெற்றால் அவ்விடத்தில் கூட்டணிப் பாரம்பரியத்துக்கே செல்வாக்கு என்று அர்த்தமாகும்.

சம்பந்தர், தான் போட்டியிட்டு வென்று புலிகளின் செல்வாக்கை வெளிப்படுத்தப்போவதாகக் கூறுவது எவ்வளவு தூரம் போலித்தனமானது என்பது இப்போது புரிகிறதல்லவா? உண்மையில், எவ் வழியைப் பயன்படுத்தியாவது தான் பாராளுமன்றம் செல்வதை உறுதிப்படுத்திக்கொள்வதைத் தவிர வேறு அர்த்தபூர்வமான கருத்து இருப்பதாகத் தெரியவில்லை.

எவ்வாறாயினும் சம்பந்தரின் கூற்றானது தாம் தமது சொந்த முகத்துடன் இல்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளது. சம்பந்தன் போன்ற ஒரு சில முன்னணித் தலைவர்கள் புலிகளின் தயவால் தமது தெரிவை உறுதிப்படுத்திக்கொள்ளப் பிராயச்சித்தம் எடுத்தாலும், ஏனைய சாதாரண கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு எதுவுமே நிச்சயமற்ற நிலைதான். அது சம்பந்தர் போன்றவர்களுக்கும் நேரிடாதென்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

அதாவது, இத் தேர்தலில் போட்டியிடும் கூட்டமைப்பு வேட்பாளர்கள், கூட்டமைப்பைச் சார்ந்த கட்சிகளால் மட்டும் முன்னிறுத்தப் பட்டவர்களல்ல. புலிகள் தமது நபர்களையும் அந்தந்த மாவட்டங்களில் கூட்டமைப்பின் பட்டியலில் நிறுத்தியுள்ளார்கள். அத்துடன் எவரும் விருப்பு வாக்குக் கோரக் கூடாதெனவும், சின்னத்துக்கே வாக்களிக்கக் கோர வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், வேட்பாளர்கள் தமது இராஜினமாக் கடிதங்களைச் சமர்ப்பித்துவிட்டே போட்டியிட வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. இந் நிலையில் ஒரு மாவட்டத்தில் சில குறிப்பிட்ட ஆசனங்களே கூட்டமைப்புக்குக் கிடைத்தால் அதில் யார் யார் பாராளுமன்றம் செல்ல வேண்டுமென்பதைப் புலிகளே தீர்மானிப்பர். விருப்பு வாக்குகளின் அடிப்படையில் அது தீர்மானிக்கப்பட மாட்டாது. அப்படியானால் புலிகள் அவ்விடத்திற்கு தமது நபர்களை அனுப்புவதற்கா அல்லது கூட்டமைப்பின் கட்சிகளைச் சார்ந்தவர்களை அனுப்புவதற்கா தீர்மானிப்பர்.

சின்னப் பிள்ளைக்கும் தெரிந்த இதன் விடை அவர்களுக்குத் தெரியாததல்ல. அது தெரிந்ததால் தான் அவர்களின் முகங்களில் இம்முறை களைகட்டவில்லை. தாம் முக்கி முக்கி உழைத்தாலும் அறுவடையை யாரோதான் எடுக்கப்போகிறார்களென்று அறிந்தால் அவர்களின் உழைப்பில் உண்மை இருக்குமா?

இதை இவ் வேட்பாளர்களில் பலர் வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் சிலர் தமது நெருங்கியவர்களிடம் முணுமுணுக்கவே செய்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் கூட்டமைப்பின் பட்டியலில் போட்டியிடும் முக்கியஸ்தர் ஒருவர், 'நீங்கள் யாருக்கென்றாலும் வாக்களியுங்கள் என்னை, எங்கே தெரிவு செய்யவா போகிறார்கள்' என்று கூறினாராம். இது மிகத் தெளிவான அதிருப்தியின் வெளிப்பாடே.கடந்த தேர்தலில் யாழ்ப்பாணத்தில் கூட்டமைப்புப் பட்டியலில் போட்டியிட்டு வென்ற தமிழ்க் காங்கிரஸ் தலைவர் விநாயகமூர்த்தியை இம்முறை வன்னியில் போட்டியிட நிர்ப்பந்தித்துள்ளதானது, கூட்டமைப்பினரின் விருப்பு வெறுப்புகளொன்றுக்கும் இங்கு இடமில்லை என்பதைக் காட்டும் மற்றுமொரு தெளிவான சான்று. ஒரு கட்சியின் தலைவருக்கே தான் விரும்பும் இடத்தில் போட்டியிட முடியாத நிலைமையென்றால் மற்றவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு இங்கு கிடைக்கக் கூடிய மதிப்பைச் சொல்லவா வேண்டும்? விநாயகமூர்த்தி தான் வன்னியில் போட்டியிட முடியாதெனத் தெரிவித்ததற்கு அவருக்குக் கிடைத்த பதில் 'அப்படியானால் அவர் விலகிச் செல்லட்டும்' என்பதுதானாம். வேறு வழியின்றி அழாக்குறையாக வன்னியில் போட்டியிடுகிறார் விநாயகமூர்த்தி. வன்னியில் போட்டியிட்டு இவர் வெல்லவாமுடியும்? வென்றாலும் புலிகளின் தெரிவு இவராகவா இருக்கப்போகிறார்? தான் இல்லை என்று தெரிந்துகொண்டே போட்டியிட வேண்டிய நிலை அவருக்கு. இத்தனைக்கும் விநாயகமூர்த்தி வாய் திறந்தால் 'புலிகள்தான் ஏகப் பிரதிநிதிகள்' என்று சொல்லாமல் வாய்மூடியதில்லை. அவருக்கே இந்தக் கதியென்றால் எவருக்கு எது நிகழுமென்று எப்படிச் சொல்ல முடியும்? எனினும், சிலர் தமது அதிருப்திகளையெல்லாம் மூடிமறைத்துக்கொண்டு பிரசாரம் செய்துதான் ஆகவேண்டிய கட்டாய நிலை. அவர்கள் திரும்பத் திரும்ப ஒன்றைத்தான் சொல்ல முடிகிறது. 'தமிழ்ச் சமூகத்தின் ஒற்றுமையை நாம் இம்முறை வெளிக்காட்ட வேண்டும்' என்ற ஒன்றைத்தான். ஆனால் ஒற்றுமை என்பது என்ன? ஒற்றுமையென்றால் அங்கு ஒவ்வொருவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும். அடிமையும் எஜமானும் ஒற்றுமைப் பட்டுள்ளதாகக் கூற முடியாது. ஏனெனில், அங்கு எஜமான் இட்ட பணிகளைத்தான் அடிமை செய்துகொண்டிருப்பான். அடிமையால் ஒரு துரும்பைத்தன்னும் எடுத்துத் தரும்படி எஜமானைக் கோர முடியாது. நாயும் கோழியும் விளையாடுவதானால் நாய் துரத்த, கோழி ஓடுகின்ற விளையாட்டை மட்டுந்தான் விளையாட முடியும். கோழி துரத்த நாய் ஓடுகின்ற விளையாட்டை விளையாடக் கோழி விரும்பினால், கோழியின் கழுத்து நாயின் வாயில்தான் இருக்கும். அவ்வாறு ஆசைப்பட்டதால்தான் விநாயகமூர்த்தி வன்னியில் போட்டியிடும்படி மாற்றப்பட்டார்.

எனவே, தாமே ஓர் உண்மையான ஒற்றுமையைக் கட்டியமைக்கவில்லை. மாறாக சரணாகதியைத்தான் மேற்கொண்டுள்ளார்கள். மக்களிடம் போய் தமது செயலை 'ஒற்றுமை' என்று எப்படிக் கூற முடியும்?

இன்னொருபுறம், இவர்கள் புலிகளிடம் சரணாகதித் தத்துவத்தை ஒப்புவித்துக் கொண்டாலும், தமக்கிடையேயும் தமக்குள்ளேயும் மோதல் தத்துவத்தையல்லவோ கடைப் பிடிக்கிறார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், தமிழ்க் காங்கிரஸுக்கும் எப்போது நட்பு நிலவியது? எப்போதுமே கீரியும் பாம்புமாகவே இருந்து வந்த இவர்கள் ஏன் அப்போதெல்லாம் ஒற்றுமைப் படவில்லை? தற்போது திரும்பத் தலையெடுத்திருக்கும் தமிழரசுக் கட்சியுடன் தமிழ்க் காங்கிரஸ் என்ன பாலும் தேனும் பரிமாறிக்கொள்பவர்களாகவா இருந்தார்கள்?

ஆரம்பம் முதற்கொண்டே இரு கட்சிகளும் இரு துருவங்களாக ஒருவரை ஒருவர் வீழ்த்துவதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டு நின்றார்களே அப்போதெல்லாம் 'ஒற்றுமை' என்ற இன்றைய போலி வார்த்தை ஞாபகம் வராது போனது ஏனோ? மலையக மக்களின் குடியுரிமையைப் பறித்தபோது தமிழ்க் காங்கிரஸ் அதற்கு ஆதரவாய் நின்றது. தமிழரசுக் கட்சி அதில் முரண்பட்டுப் பிரிந்தது. ஆனால், இன்றும் அதில் செல்வநாயகம் தனக்கு அமைச்சுப் பதவி தரவில்லையென்று கூறியே பிரிந்ததாகத் தமிழ்க் காங்கிரஸ் கூறி வருகிறது. இதே போல் பண்டா – செல்வா ஒப்பந்தத்தைத் தமிழரசுக் கட்சி மேற்கொண்டபோது தமிழ்க் காங்கிரஸ் அதனை எதிர்த்தது. இன்று வரை அப்படி எதிர்த்ததைத் தமிழ்க் காங்கிரஸ் சரியெனவே கூறி வருகிறது. ஆனால், இப்போது அதே தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிடுவது வேடிக்கையாக இல்லையா? இதே போல்தான், கூட்டணித் தலைவர்களான தர்மலிங்கத்தையும் ஆலால சுந்தரத்தையும் கொன்றதை இன்று வரை தவறென ஏற்றுக்கொள்ளாத ரெலோ அமைப்புடன் தமிழர் விடுதலைக் கூட்டணி கூட்டமைத் துள்ளதாகச் சொல்வதும் வேடிக்கையானதே.

தற்போது கூட இக் கூட்டமைப்புக் கட்சிகளுக்கிடையே உண்மையான ஒற்றுமை நிலவுகிறதா? கூட்டணிச் சின்னம் முடக்கப் பட்டுவிட்டதைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி காங்கிரஸ் சின்னத்தை கூட்டமைப்புக்குப் பொருத்திவிடத் தமிழ்க் காங்கிரஸ் எவ்வளவு சுழியோட்டம் நடத்திப் பார்த்தது. ஆனால், அதைப் பலிக்க விடாது செய்துவிட்டனரென்பது வேறு விடயம்.

இதை விட, இவர்கள் ஒவ்வொருவரதும் கட்சிகளுக்குள் நிகழும் குத்து வெட்டுகளுக்குக் குறைச்சலுண்டா? தமிழர் விடுதலைக் கூட்டணியின் சங்கதி ஊரல்ல, உலகே அறியும். அதன் தலைவர் ஆனந்தசங்கரியை அறுத்து வீழ்த்த முனைந்து, சின்னத்தையும் இழந்து இறுதியில் சங்கரியைச் சுயேச்சையாகத் தேர்தலுக்கு நிற்கத் தள்ளிவிட்டுவிட்டார்கள்.

> *ஒற்றுமை என்பது என்ன? ஒற்றுமையென்றால் அங்கு ஒவ்வொருவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும். அடிமையும் எஜமானும் ஒற்றுமைப் பட்டுள்ளதாகக் கூற முடியாது. ஏனெனில், அங்கு எஜமான் இட்ட பணிகளைத்தான் அடிமை செய்துகொண்டிருப்பான்.*

தமிழ்க் காங்கிரஸுக்குள் விநாயக மூர்த்தியைப் புறங்கையால் ஒதுக்கித் தள்ளிவிட்டு, சிறியவர் கஜேந்திரகுமார், தந்தையாரின் பரம்பரைச் சொத்தைப் போல கட்சியையும் தனதாக்கிக் கொண்டுள்ளார். உள் வீட்டுப் புகைச்சலால் மனமுடைந்த குமரகுருபரன் மெதுவாக மனோகணேசனின் மேல்மாகாண மக்கள் முன்னணிக்குத் தாவி, புலிகளின் அங்கீகாரத்துடன் ஐ.தே.க. பட்டியலில் போட்டியிட முயன்றுள்ளார். இடம் கிடைக்க வில்லை. வடக்குக் கிழக்கில் ஐ.தே.க. மற்றும் சிங்களக் கட்சிகள் போட்டியிடக் கூடாதெனத் தெரிவித்துக்கொண்டு, கிழக்கில் அவ்வாறான ஒரு ஐ.தே.க. தமிழ் வேட்பாளர்கள் கொலை செய்யப்பட்டும் உள்ள நிலையில் இதே கூட்டமைப்பைச் சார்ந்த கட்சியுறுப்பினர் ஒருவர் தெற்கில் ஐ.தே.க. பட்டியலில் போட்டியிட அனுமதிக்கப்பட்டிருக்கிறாரென்பதில் என்ன தர்ம நியாயங்கள் தென்படுகின்றதென்றே தெரியவில்லை.

இதேவேளை கடந்த தேர்தலில் வவுனியாவிலிருந்து பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவரான குகனேஸ்வரன் இம்முறை போட்டியிட இடமளிக்காது ஒதுக்கப்பட்டது ஏன் என்ற கேள்விக்கு ரெலோ அமைப்பிடம் நேர்மையான பதில் உள்ளதாகத் தெரியவில்லை.

ஆக, இவர்களின் ஒற்றுமையின் உருவம் இதுதான். தேர்தல் பிரசாரத்தின்போதே ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு பக்கம் முகத்தைத் திருப்பி வைத்துக்கொண்டுதான் நிற்கின்றன. தனிப்பட்ட முறையில் ஒருவருக்கொருவர் எதிர்ப் பிரசாரங்களையும் மேற்கொள்கின்றனர். எவ்வாறாயினும் இவர்களில் எவரொருவர் வெற்றி பெற்றாலும் இறுதித் தெரிவு பற்றிய முடிவுகள் அவர்கள் கையில் இல்லை. தேர்தல் முடியட்டும். "கொக்கு மீனத் திங்குமா, மீனு கொக்கை முழுங்குமா" என்பது அப்போதுதான் தெரியும். ●

# வடக்கு — கிழக்கில் தேர்தல் கலவரம்

ஏப்ரல் 2ஆம் திகதி வாக்களிப்பு நடைபெறும்வரை நாட்டில் தேர்தல் வன்முறைகளுக்குக் குறைவிருக்கப்போவதில்லை. இதுவரை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் குறிப்பிடக் கூடியளவு தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறவில்லையென நிம்மதிப் பெருமூச்சு வெளிப்படும் முன்னமே மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூட்டோடு ஆரம்பித்திருக்கிறது, தேர்தல் வன்முறைகள். சாதாரணமாக ஒரு கட்சியின் சுவரொட்டியை எதிர்க் கட்சிக்காரர் கிழித்தெறிவது, ஆதரவாளர்களுக்கிடையில் சிறிய சிறிய முறுகல்கள், கள்ள வாக்குப் போடுவது போன்ற சிறிய விஷயங்கள் அடியோடு இல்லாமல் போய் வெட்டுக் கொத்து, வாகனங்களுக்குத் தீ மூட்டல், துப்பாக்கிச் சூடு நடத்துதல் இவைதான் எமது இன்றைய நாட்டின் தேர்தல் வன்முறைச் சம்பவங்களாக மாறிப் போயுள்ளன. பெரும்பாலும் யாழ். மாவட்டத்தில் அதிகமான தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்பட்டபோதும் இதுவரை அவ்வாறான செய்தி அங்கிருந்து கிடைக்கவில்லை. இது மனதிற்கு ஆறுதலாக இருந்தாலும் இது புயலுக்கு முந்திய அமைதியா எனச் சிந்திக்க வைக்கிறது. ஏனெனில், தேசியக் கட்சிகளினூடாக எவரையும் போட்டியிட புலிகள் அனுமதிக்காதது, புலிகளால்

தமிழ்க் கூட்டமைப்புக்கு எதிராக இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் குதித்திருக்கும் மாற்றுக் கருத்து கொண்ட தமிழ் வேட்பாளர்கள் மீது எடுக்கப்படக் கூடிய நடவடிக்கையானது மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூட்டோடு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாகவே எண்ண வேண்டியுள்ளது.

நியமிக்கப்பட்டுள்ள கூட்டமைப்புக்கு எதிரான களத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேச்சைக் குழுவும் பிரதான கட்சிகளாக போட்டியிடுகின்றன. மாற்றுக் கருத்துக் கொண்ட கட்சிகள் வட - கிழக்கில் பாரிய தேர்தல் வன்முறைக்கு முகங்கொடுக்க நேரிடுமெனவே கணிப்பிடப்படுகிறது. ஆனாலும், மன்னாரில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தேர்தல் வேலைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட சாதாரண குடிமகனொருவனின் வேன் இரவோடிரவாக தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இது வெறுமனே தேர்தல் வன்முறைகளுக்குள் அடக்க முடியாதது ஆகும். வேன் எரிக்கப்பட்ட இடத்தில் நெடிய வாள் ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. சில சமயம் வேன் சாரதியோ வேறு எவரோ அந்த நேரத்தில் அகப்பட்டிருந்தால் அவர்களும் கொலைக்கு இலக்காகியிருக்கலாம். இது அடிப்படையிலேயே ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவாளர்கள் மீதும் அபிமானிகள் மீதும் அச்சுறுத்தலை விடுத்துள்ளது. மற்றுமொரு சம்பவமாக மட்டக்களப்பில் ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் வேட்பாளராக நியமிக்கப்பட்டிருந்த சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை என்பவர் இனந்தெரியாத நபர்களினால் அச்சுறுத்தப்பட்டதோடு துப்பாக்கிச் சூட்டுக்கும் இலக்காகியிருந்தார். பின்னர் இவர் வைத்தியசாலையில் வைத்தே அதே நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவமானது யாழ்ப்பாணத்தில் தேசியக் கட்சிகளில் இணைந்து எவரும் போட்டியிடக் கூடாது என்கின்ற புலிகளின் அறிவுறுத்தல்களோடு இணைத்துப் பார்க்க வேண்டியதாயிருக்கின்றது. தமிழ்க் கூட்டமைப்புக்கு எதிராக இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் குதித்திருக்கும் மாற்றுக் கருத்து கொண்ட தமிழ் வேட்பாளர்கள் மீது எடுக்கப்படக் கூடிய நடவடிக்கையானது மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூட்டோடு ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளதாகவே எண்ண வேண்டியுள்ளது.

ஆகவே, எதிர்காலத்தில் மேலும் பல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடைபெறக் கூடிய சாத்தியங்கள் அதிகமாகவேயுள்ளன. இதில் கவனிக்கப்பட வேண்டிய மற்றுமொரு பிரதான விடயம், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை இவர் ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளர் என்ற வகையில் இவரது மரணத்திற்கு ஐக்கிய தேசிய முன்னணி என்ன கைமாறு செய்யப்போகிறது? இது குறித்து ஆக்கபூர்வமான எந்தவொரு அறிக்கையோ ஏனைய உறுப்பினர்களுக்கு ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்களையோ இது வரை கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை. ஏதேனும் உரத்துக் குரல் கொடுத்தால் ஒரு வேளை புலிகளின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டி வரலாம். புலிகளுக்கு மனம் கோணுகின்ற படி நடந்தால்




மன்னாரில் எரியூட்டப்பட்ட வான்

சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்போம் என்ற ஐக்கிய தேசிய முன்னணியின் பிரசாரம் பிசுபிசுத்துப் போய்விடும் என அஞ்சுகின்றார்களா? அப்பாவியின் உயிர் அநியாயமாகக் கொல்லப்படுகின்றபோது அதைக் கண்டிக்கத் திராணியில்லாத எவரும் தீர்க்கமான முடிவுகளுக்கு வரப்போவதில்லை என்கின்ற உண்மையை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இப்படியானவர்கள் இந்த ஜென்மத்தில் சாதாரண ஒரு குடிமகனின் சுதந்திரமான வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கப்போவதில்லை. சமாதானத்தைக் கொண்டு வரப்போவதாக செய்கின்ற பிரசாரங்கள் எல்லாம் வெறும் பித்தலாட்டம். சரி என்பதை சரி என்றும் பிழை என்பதை பிழை என்றும் நிமிர்ந்து தனது கருத்தைச் சொல்ல முடியாத எவரும் இன்னுமொரு சமூகத்தின் விடுதலை உணர்வை மதித்துச் செயலாற்றப் போவதில்லை. பச்சை சுயநலத்திற்காகவே சமாதானம் என்றும், ஒளிமயமான வாழ்க்கை என்றும் பிரசாரப்படுத்துகின்றனர். இன்னுமொரு விடயம், இலங்கை அரச படைகளின் கட்டுப்பாடற்ற பகுதிகளில் தேர்தல் வாக்கெடுப்புக்கள் நடத்தப்பட வேண்டுமெனப் புலிகள் வலியுறுத்தி வருகின்றனர். இந்தக் கருத்திற்கு தமிழ்க் கூட்டமைப்பும் வலுச் சேர்த்து வருகின்றது. இங்கே கவனிக்கப்பட வேண்டிய விடயம் கட்டுப்பாட்டுக்கு அப்பாலுள்ள மக்கள் இலங்கைப் பிரஜைகள் என்பதிலும் அவர்களுக்கு இலங்கை அரசாங்கத்தின் எந்தவொரு நடவடிக்கையிலும் தலையிட உரிமை இருக்கிறது என்பதிலும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால் யுத்த அனர்த்தங்களினால் இலங்கை அரசின் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நேரடித் தொடர்பற்றவர்களாக இருந்த காலப்பகுதியில் எவரும் அதற்காகக் குரல் கொடுக்கவில்லை. தவிரவும் புலிகள் தவிர்ந்த ஏனைய கட்சிகளோ, அரச படையினரோ தமது கருத்துக்கள், தமது செயற்பாடுகளை அந்த மக்களிடம் வெளிப்படுத்தாத சந்தர்ப்பத்தில் வாக்களிக்க மட்டும் அவர்களின் தேவையை வலியுறுத்துவது நியாயங்களைக் கடந்ததாகும். மேலும் நியாயமான தேர்தல் நடைபெறும் என்பதை எவரும் உறுதிசெய்ய முடியாது. ஏனெனில் புலிகளுக்கும், ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட போர் நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி ஆயுதங்களோடு அரச படையினர் புலிகளின் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் செல்ல முடியாது. அதே போல புலிகளும் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஆயுதங்களுடன் வர முடியாது. இரு தரப்புக்குமிடையிலான சூனியப் பிரதேசத்திற்குள் எவரது பிரசன்னமும் இருக்க முடியாது. இரண்டு வருடங்களாக இதுதான் ஒப்பந்தத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. நிலைமை இப்படியிருக்க வாக்குப் பெட்டிகளை மட்டும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் படைகளின் பாதுகாப்பின்றி எப்படி அனுப்ப முடியும்? அப்படித்தான் அனுப்பப்பட்டாலும் சர்வதேச சமூகப் பிரதிநிதிகளோ, செஞ்சிலுவைச் சங்கத்தினரோ கூடப் போக முடியாத கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு போன்ற இடங்களில் எவ்வாறு தேர்தல் நடத்துவது? இவ்வாறான கேள்விகள் எல்லாம் ஒன்றை ஒன்று முண்டிக்கொண்டு நியாயம் கேட்டு நிற்கையில், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனவும், அங்குள்ள வாக்காளர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்து வாக்களிக்க அனுமதி அளிக்கப்பட வேண்டுமெனவும், இவை நடைபெறாதவிடத்தில் மிக மோசமான விளைவுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்குமெனவும், செய்திகள் பரப்பப்படுவதானது எவ்வகையில் நியாயம் உள்ளதென்பதை சாதாரண ஒருவரும் புரிந்துகொள்ள முடியும். ஆக, இவ்வாறான முட்டுக்கட்டைகள் நிறைந்த

அலசுவது - மதியூக

வட - கிழக்கு தேர்தல் களமானது மேலும் பல வன்முறைகளுக்கு வழி சமைக்கப்போகிறது. ஆகவே, வேன் எரிக்கப்பட்டதும், ஐக்கிய தேசிய முன்னணியின் மட்டக்களப்பு வேட்பாளர் கொல்லப்பட்டதும் எதிர்காலத்தில் வெடிக்கப்போகின்ற தேர்தல் கலவரத்தின் ஆரம்பப் புள்ளிகளாகவே தெரிகின்றன.

# அதிரடி அய்யாத்துரை



செத்தவங்களுக்கும் வாக்களிக்கிற உரிமை எங்கட தேர்தல்களிலதான் கிடைக்குதுங்கோ. கிண்டலுக்குச் சொல்லேல்லை. நிசம்! ரெண்டொரு நாளுக்கு முந்தின யாழ்ப்பாணப் பேப்பரொண்டில தேர்தல் விளம்பர மொண்டப் பாத்து தலையில அடிச்சுக்கொண்ட ஒருத்தர் சொன்னதை நீங்களும் கேளுங்கோ. மாவீரர் கல்லறைகளைப் படமாப் போட்டு மாணவர் பேரவைக்காறர் விளம்பரம் போட்டிருந்தாராம், உங்கள் நினைவாகத் தாங்கள் வாக்குக் கேக்கினமெண்டு. 'உந்தப் பாராளுமன்றப் பாதையால பலனில்லையெண்டு சொல்லிப் போர்க்களத்துக்கு அனுப்பி அவங்களச் சாக வைச்சுப்போட்டு, அவங்கட நினைவால அதே பாராளுமன்றத்துக்குப் போக இப்ப முளைச்சவர் வாக்குக் கேக்கிறதெண்டால், அப்ப செத்தவாங்களெல்லாம் முட்டாள்களே' எண்டு கேட்டாரே ஒரு கேள்வி! ''மாவீரர் குடும்பத்தவர் யாரும் கேள்விப்பட்டால் மனமுடைஞ்சு போவாங்கள், பேசாமல் இரும். உமக்கென்ன வில்லங்கம்'' எண்டன். தானும் மாவீரர் குடும்பந்தா னெண்டார். இதுக்கு மிஞ்சி என்ன பேச? செத்தவங்களா எழும்பி வந்து பேசினாத்தான் உண்டு!

கூட்டமைப்பாற்ற தேர்தல் விஞ்ஞாபனத்தைப் பாத்தியளோ? பிரிஞ்சு செல்லுறதுக்குத் திரும்பவும் வாக்குக் கேக்கினமாம். முன்னர் 77இலை கேட்டெடுத்த மக்களாணையைக் காத்திலை விட்டிட்டு, பிறகு இதுவரை காலமும் அது தாங்கள் அப்ப கேட்டது, இப்ப நிலமை மாறிவிட்டுது, எண்டெல்லாம் மாறி மாறிப் பேசி வந்தவை இப்ப, பழைய ரெக்கோடடைத் திரும்பவும் போடினம். என்ன கேட்டுக்கு வழி தேடினமோ? இருந்துதான் பாக்க வேணும்,

இலெக்ஷன் கொமிஷனர் ஒரு அறிவிப்புக் குடுத்திருந்தார். அது ஆற்ற காதிலயும் விழுந்ததாத் தெரியேல்லை. தேர்தலில நிக்கிறவ தங்கட தங்கட சொத்து விபரங்களை வெளிப்படுத்த வேணுமெண்டவர். எக்கணம் எங்கட சில பேர் குடுக்க வேண்டி வந்தா ஏழெட்டு பென்ஸ் கார்களையெல்லோ விரிசையா நிறுத்த வேண்டியிருக்கும். அதுசரி, மறுவளத்தால! ரெண்டெழுத்தார் சொத்து விபரம் கேட்டா என்ன செய்யிறதெண்டும் சில வேட்பாளர்களுக்கு நெஞ்சிடியாம். தமிழ் வீரம் முழங்கிறவை, தங்கட வங்கிக் கணக்குகளையெல்லாம் தமிழீழ வைப்பகத்திலயெல்லோ வைப்புச் செய்திருக்க வேணும்? தாங்கள் தாங்கள் தனியார் வங்கிகளில பொதுக்கி வைச்சுக்கொண்டு வீராவேசமாப் பேசலாமோண்டு கேக்கிறார், மிஸ்டர் பொதுசனம். சரிதானேயுங்கோ?

யாழ் தேர்தல் களத்தில நிக்கிற கூட்டுக்காறருக்கு அவ்வளவா முகஞ்சரியில்லையாம். ரெண்டெழுத்தார் தங்கட விருப்பமானவைக்குத்தான் முன்னுரிமை குடுப்பினமெண்டு புகைஞ்சுகொண்டு திரியினமாம். சிவஞானத்தார் பொறுக்கேலாம வாய்விட்டுச் சொல்லித் திரியிறார். 'தன்னை தெரிவுசெய்ய மாட்டாங்கள். இதெல்லாம் வெறும் பம்மாத்துத்தானெண்டு' மனிசன் தெரிஞ்சவயளிட்டக் குசுகுசுக்க அதை அறிஞ்சவையள் உழறிப்போட்டினமாம் பாருங்கோ....

என்னடா இலக்ஷன் எண்டு அறிவிச்சு எத்தினை நாளாச்சுது? இன்னும் உப்புச்சப்பா ஒரு சங்கதியையும் காணேயில்லையெண்டு பாத்தன். அவை விடுவினமோ? மன்னாரில வீணைக் காறருக்கு ஓடிச்சினம் எண்டதுக்காக வேனை எரிச்சுப் போட்டினமாம். மர்ம நபர்கள் எண்டதுக்காக நீளமான வாளையும் போட்டிட்டுத்தான் போயிருக்கினம். வெட்டுக்காரன் யாரெண்டத அறிஞ்சிருப்பியள்...இது மட்டுமே?..... மட்டக்களப்பில யு.என்.பி.லிஸ்ட்டில போட்டியிடுற தமிழ் வேட்பாளரை வீட்டுக்குப் போய்ச் சுட்டவையள். மனிசன் கையில காயத்தோட தப்பி, தான் உதுக்கெல்லாம் பயப்பட மாட்டன், நிக்கத்தான் போறன் எண்டிட்டு ஆஸ்பத்திரியில இருக்கேக்க இனந்தெரியாதவை பூந்து சுட்டுப் போட்டினமாம். சாகமுதல் 'இவையள் தான் வீட்டையும் வந்து சுட்டவயள் முந்தி ஒருக்கா கடத்திக் கொண்டும் போனவையள்' எண்டும் சொல்லிப்போட்டுத்தான் செத்தவராம். ஜனநாயகம் வாளோடையும் துவக் கோடையும் வெளிக்கிட்டிட்டுது... எதில போய் முடியப் போகுதோ...

யாழ் கெம்பஸ் பெடியளுக்குள்ள அவ்வளவாச் சரியில்லையாம். இலக்ஷன் வேலையளுக்கு வாறவைக்கு காசு தாறமெண்டும் சொல்லிப் பாத்திட்டினமாம். யாரும் எடுபடுற மாதிரித் தெரியாததால பெடியளுக்குள்ள குழப்பமான நிலமைதான் நீடிக்குதாம். போன தடவை செய்த தவறை இப்பவும் செய்வினம் எண்டு நினைக்க ஏலாதுதானே....நரி வேசம் கலைஞ்சிட்டுது டும்.....டும்.....டும்.....

போன கிழமை அமெரிக்கா வெளியிட்ட ஒரு அறிக்கையில ரெண்டெழுத்தாரை ஒரு பிடி பிடிச்சிருக்கினம். பல குற்றச் சாட்டுக்களையும் சுமத்தியிருக்கினம். எங்கட தேசியக் கொள்கை என்னவெண்டு தெரியாமல் அப்பிடி அறிக்கை விட்டிருக்கினமாக்கும். சர்வதேசத்தின் கவனத்தை எங்கட பக்கம் திருப்பியிருக்கினம் எண்டு ரெண்டெழுத்தார் அடிக்கடி சொல்லிறவையல்லோ. அதுதானாக்கும்.... அந்த அறிக்கையில மட்டக்களப்பில முரசை எரிச்சதையும் சுட்டிக் காட்டியிருக்கினம். முரசும் சர்வதேசத்தின்ர கவனத்தைத் திருப்பியிருக்குப் போல...

# கொழும்பில் கட்டுப்பணம் இழக்கும் மகேஸ்வரன் ?

நடைபெறவுள்ள 13ஆவது பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளராக ஐ.தே.க. சார்பில் கொழும்பில் போட்டியிடும் முன்னாள் இந்து சமய விவகார அமைச்சர் தி. மகேஸ்வரன் கட்டுப்பணமிழந்து மண் கவ்வப்போவது உறுதி. அத்துடன் கொழும்புவாழ் தமிழர்கள், இந்துக்கள், இந்துக் குருமார்கள் நிச்சயமாக மகேஸ்வரனை நிராகரித்தே வாக்களிப்பார்கள்.

இந்த மகேஸ்வரன் கடந்த இரண்டு பாராளுமன்றத் தேர்தல்களிலும் யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவாகியதாலும், அடுத்த பாராளுமன்றத் தேர்தலிலும் தான் தெரிவாகலாம் என்றும் வடக்கு - கிழக்கில் தனக்கு உள்ள நிர்ப்பந்தங்களாலும் வடக்கிற்கு மாத்திரம் இந்து சமய விவகார அமைச்சின் நிதியினையும் வளங்களையும் முழுமையாகப் பயன்படுத்தினார். கொழும்பையும் மலையகத்தையும் நாட்டின் ஏனைய பகுதிகளையும் முற்றாகப் புறக்கணித்துச் செயற்பட்டுவந்த மகேஸ்வரன், பிரதமருக்கும், உலக நாடுகளுக்கும் வேடிக்கை காட்ட நடாத்திய உலக இந்து மாநாட்டினாலும் அதன் தொடர் கூத்துக்களாலும் மாத்திரம் கொழும்பில் வாக்குப் பெற முடியாது என்பதை நிச்சயம் உணர்வார்.

கொழும்பில் நடைபெறும் ஆலய உற்சவங்கள், விழாக்கள், இந்து சமய நிகழ்வுகளில் கூடக் கலந்துகொள்ளாது, போலி வாக்குறுதிகள் வழங்கி கொழும்பு வாழ் இந்துக்களை, தமிழர்களை உதாசீனப்படுத்திய மகேஸ்வரன் கொழும்பிலேயே போட்டியிட வேண்டி வந்துள்ளது அவர் துரதிர்ஷ்டமே. இவருக்கு மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள். வெள்ளவத்தையில் உள்ள 174 தொடர்மாடி வீட்டு வாக்காளர்களில் 90 சதவீதமான வாக்காளர்கள் நல்ல அரசியல் ஞானம் உள்ளவர்கள். அவர்களை மாத்திரம் நம்பிக் களமிறங்கும் மகேஸ்வரனின் முடிவு பரிதாபத்திற்குரியது.

இனத்தின் ஒற்றுமையைக் குலைக்கக் கூடாது என்று வேதம் ஓதி, வடக்கின் தேர்தல் களத்திலிருந்து ஒதுங்கிய மகேஸ்வரன், இதே நோக்கத்தினைக் கருத்திற் கொண்டு கொழும்பில் தமிழர்களின் வாக்குகளைச் சிதறடிக்கக் கூடாது. எனவே, மற்றத் தமிழர்களுக்கு இடம் விட்டு கொழும்புத் தேர்தல் களத்திலிருந்து அவர் ஒதுங்குவாரா?

- இங்ஙனம்,

சிவஸ்ரீ. பால.
ரவிசங்கர சிவாச்சாரியார்
(J.P)
ஐயப்ப கூட்டமைப்பின்
செயலாளர்

# நான்கு முனைப் போட்டி நடக்கும் மலையகத்தில் தேர்தல் முடிவு எப்படியிருக்கும்?

தற்போது நாட்டில் தேர்தல் காய்ச்சல் வேகமாகப் பரவி அரசியல் தலைவர்களை ஆட்டிப் படைத்துவரும் இவ்வேளையில் மலையகத்திலும் இதன் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. மலையகத் தலைவர்களிடையே ஒற்றுமையின்மை, போட்டி மற்றும் உட்பூசல் காரணமாக இம்முறை நான்கு முனைப் போட்டி ஏற்பட்டுள்ளது. காலம் காலமாக பல்வேறு பிரச்சினைகளினால் போதியளவு வருமானமின்றி வானத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் மலையக மக்களுக்குச் சரியான வழி காட்டி அவர்கள் வாழ்வில் ஒளியேற்ற வேண்டிய அரசியல் தலைவர்கள் தங்களின் சுய இலாபத்துக்காக மக்களைப் பகடைக் காய்களாக உபயோகிக்கத் தயாராகிவிட்டார்கள். தற்போதைய தேர்தல் சம்பந்தமாக சில தோட்டத் தொழிலாளர்கள், இளைஞர்கள் மற்றும் மலையகத்தில் பணிபுரியும் ஆசிரியர்களைச் சந்தித்துப் பேசியபோது; அவர்கள் அனைவரும் ஒரே கருத்தையே சொன்னார்கள்.


"தமிழர்கள் ஒற்றுமையாக ஒன்றாகச் சேராத வரையில் என்றுமே நமக்கு விமோசனம் கிடைக்கப் போவதில்லை. அரசியல் சுய இலாபத்துக்காக ஒவ்வொரு தேர்தலிலும் இங்குள்ள தலைவர்கள் ஒவ்வொரு முகமூடியை அணிந்துகொண்டு எங்களிடம் வாக்குக்காக வருகிறார்கள். ஏழு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் சக்தி எங்களிடம் இருந்தும் இவர்களின் போட்டாபோட்டியினால் இரண்டு பேர் தெரிவாவது கூட இம்முறை கஷ்டமாக இருக்கப் போகின்றது. மேலும், இவர்களை நாங்கள் ஒவ்வொரு முறையும் நம்பிக்கையுடன்தான் பாராளுமன்றத்துக்கு அனுப்புகின்றோம். ஆனால், எங்களுக்காக இவர்கள் எதையுமே செய்வதாகத் தெரியவில்லை. நாங்கள் இன்னமும் கீழ்மட்டத்தில்தான் இருக்கிறோம்..."

மேலும், ஏற்கனவே பலமுறை பாராளுமன்றம் சென்ற சில வயதான பழைய முகங்களைத் தவிர்த்து இளைஞர்களுக்கு வாய்ப்பளித்திருக்கலாம் என்றும் பலர் கருத்துத் தெரிவித்தார்கள். எப்படியாயினும் இம்முறை மலையகத்தில் தேர்தல் சில அதிர்ச்சியான முடிவுகளைத் தரப்போகிறதென்று மக்கள் பரபரப்பாகப் பேசிக் கொள்கிறார்கள். கடந்தமுறை மலையகத்தில் இரு துருவங்களாக இருந்த இ.தொ.கா. மற்றும் மலையக மக்கள் முன்னணி இரண்டும் ஒன்றிணைந்து களத்தில் குதித்தமையினால் ஐம்பதினாயிரத்துக்கு மேலான வாக்குகளைப் பெற்று மூவர் பாராளுமன்றத்துக்குத் தெரிவானார்கள். இம்முறை ம.ம.மு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து தேர்தலில் போட்டியிடுவதாக முன்னர் அறிவித்தது. தற்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளது. எப்போதுமே மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்கள் ஆரம்பத்தில் இந்த அரசியல்வாதிகளை ஏசினாலும் கடைசி நேரத்தில் மனம் மாறி சில முடிவுகளை எடுப்பார்கள். ஆனால், இம்முறை அவர்கள் யார் வந்தாலும் யாராலும் தங்களின் பிரச்சினைகள் தீரப் போவதில்லையென்பதை நன்கு உணர்ந்துள்ளமையினால் இந்தத் தேர்தலில் பரபரப்பான தீர்ப்பினை வழங்கப் போகிறார்கள். அது என்ன தீர்ப்பு என்பது பரம இரகசியமாகும்.

- பாலா. சங்குப்பிள்ளை
அட்டன்.


## 45 வருட காலமாக நிரூபித்துக்கொண்டிருக்கும் மலையாள மாந்திரீகம்





### ஒரே அட்சரக்கூட்டின் மகிமை

காரியம் கைகூட, சூனியமும் தேவதை குற்றமும் அகல, கலகம் தீர, கடன் தொல்லை அகல, வறுமை நிவர்த்தி பெற, வாத சேட்டை, மோகினி சேட்டை விலக, மாந்திரீக சித்தி உண்டாக, சர்வ வசியம் பெற, கரும வினைகள் அகல, நோய் தீர, திரிபுர ஈஸ்வரி சித்திபெற, ஓடிப்போனவர் தேடி வர, தடைப்பட்ட திருமணம் நடைபெற, கூந்தல் அழகிகளாகத் திகழ, காதல் கைகூட, சித்தப் பிரமை, மனப்பயம், தூக்கமின்மை அகல, வெளிநாட்டுப் பிரயாணம் சரிவர, குழந்தைப் பேறு கிட்ட, எதிரிகள் ஒழிய, தொழில் விருத்தியடைய.......

இன்னும் எத்தனையோ பிரமிப்பூட்டும் நன்மைகளை ஒரே ஒரு அட்சரக்கூட்டை அணிவதன் மூலம் அடையலாம். திட்டவட்டமான மாந்திரீக சக்தி என்பதால் வாங்கும் பணத்திற்கு ரசீதையும் காரியங்கள் நடைபெறும் தினத்தையும் வழங்குவதில் நாம் மட்டுமே முன்னணி வகிக்கின்றோம்.

இதோ எம்மிடம் நன்மை பெற்றவர்களின் சான்றுக் கடிதங்கள்

### வலது கை கொடுத்த தெய்வமே!

வாழ்வில் திருப்புமுனைக்கு கை இழந்த எனக்கு செயற்கை கை உதவி தந்த தெய்வமே. எல்லோரும் தமக்கென்று வாழ்வார்கள். தாங்களோ மாறுபட்ட தெய்வீகக் கடல். இக் கடிதத்தை என்னை எழுதத் தூண்டிய காரணம் நன்மை பெற்றவர்களின் பெயர் வரிசையில் என் பெயர் இடம்பெறவில்லை என்ற ஆதங்கம். எனது சிரேஷ்ட கல்வியறிவை நன்கு உணர்ந்து எனது வலது கை பொருத்தியதும் அல்லாது எனக்கு ஒரு தட்டச்சையும் கொடுத்தீர்கள். என் உள் மனப் பூரிப்பால் தங்கள் நல்லெண்ணத்தை எதிர்நோக்கும் முகமாக மத சார்பற்ற, பக்குவம் அடைந்த தங்களுக்கு பக்குவதிலகம் என்ற பட்டமும் கொடுத்திருக்கிறார்கள். தங்கள் அறிவுரைக்கு அமையவே நான் என் எளிய வாழ்வுக்குத் தக்கபடி தட்டெழுத்துப் பயிற்சியை கணினி மூலமாகப் பயிற்சி எடுத்தேன். இன்று இக் கடிதத்தைக் கண்டால் சந்தோஷம் அடைவீர்கள் என்பதே எனது உள் மன நோக்கம். இந்த ஏழையின் கடிதத்தைப் பத்திரிகையில் போடுவீர்களா? அல்லது இல்லையா என்பதே எனது ஆழ்ந்த கருத்து. மானிட தெய்வமே! மக்கள் சேவையே மகேசன் சேவையாக இன்னமும் அன்னை சிவகாமி அருள் ஞானம் வழங்கிக்கொண்டிருக்க அனுதினமும் நான் என் கிராம கோவிலில் உங்களுக்காகப் பூஜை செய்து வருகின்றேன்.

என். ஜெயராம்
கந்தப்பளை.

உங்கள் கடிதத்திற்கு எனது பரிபூரண ஆசீர்வாதங்கள்
- பேராசிரியர் டாக்டர் பீ.கே. சாமி

- சொன்ன ஜாதகம் சொன்னபடி நடந்துவிட்டது.
- கைரேகை என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டீர்கள்.
- நினைத்தபடி என் கூந்தல் வளர்ந்துவிட்டது.
- உங்கள் பரிகாரத்தால் நான் வெளிநாடு சென்றுவிட்டேன்.

இப்படி எத்தனை எத்தனையோ சான்றுக் கடிதங்கள். நேரில் வந்து தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளுங்கள்.

உலக மாந்திரீக சக்கரவர்த்தி 'பக்குவதிலகம்'
பேராசிரியர் டாக்டர். பீ.கே.சாமி (J.D.G.A.N) J.P.

ஸ்ரீ துர்க்காதேவி மாந்திரீக உச்சாடன பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு 13.
தொ.பே: 011-2470615, 011-2342463
Fax : 0094-112344831 - E-mail: drpksamy@sltnet.lk
No. 3, Daily Fair Complex, Nuwara - Eliya.
Tel : 052-2222508, 052-2235097.


## கவனத்திற்கு...

"தினமுரசு" தேன்கிண்ணம் பகுதியில் இளம் கவிஞர்களை ஊக்குவிக்கும் விதமாக கவிதைகளின் தரம் கண்டு பிரசுரிக்கப்படுகிறது. ஆனால், சிலர் மூத்த கவிஞர்களின் கவிதையை எழுதி தங்களுடைய பெயரில் அனுப்பி வைக்கிறார்கள். ஆகவே, வளரும் கவிஞர்கள் இனிமேலும் இதுபோன்ற தவறுகளைச் செய்யாது தங்களின் சுய கற்பனையில் உருவான கவிதைகளை தேன்கிண்ணம் பகுதிக்கு அனுப்பி வைக்கவும்.

- ஆசிரியர்.

# மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரியில் ஊழல் மோசடிகள்!

2004ஆம் ஆண்டுக்கான கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்றது. இந்த நேர்முகப் பரீட்சைக்கு சகல பாடநெறிகளுக்கும் விண்ணப்பித்த மாணவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதம் கிடைத்துள்ளது. இதன் பிரகாரம் மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரிக்கு உரிய நேரத்திற்குச் சமூகமளித்தேன். எனது கல்வித் தராதரங்களையும் தகைமைகளையும் நேர்முகப் பரீட்சை இணைப்பாளர் பரீட்சித்தார். இதன்போது நேர்முகப் பரீட்சைக் குழுவினரால் ஒவ்வொரு பாடநெறிக்குமான வெட்டுப்புள்ளி வெளியிடப்பட்டது. எனது பாடநெறியான ஆரம்பக் கல்விக்கு 1.05 வெட்டுப் புள்ளி ஆகும். எனது புள்ளியானது வெட்டுபுள்ளியை விடக் கூடுதலாகும். மேற்படி பாடநெறிக்கு வெட்டுப் புள்ளியை விடக் குறைவான புள்ளியும், குறைந்த பெறுபேறும் உடைய மாணவர்களை ஏனைய மாவட்டத்தில் இருந்து தேர்ந்தெடுத்துள்ளனர். இந்த மாவட்டத்தில் இருந்து 10க்குக் குறைவான மாணவர்களைத் தேர்ந்து எடுத்ததோடு மட்டுமல்லாமல், குறிப்பாக யாழ். மாவட்டத்தில் இருந்து மட்டும் 150 மாணவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளார் நேர்முகப் பரீட்சை இணைப்பாளர். மட்டக்களப்பு மாணவர்கள் இழிவான மாணவர்களா? அல்லது தராதரம் குறைந்த மாணவர்களா? தராதரம் குறைந்துள்ள மாணவர்களை மட்டக்களப்பு தேசியக் கல்வியியல் கல்லூரியில் கூடுதலாகச் சேர்த்துக்கொண்டது எதற்காக? யாழ்ப்பாணத்தில் தேசியக் கல்வியியல் கல்லூரி இல்லையா? இவ்வாறான அநீதியான சம்பவத்தைத் தட்டிக் கேட்பதற்கு மட்டக்களப்பில் எங்களுக்காக யார் உள்ளார்? என்னுடைய பெறுபேறு A,B,C, ஆகும். அத்தோடு B,B,B, B,B,C, A,B,C, ஆகிய பெறுபேறு எடுத்த சக மாவட்ட மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டு யாழ். மாவட்ட மாணவர்கள் நியமிப்புக்குக் காரணம் எந்த சக்தி? கடந்த வருடத்தை விட இந்த வருடம் இக் கல்லூரியில் நடந்த முறைகேடான ஆட்சேர்ப்புக் குறித்து ஆராய்ந்து உரிய நீதியை மட்டக்களப்பு ஏழை மாணவர்களுக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தேடித் தருவாரா?

நன்றி,
பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பாக,
R- நிலுக்ஷன்.

# சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி
- ஆசிரியர்


## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளிநாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

S.Mani

142-2/4, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக

Tel: 074-519754


# மாளிகாவத்தையில் மகா சிவராத்திரி விழா

மாளிகாவத்தையில் சித்திவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற சிவராத்திரி விழாவும் பூஜையும் சிறுவர்களின் நாடக நாட்டிய நிகழ்ச்சியும் வெகு சிறப்பாக நடைபெற்றன இதில் பங்குபற்றிய சிறுமிகள், சிறுவர்களில் ஒரு தொகுதியினரையே இங்கு காண்கிறீர்கள்.



# இன்னொருவர் பார்வையில்

**இலங்கையில் மனித உரிமைகள் பேணப்படும் நிலை தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கடந்த 25.02.2004 அன்று வெளியிட்டுள்ள அறிக்கையிலிருந்து முக்கியமான சில பகுதிகள் இங்கு மொழிமாற்றம் செய்து தரப்படுகின்றது.**

பல்வேறு கட்சிகள் செயற்படும் குடியரசு ஆட்சிமுறையைக் கொண்ட ஒரு நாடாக இலங்கை காணப்படுகிறது. 1999இல் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி ஆறு ஆண்டு பதவிக் காலத்தைக் கொண்டவராக இருக்கின்றார். 225 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்திற்கு 2001ஆம் ஆண்டின் இறுதியில் ஆறு ஆண்டு காலப் பதவிக்கு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். இந்த நாட்டின் வடக்கு – கிழக்கு மாகாணத்தில் தனிநாடு ஒன்றை அமைக்கப் போவதாகக் கூறும் பயங்கரவாத அமைப்பான புலிகளின் செயற்பாடுகளுக்கு எதிராக 1983 முதல் 2001 வரை இலங்கை அரசாங்கம் போராடி வருகின்றது. 2001 டிசம்பரில் அரசாங்கமும் புலிகளும் ஒரு தலைப்பட்சமாகப் பிரகடனம் செய்த போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து பெப்ரவரி 2002இல் அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கையெழுத்தாகியது. இதனைத் தொடர்ந்து நோர்வே அரசின் அனுசரணையுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின. ஆறு சுற்றுப் பேச்சுக்களையடுத்துப் புலிகள் பேச்சுவார்த்தை மேசையிலிருந்து ஏப்ரல் 2003இல் விலகிக் கொண்டனர். எனினும், இரு தரப்பும் போர் நிறுத்தத்தைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்கின்றன. சமாதான முயற்சிகளின் காரணமாக வீதித் தடைகளும் சோதனைச் சாவடிகளும் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன. உள்ளூரில் இடம்பெயர்ந்து வாழ்ந்தவர்களில் சுமார் மூன்று இலட்சம் பேர் வரையில் தத்தம் சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர். ஆயுதப் படையினர் புரிந்த அதிகாரத் துஷ்பிரயோகங்கள் குறித்த விசாரணைகள் அதிகாரிகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொதுவாக அரசாங்கம் குடிமக்களின் மனித உரிமைகளைக் கௌரவிப்பதில் அக்கறை காட்டி வருகின்றது. எனினும் சில இடங்களில் தீவிரமான பிரச்சினைகள் காணப்படுகின்றன. அரசியல் நோக்கமுடைய படுகொலைகள் அல்லது காணாமற் போதல்கள் தொடர்பான சம்பவங்களில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டமை பற்றிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. எனினும் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் படையினரும் பொலிஸாரும் ஈடுபட்டமைக்கான தகவல்கள் உள்ளன. சிறைச்சாலைகளின் நிலைமைகள் படு மோசமாக இருக்கின்றன. கண்மூடித்தனமான கைதுகள் குறித்த புகார்களும் உண்டு. இருந்தும் 2002ஆம் ஆண்டில் அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த 750க்கும் மேற்பட்டவர்களை விடுவித்துள்ளது. இன்னமும் சுமார் 65 பேர் வரையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவசரகாலநிலையின் கீழ் பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் வகை தொகையற்ற கைதுகளுக்கும் கால வரையறையற்ற தடுத்து வைப்புகளுக்கும் இடமிருந்தது. எனினும் பாதுகாப்பு படையினரால் தமிழர்கள் துன்புறுத்தப்படுவதான புகார்கள் அண்மைக் காலத்தில் வெகுவாகக் குறைந்துள்ளன. மத சிறுபான்மையினர்களுக்கு எதிராக வன்முறைகளும் நிறுவனமயமாக்கப்பட்ட இனப் பாகுபாடுகளும் தொடர்ந்தும் பிரச்சினையாகவே இருக்கின்றன.

புலிகள் மனித உரிமைகளைக் கடுமையான முறையில் மீறும் வகையில் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றனர். காரணமற்ற கைதுகள், சித்திரவதைக்கு உள்ளாக்குதல், துன்புறுத்தல்கள், காணாமற் போதல்கள், கப்பம் பெறுதல் மற்றும் தடுத்து வைக்கப்படுதல்கள் போன்ற பல சம்பவங்களோடு புலிகளுக்கு நேரடியாகத் தொடர்பு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்தும் அச்சுறுத்துவதன் ஊடாக யாழ்ப்பாணத்திலும் கிழக்கிலும் உள்ளூராட்சி அமைப்புகளுக்கு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதைப் புலிகள் தடுத்து வருகின்றனர். மாற்று அரசியல் கட்சிகளும், அரசாங்க நிறுவனங்களும் வடக்கு – கிழக்கில் சுதந்திரமாக செயற்படுவதற்குப் புலிகள் தொடர்ந்தும் முட்டுக்கட்டைகளைப் போட்டு வருகின்றனர். கடந்த வருடத்தில் மட்டும் மாற்றுத் தமிழ் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் புலிகளுக்கு எதிரானவர்களான சுமார் 36 பேர் படுகொலைக்கு இலக்காகிய சம்பவங்களுடன் புலிகளின் தொடர்புக்கு போதிய சாட்சியங்கள் உண்டு. புலி உறுப்பினர்களால் முஸ்லிம்கள் அச்சுறுத்தல்களுக்கு இலக்காகும் சம்பவங்கள் தொடர்கின்றன. கிழக்கில் புலி உறுப்பினர்களால் முஸ்லிம்கள் படுகொலைக்கு இலக்காகும் சம்பவங்கள் தொடர்கின்றன. வடக்கு – கிழக்கு மாகாணத்தின் பெரும்பகுதியில் புலிகளின் ஆளுமை காணப்படுகிறது. இப் பகுதிகளில் பத்திரிகையாளர்களின் சுதந்திர செயற்பாடுகள் புலிகளால் கட்டுப்படுத்தப்படுகிறது. குடிமக்களின் சுதந்திரமான நடமாட்டமும் புலிகளால் கட்டுப்படுத்தப்படுகிறது. புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதை அனுமதிப்பதாக இல்லை. நீதியான விசாரணைகள் இடம்பெற அனுமதிப்பதில்லை. தனிநபர்களின் அந்தரங்க விடயங்களில் தலையிடுவது, சிறுவர்களைப் பயன்படுத்துவது, இன மற்றும் மத ரீதியான சிறுபான்மையினர் பாகுபாடுகளுக்கு உள்ளாக்கப்படுவது என்பன புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் காணப்படுகின்றது.

புலிகளுக்கு எதிரான அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினருக்குத் தகவல் வழங்கும் தமிழ் உளவாளிகள் என்ற வகையில் கடந்த வருடத்தில் மட்டும் சுமார் 36 பேர் புலிகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இக் கொலைகளில் புலிகளின் தொடர்பு குறித்துப் போதுமான சாட்சியங்கள் உண்டு. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் துணைத் தலைவரான றொபேட் (தம்பிராசா சுபத்திரன்) படுகொலைக்கு இலக்கானது இவற்றில் மோசமானதாகும். அவர் தமது அலுவலகத்தில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார். மேலும், கொழும்பில் பொலிஸ் நிலையத்துள் நுழைந்து பொலிஸ் அதிகாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். எனினும்

# சர்வதேசப் பார்வை

முன்னைய காலங்களைப் போல் அரசாங்கத் தரப்புப் படையினர் பழிவாங்கும் எதிர்த் தாக்குதல்கள் எதிலும் ஈடுபடவில்லை. அது போல கடந்த மார்ச் மாதத்திலும் ஜூன் மாதத்திலும் புலிகளின் ஆயுதக் கப்பல்கள் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்டபோதும் புலிகளும் எதிர் நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடவில்லை. இந்த இரு சம்பவங்களிலும் புலி உறுப்பினர்கள் பலர் கொல்லப்பட்டிருந்தனர். கடந்த ஆண்டில் தற்கொலைத் தாக்குதல்கள் எதுவும் இடம்பெற்றதாகத் தகவல் இல்லை.




பலவந்தமான முறையில் கடத்தப்பட்டுக் காணாமற் போனவர்கள் தொடர்பாக ஆராய்ந்த ஐ.நா.வின் செயற்குழுவொன்று அவசரகால நிலையும் பயங்கரவாதத் தடைச் சட்டமும் இதற்கு முக்கிய காரணம் என்பதைக் கண்டறிந்தது. இவற்றை நீக்குவது அல்லது திருத்துவது அவசியம் என்று சிபார்சு செய்தது. இதன் மூலமாகவே மனித உரிமைகள் பேணப்படுவதில் சர்வதேச தரத்தை எட்ட முடியும் எனவும் கூறப்பட்டது. 2001இல் அவசரகால நிலை செயலிழந்தது. 2002 முதல் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான கைதுகள் எதுவும் இடம்பெறவில்லை. ஆனாலும் முழுமையான ஆவணங்கள் இல்லாமல் சில கைதுகள் நடந்துள்ளன என்பதும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் விடுதலை முழுமை பெறவில்லை என்பதும் உண்மையே. இது குறித்த மீள் பரிசீலனைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன.

2002ஆம் ஆண்டில் புலிகள் பத்துப் பேரை விடுவித்துள்ளனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக விடுவிக்கப்பட்ட இவர்கள் ஆயுதப் படைகளைச் சேர்ந்தோராவர். வருட இறுதியில் புலிகள் தம்மிடம் போர்க் கைதிகளாக எவரும் இல்லை எனக் கூறியுள்ளனர். ஆனால், பெரும்பாலான அவதானிகள் புலிகளின் இக் கூற்றுத் தொடர்பாக ஆழமான சந்தேகம் கொண்டுள்ளனர்.

கடந்த சில வருடங்களாக மாற்றுத் தமிழ் அரசியல் கட்சிகள் சில பொதுமக்களுக்கு எதிரான துன்புறுத்தல்களில் ஈடுபடுவதாகக் கூறப்பட்டு வந்தது. ஆனால், 2002க்குப் பின்னர் இத்தகைய முறைப்பாடுகள் எதுவும் இல்லை. எனினும் புலிகள் தொடர்ச்சியான இத்தகைய சம்பவங்களில் ஈடுபடுவது உறுதியாகியுள்ளது.

புலிகளின் பராமரிப்பிலுள்ள தடுப்பு முகாம்களில் சுகாதார நிலைமைகள் படுமோசம். இத்தகைய தடுப்பு முகாம்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எட்டுத் தடவை விஜயம் செய்துள்ளது. அரசாங்கப் படையினரது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பொலிஸாரால் அல்லது படையினரால் கைது செய்யப் படுபவர்கள் 24 மணி நேரத்தினுள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுகின்றனர். இவர்களை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் 48 மணி நேரத்தில் சந்திப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. ஆனால், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இந்த நிலை காணப்படுவதாக இல்லை.

கடந்த காலங்களில் புலிகள் கப்பம் கேட்டுப் பலரைக் கடத்திவந்து தடுத்து வைத்துள்ளனர். இந்த வருடத்திலும் இத்தகைய சம்பவங்கள் பல குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. குறிப்பாக கிழக்கிலிருந்து முஸ்லிம்கள் பணத்திற்காகக் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். எனினும் கப்பம் பணமாகச் செலுத்தப்பட்டதும் முஸ்லிம்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டுள்ளனர். வருடத்தின் இறுதிப் பகுதியில் முஸ்லிம்களைப் புலிகள் தொடர்ந்தும் தடுத்து வைத்திருப்பதற்கான தகவல்கள் கிடைக்கவில்லை.

கடந்த காலங்களில் புலிகள் நீதிமன்ற அதிகாரிகளை மிரட்டி நீதிமன்றச் செயற்பாடுகளைச் சீர்குலையச் செய்த சம்பவங்கள் பல இடம்பெற்றிருந்தன. 2000ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் நீதிமன்றச் செயற்பாடுகள் முடக்கி வைக்கப்பட்டிருந்தன. எனினும் 2001ஆம் ஆண்டு முதல் நீதிமன்றச் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டதோடு தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது. ஆனால் கடந்த வருடத்தில் புலிகள் தமது நீதிமன்றச் செயற்பாடுகளைப் படையினரது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளும் விரிவுபடுத்த முனைந்தனர். இந்த விரிவாக்கத்தோடு இலங்கையின் நீதித்துறை மற்றும் பொலிஸ்துறை என்பவற்றுடனான தொடர்புகளைத் தமிழ் மக்கள் துண்டிக்க வேண்டும் எனவும் புலிகள் வற்புறுத்தினர். புலிகளின் காவல்துறை

**தொடர்ந்தும் அச்சுறுத்துவதன் ஊடாக யாழ்ப்பாணத்திலும் கிழக்கிலும் உள்ளூராட்சி அமைப்புகளுக்கு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதைப் புலிகள் தடுத்து வருகின்றனர். மாற்று அரசியல் கட்சிகளும், அரசாங்க நிறுவனங்களும் வடக்கு – கிழக்கில் சுதந்திரமாக செயற்படுவதற்குப் புலிகள் தொடர்ந்தும் முட்டுக்கட்டைகளைப் போட்டு வருகின்றனர்.**

மற்றும் புலிகளின் நீதித்துறை என்பவற்றிலேயே மக்கள் தங்கியிருக்க வேண்டுமெனப் புலிகள் எதிர்பார்த்தனர். ஆனால், மக்களின் ஒத்துழைப்பின்மையாலும் படையினரது செயற்பாடுகள் காரணமாகவும் இதனை அமுல்படுத்த இயலவில்லை என்பதற்கு நம்பகரமான சான்றுகள் உண்டு.

சட்டத்துறையில் போதிய அனுபவமும் ஆற்றலும் இல்லாதவர்களைக் கொண்டு புலிகள் தமக்கென ஒரு நீதித்துறையை உருவாக்கியுள்ளனர். புலிகளின் நீதிமன்றங்கள் சுயாதீனமானவையாக இல்லாமல் புலிகளின் ஏஜென்சி நிறுவனங்களாகவே செயற் படுகின்றன. இந்த நீதிமன்றங்களில் மரணதண்டனை உட்படக் கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டு நிறை வேற்றப்படுகின்றன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் புலி உறுப்பினர்களே எனவும், அவர்களால் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் எழ வாய்ப்பு உண்டு எனவும் அரசாங்கம் கூறுகின்றது. ஆனால், இவர்கள் அரசியல் காரணங்களுக்காகவே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனக் கருதுவதற்குப் போதுமான சாட்சியங்கள் இல்லை. பல தடவைகளில் மனித உரிமை ஆர்வலர்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றவியல் சம்பவங்கள் குறித்து விசாரித்துள்ளனர். 2002ஆம் ஆண்டில் சட்டமா அதிபர் திணைக்களம் 750க்கும் மேற்பட்டவர்களை விடுதலை செய்தது. இந்த வருடத்தில் இன்னமும் 65 தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் தற்கொலைத் தாக்குதல்கள் அல்லது பாரிய குற்றச் சம்பவங்களுடன் நேரடித் தொடர்புகொண்டவர்களென அரசாங்கம் கூறுகின்றது. புலிகள் அரசியல் கைதிகளாகப் பலரைத் தடுத்து வைத்துள்ளனர். எனினும், அந்த இயக்கத்தின் இறுக்கமான இரகசியம் பேணும் தன்மை காரணமாக உண்மையில் எத்தனை பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிய முடியாமல் உள்ளது. சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினர்களைக் கூட புலிகள் தமது சிறைச்சாலைகளைப் பார்வையிட அனுமதிப்பதாக இல்லை.

கடந்த செப்டெம்பர் 2002இல் புலிகள் மீதான தடையுத்தரவை அரசாங்கம் நீக்கியது. இதனால் புலி உறுப்பினர் என்பதற்காக சந்தேகத்திற்கு உள்ளாக்கப்படும் நிலைமை நீக்கப்பட்டுள்ளது. ஆனால், புலிகள் குடிமக்களின் தனிப்பட்ட அந்தரங்க விடயங்களுக்குள்ளும் ஊடுருவும் வகையில் தமது புலனாய்வு வலைப்பின்னலை விரிவுபடுத்தி இருக்கின்றனர். சிறுவர்களைப் படையணிகளுக்காக பலவந்தமாகச் சேர்ப்பது தொடர்கின்றது. எனினும் பல்வேறு அழுத்தங்களுக்குப் பின்னர் 141 சிறுவர்களைப் புலிகள் விடுவித்துள்ளனர். 2002இன் இறுதிப் பகுதியில் மேலும் 85 சிறுவர்களை புலிகள் யுனிசெவ் நிறுவனத்திடம் ஒப்படைத்தனர். முன்னைய காலங்களைப் போல முஸ்லிம்களை வட பகுதியிலிருந்து விரட்டியதான தகவல்கள் கிடைக்கவில்லை.

டிசம்பர் 2001இல் அரசாங்கமும் புலிகளும் ஒருதலைப்பட்சமாகப் போர் நிறுத்தப் பிரகடனம் செய்ததைத் தொடர்ந்து உத்தியோகபூர்வ போர்நிறுத்த உடன்பாடு 2002இல் ஏற்படுத்தப்பட்டது. இதனையடுத்து இரு தரப்பும் கைதிகள் பலரை விடுதலை செய்தன. யாழ்ப்பாணத்துக்கான தரை வழிப் பாதை திறக்கப்பட்டது. பகைமை தவிர்ப்பு நிலை உருவானமையை அடுத்து நாடெங்கும் வீதித் தடைகளும் சோதனைச் சாவடிகளும் வெகுவாகக் குறைக்கப்பட்டன. சுமார் 3,40,000க்கும் அதிகமான உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்கள் மீளக் குடியமர்ந்தனர். பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைக்கு எதிரான விசாரணைகளும் ஆரம்பமாகியுள்ளன.

2002 ஏப்ரலில் திருகோணமலையில் நிலாவெளிக் கிராமத்தில் கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு தமிழ்ப் பெண் காயம் அடைந்தார். இந்தச் சம்பவம் இடம்பெற்ற சூழல் மர்மம் நிறைந்ததாக உள்ளது. இச் சம்பவம் குறித்த விசாரணைகளும் இன்னமும் பூரணமாக இல்லை.

2001இல் இராணுவம் தனது உறுப்பினர்களுக்கு மனிதாபிமான சட்டங்கள் பற்றிப் போதிப்பதற்கான பணியகம் ஒன்றை ஆரம்பித்தது. இராணுவத்தின் பல்வேறு மட்டங்களுக்கும் மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் மனித உரிமைச் செயற்பாடுகள் குறித்து விளக்குவதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் இப் பணியகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. 2002இல் இதே போன்ற நடவடிக்கையை விமானப் படையினரும், கடற்படையினரும் எடுத்தனர்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழ்பவர்கள் உட்பட இடம்பெயர்ந்தவர்களுக்கும் மற்றும் தேவைப்படும் அனைத்துக் குடிமக்களுக்கும் அரசாங்கம் உணவு நிவாரணங்களை வழங்கி வருகின்றது. அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களம் மற்றும் பலநோக்குக் கூட்டுறவு சங்கம் என்பன இந்த நடவடிக்கையை மேற்கொள்கின்றன.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## -வாழ்க்கை சரிதம்-

'அவன்தான் மனிதன்' படத்தில் கண்ணதாசனின் அற்புதமான வரிகள் ஒரு பாடலில் வரும்.

"நான்....

கடலளவே பெற்றாலும் மயங்க மாட்டேன்! - அது

கையளவே ஆனாலும் கலங்க மாட்டேன்."

மேற்சொன்ன வரிகளை மனப்பாடம் செய்து வைத்து, என் மனத்தைப் பக்குவப் படுத்திக்கொண்டவன் நான். கண்ணதாசனும் நானும் தொழில் ரீதியாக எதிர் எதிர் அணியில் இருந்தோமே தவிர, எதிரிகளாக என்றுமே இருந்ததில்லை. கண்ணதாசனுக்கும் எனக்கும் இடையே நிலவிய நட்பு பற்றி பின்வரும் அத்தியாயங்களில் விளக்குவேன்.

திருச்சி வானொலி நிலையத்தில் நான் தற்காலிக நிலையக் கலைஞராகப் பணிபுரிந்தபோது, மாலை ஒலிபரப்பில் 'கேட்டியா சங்கதி?' என்னும் தலைப்பில் கிராம நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகும். அதில் கோழித் தீவனம், குறுவை சாகுபடி, மெட்டூர் நீர்த்தேக்கம் பற்றியெல்லாம், இரு கிராமத்துப் பெரியவர்கள் உரையாடுவது போல் ஒரு நிகழ்ச்சி உண்டு.

நானும், இன்னொருவரும் அந்த நிகழ்ச்சியில் அடிக்கடி கலந்து கொள்வோம்.


நிகழ்ச்சி காற்றில் ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கையில் உரையாடலின் இடையே, 'இன்னிக்கு மேட்டூர்ல நீர் அளவு என்னங்க தம்பி?' என்று மற்றொருவர் கேட்க, நான் 'இவ்வளவு கன அடி' என்று சொல்ல வேண்டும். எழுதிக் கொடுத்திருந்தபடியே சொல்லவும் செய்தேன். உடனே என்னோடு உரையாடிக்கொண்டிருந்தவர் 'சுரீர்' என்று என் தொடையில் கிள்ளினார். விவரம் புரியாமல் நான் அதிர்ச்சியுற்றேன்.

தொடையில் கிள்ளியவர் என் அன்பிற்குப் பாத்திரமான திரு.சுகி. சுப்பிரமணியன் அவர்கள்.

கிள்ளியதற்கான காரணத்தை ஜாடையில் கேட்டேன். அதற்கு அவர் சொன்ன பதிலைக் கேட்டதும், நான் என் நாக்கைக் கடித்துக்கொண்டேன்.

நிகழ்ச்சி காற்றில் போய்க்கொண்டிருக்கிறது. நான் என்ன தகவலைத் தவறாகத் தந்துவிட்டேன் என்பதை அவருக்கே உரிய அசாத்தியமான சொல்லாற்றலைக் கொண்டு திரு.சுகி. சுப்பிரமணியன் அவர்கள், ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கும் உரையாடலின் மூலமாகவே எனக்கு உணர்த்தினார்கள்.

"தம்பி! மேட்டூரில் நீர் அளவு தொண்ணூறு புள்ளி அஞ்சு; நீங்க சொன்ன மாதிரி, தொள்ளாயிரத்தி அஞ்சு இல்லே. பயிர்கள் மட்டுமில்லே; உயிர்களும் முழுகிப் போகும்" இவ்வாறு சுகி அவர்கள் நாசூக்காக எடுத்துச் சொல்லி, அந்த நிகழ்ச்சியை நிறைவு செய்தார்கள்.



இப்படியாகத்தானே, திருச்சி வானொலி நிலையத்தில் அவ்வப்போது ஒப்பந்த அடிப்படையில் அடியேன் பணியாற்றிக்கொண்டிருந்தேன். அதன் பயனாக நிறைய நாடகங்கள் எழுதவும் நடிக்கவும் நிறைய மெல்லிசைப் பாடல்கள் புனையவும் வாய்ப்புகள் ஏற்பட்டன. அந்த அநுபவம் என் அறிவைப் பட்டை தீட்டியது.

அப்போது அங்கு நிலையக் கலைஞர்களாக இருந்தவர்கள், தம்முடைய குரல் வளத்தாலேயே தமிழக மக்களின் இதயங்களையெல்லாம் ஈர்த்து திரைப்படக் கலைஞர்களுக்கு இணையான புகழைச் சேமித்து வைத்திருந்தார்கள்.



திரு.டி.வி.கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீவைகுண்டம் பரமசிவம்பிள்ளை, எம்.எஸ்.ரமணி, 'ரேடியோ அண்ணா' விசுவநாதன், திருமதி.சந்திரகாந்தா, திருமதி.டி.எம்.கமலா, திருமதி வீரம்மாள் ஆகியோர் வானொலி மூலமாகவே வடவேங்கடம் முதல் தென்குமரி வரை வாழுகின்ற மக்களின் செவிகளின் உள்ளே சிம்மாசனம் இட்டு அமர்ந்து கொண்டவர்கள்.

'பொய்யாமொழியும் எம்முள் ஒருவர்' என்று மதுரைத் தமிழ்ச் சங்கத்துக் கற்சிலைகள் திருவாய் மலர்ந்து சிவகவியை ஏற்றுக்கொண்டது போல், இவர்கள் என்னையும் தம்முள் ஒருவனாக ஏற்றுத் தழுவிக்கொண்டவர்கள்.

இவர்களில் திருமதி.வீரம்மாள் இன்று திருச்சிக்கு அருகே மிகப் பெரிய ஆசிரமம் அமைத்து 'தென்னாட்டு தெரசா அம்மையார்' என ஊரும் உலகமும் கொண்டாடும் வகையில் சமூகப் பணி ஆற்றி வருகிறார்.

என் நினைவு நாடாவை நான் Re-Wind செய்யும்போது, இவர்களது இனிய குரல்கள் என் உள்ளச் சுவரெங்கும் எதிரொலிக்கின்றன.


சும்மா வந்துவிடவில்லை, சென்னைக்குக் கோடம்பாக்கத்தில் குப்பை கொட்டக் கூடை கூடையாக அநுபவங்களை அள்ளிக் கொண்டுதான் வந்தேன்.

இன்றைய தமிழ்ச் சினிமாவின் கதவுகள், தட்ட வேண்டிய அவசியமின்றித் திறந்தே கிடப்பதால் தானியங்களோடு தவிடுகளும் தன்னிச்சையாக உள்ளே வந்துவிட்டன.

கதிர்களை அடித்து நெல்மணிகளை மட்டுமே பிரித்து எடுத்த களத்து மேடாக இருந்த கோடம்பாக்கம், இன்று கொத்தவால் சாவடியாகிவிட்டது. எனவே கலையம்சம் குறைந்து விலையம்சம் மேலோங்க ஏதுவாயிற்று.

கதிர், களத்துமேடு என்றெல்லாம் எழுதும்போது, எம்.ஜி.ஆர். நினைவு வருகிறது.

(தொடரும்....)




வாகனம் லண்டன் ஊடாகப் பயணிக்கிறது. எனக்கு மிகவும் பழக்கப்பட்ட பயணம். ஏனென்றால், நானும், மேரியும் வெள்ளிக்கிழமை மாலை வீட்டிலிருந்து கேம்பிறிஜ்ஜிற்கு இந்த வழியில்தான் பயணிப்போம். திடீரென்று வாகனம் ஓர் ஒதுக்குப் புறமான தெருவுக்குத் திரும்பியது. அங்கேயும் பத்திரிகையாளர் பட்டாளமொன்று காத்திருந்தது. ஆனால், ஓல்ட் பெய்லியருகே இருந்த நண்பர்களைப் போலவே இவர்களாலும் ஒரு நீண்ட வேனின் 10 சிறிய கறுப்பு ஜன்னல்களைத் தான் படமெடுக்க முடிந்தது. எனது வாகனம் ஒரு நுழைவாயில் அருகே நிறுத்தப்பட்டபோது "பெல்மார்ஷ் சிறைச்சாலை" எனும் பெயர்ப் பலகை கண்ணில் பட்டது. அதிலே Bயை வெட்டி அதற்குப் பதிலாக யாரோ ஒரு குறும்பன் Hஐப் பிரதியிட்டிருந்தான். ஆகவே, அது Hellmarsh ஆக இருந்தது. அது ஒரு சுபமான வரவேற்பு அல்ல. (Hell என்றால் நரகம் என்று அர்த்தம்.)

உயர்ந்த கம்பிகளை உடைய இரண்டு நுழைவாயில்களை நாம் தாண்டிச் சென்றோம். அவை மின்சாரத்தால் இயக்கப்படுபவை. 30 அடி உயரமுள்ள செங்கல்லாலான அந்தச் சுவரின் உச்சியில் razor வயர் ஓடியது. இங்கிலாந்தில் இருக்கும் மிகவும் பாதுகாப்பான சிறை இதுதான். இதிலிருந்து யாரும் இதுவரை தப்பியோடியதில்லை என்று நான் எப்போதோ படித்த வரிகள் என் நினைவுக்கு வந்தன. நான் சுவரை அண்ணாந்து பார்த்தேன். கோலூன்றிப் பாய்தலின் உலக சாதனை 20 அடி 2 அங்குலம் என்பது ஞாபகத்துக்கு வந்தது.

வேனின் கதவு திறக்கப்பட்டது. நாம் வரவேற்பு அறைக்கு வருமுன்பதாக ஒவ்வொருவராக வெளியே விடப்பட்டோம். பிறகு பெரிய கண்ணாடி அறையொன்றினுள் அடைக்கப்பட்டோம். அது 20 பேரை உள்ளடக்கக் கூடியது. கண்ணுக்குத் தெரியாத அறையில் எம்மை அடைத்தால் நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம்? என்பது அதிகாரிகளுக்குத் தெரியாது போய்விடும். அந்த அறைக்கு அவர்கள் 'ரிஸ்க்' எடுப்பார்களா? தண்டனையளிக்கப்பட்டபிறகு சக குற்றவாளிகள் பேசிக்கொள்வதற்குக் கிடைத்த முதல் சந்தர்ப்பம் இதுதான். அறையின் ஓரத்திலிருக்கும் ஒரு வாங்கில் நான் அமர்ந்தேன். எனக்குப் பக்கத்தே நெடிய தோற்றமுடைய, நேர்த்தியாக ஆடையணிந்த, பார்ப்பதற்கு அழகான ஓர் இளம் பாகிஸ்தானி இருந்தார். அவர் சிறைக் கைதியல்லர்; ரிமாண்டில் இருப்பவர் என்று சொன்னார். அவர் மீது சாட்டப்பட்ட குற்றம் என்ன? என்று நான் கேட்டேன்.

"GBH. பாரதூரமான உடற்காயம் விளைவித்தல். எனது மனைவியை இன்னொருத்தனுடன் படுக்கையில் பார்த்ததும் அவளைப் போட்டு அடித்தேன். ஆகவே அவர்கள் இப்போது என்னை ஹெல்மார்ஸில் அடைத்து விட்டார்கள். அவள் கிரீஸிலிருந்து வரும்வரை வழக்கைத் தொடங்க முடியாது. அங்கே அவர்கள் இருவரும் தமது விடுமுறையைக் கழிப்பதற்குப் போயிருக்கிறார்கள்.

எனக்கு நிக் விடைபெற்றுக்கொள்ளும் போது சொன்ன விடயம் நினைவுக்கு வந்தது. "சிறையில் யாரும் சொல்லும் எதையும் நம்ப வேண்டாம். அத்துடன் உங்கள் வழக்கைப் பற்றியோ மேன்முறை மீடு பற்றியோ எவருடனும் பேச வேண்டாம்."

"ஆர்ச்சர்!" அலறியது ஒரு குரல். கண்ணாடி அறையை விட்டு வெளியே வந்து வரவேற்பறையில் வைத்து இன்னொரு படிவத்தை நிரப்பும்படி வேண்டப்பட்டேன். "பெயர், வயது, உயரம், நிறை?" கவுண்டருக்குப் பின்னே இருக்கு அதிகாரி கேட்கிறார்.

"ஆர்ச்சர், 61, 5 அடி 10 அங், 178 றாத்தல்."

"அதை Stones இல் சொல்லவும்"

"12 Stones 10 றாத்தல்" நான்

## தமிழில் தருவது ஜெஃப்ரி ஆர்ச்சர்

சொல்ல அவர் நிரப்புகிறார்.

"சரி, இப்போது நீங்கள் போகலாம். ஆர்ச்சர்! அடுத்த அறையில் உங்களுக்காக எனது சகபாடி காத்துக்கொண்டிருக்கிறார்."

இத் தடவை இரு அதிகாரிகளைச் சந்திக்க நேரிடுகிறது. ஒருவர் நின்ற நிலையில்; மற்றவர் ஒரு டெஸ்கின் பின்னால் அமர்ந்துகொண்டு. அமர்ந்திருப்பவர் என்னை அரைவட்ட விளக்கின் அடியில் நின்று ஆடைகளைக் களையுமாறு சொன்னார். இரு அதிகாரிகளும் தங்களால் முடிந்த அளவுக்கு கருணையுடன் அதைச் செய்து முடிக்கிறார்கள். முதலில் நான் எனது ஜெக்கட்டைக் கழற்றுகிறேன். பிறகு டை. அப்பால் ஷர்ட். "Agnas cutum, Hiditch & Key and YSL?" நின்றுகொண்டிருக்கும் அதிகாரி கூற அமர்ந்திருப்பவர் உரிய கூடுகளை நிரப்புகிறார்.

(பக்கங்கள் வளரும்)

# அதிகரித்து வரும் சமூகச் சீரழிவுகள்

1989 முதல் 2003ஆம் ஆண்டு வரை இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் இலங்கையில் விபசாரத் தொழிலில் ஈடுபடுகின்ற பெண்கள் தொடர்பான பல தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. இதன்படி இலங்கையில் தற்போது 50,000க்கும் அதிகமான பெண்கள் விபசாரத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர் இவர்களைத் தவிர, பகுதி நேரமாகவும். சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பயன்படுத்தியும் இத் தொழிலைச் செய்து வருபவர்களாக 25,000 பேர் மட்டில் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதே நேரம் இலங்கையின் சனத்தொகை மற்றும் அதன் வளர்ச்சி வேகத்தைக் கொண்டும் விபசாரத்தில் ஈடுபடுகின்ற பெண்களின் எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்படலாம். முழு நேர விபசாரிகள், பகுதிநேர விபசாரிகள் மற்றும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி தொழில் ஈடுபடும் சாதாரண விபசாரிகள் என் மூன்று வகைப் பிரிவினர் இலங்கையில் இருந்து வருகின்றனர். இதில் முழு நேர விபசாரிகள் எனப்படுவோர் ஒரு நிரந்தரமான இடத்தைத் தேர்ந்தெடுத்து நேரங்களை ஒதுக்கி தொழிலில் ஈடுபடுபவர்களாக கணிக்கப்படுகின்றனர். ரெஸ்ட்டூரன்டுகள், நட்சத்திர ஹோட்டல்கள், விடுதிகள் மற்றும் நடைபாதைகள் போன்ற இடங்களை இவர்கள் தத்தம் வசதிகளுக்கேற்ப தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். தற்போது இவர்கள் சுப்பர் மார்க்கெட் போன்ற நவீன பிரபல வர்த்தக நிலையங்களையும் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளனர்.

நிலையான ஒரு இடத்தை வைத்துக் கொண்டோ அல்லது அப்படியானதொரு இடம் இல்லாமலோ தனது இருப்பிடங்களை அடிக்கடி மாற்றிக்கொள்ளும் பகுதிநேர விபசாரிகள் மிக அதிகமாக வேறு தொழில்துறைகளைச் சார்ந்தவர்களாக இருந்து வருகின்றனர். இவர்களில் ஒரு பகுதியினர் ஹோட்டல்கள் மற்றும் விடுதிகளில் உறுப்பினர்களாக இருந்தும், சிறு சிறு குழுக்களாக இணைந்தும் மிகவும் தந்திரோபாயமான ரீதியில்



தங்களது தொழிலை நடாத்தி வருகின்றனர்.

இந்த இரு பிரிவுகளையும் விட சாதாரண விபசாரிகள் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி முழுநேர விபசாரத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தங்களது தந்திரத்தால் விபசாரிகளை நாடாதவர்களையும் கூட ஈர்த்து தங்களது தொழிலை மேற்கொள்ளும் அளவுக்கும் திறமையானவர்களாகக் காணப்படுகின்றனர். விபசாரிகள் தொடர்பில் அநுபவமும் இல்லாத எவருமே இவர்களிடம் மாட்டிக்கொள்வது நிச்சயம் என்கின்ற அளவுக்கு இவர்கள் தொழிலில் படு சமர்த்தர்களாக விளங்கி வருகின்றனர்.

முழுநேர விபசாரிகள் அதிகமாகவே கொழும்பு போன்ற ஜனசந்தடி மிக்க பகுதிகளில் விடுதிகள், லொட்ஜ், வாடி வீடுகள் போன்றவற்றில் வார விடுமுறை நாட்களில் தங்களுக்கென்று அறைகளை முன் கூட்டியே பதிவு செய்து வைத்துக் கொள்கின்றனர். எப்படியும் தங்களுக்கான நுகர்வோர் கிடைப்பார்கள் என்ற நம்பிக்கை அந்தளவுக்கு இவர்களுள் இருக்கின்றது. இவ்வாறான அனைத்து தங்குமிடங்களிலும் வார இறுதி நாட்களில் மிக அதிகமாக நடமாடித் திரிபவர்கள் முழுநேர விபசாரிகளாக இருக்கும்போது சாதாரண ரக விபசாரிகள் ஜன சந்தடியற்ற பகுதிகளையே தேர்ந்தெடுக் கின்றனர்.

கொழும்பில் தனவந்தர்கள் அதிகம் வசித்து வரும் பிரதான பகுதியொன்றில் செயற்பட்டு வரும் விபசார விடுதி ஒன்று ஒரு பெண்மணியால் நடாத்தப்பட்டு வருகிறது. இதனுள் சாதாரணமான வர்களால் நுழைந்துவிட முடியாது. காரணம், நுழையும்போதே 15,000 ரூபா செலுத்திவிட வேண்டும். பணத்தை செலுத்திவிட்டு உள் நுழைந்தால் அந் நபருக்கு உள்நாட்டு, வெளிநாட்டு மதுவகைகளுடன் சுவையான உணவு வகைகள் பரிமாறப்படும். அவர் மது அருந்தாதவராக இருந்தாலும் பலவந்தமாக வேனும் அன்பு என்ற ரீதியில் பருக்கப்படுவார். இது அவர்களது வியாபாரத் தந்திரமாகும். அதன் பின்னர்தான் அவர் அங்கு சென்ற நோக்கத்தை நிறைவேற்றச் சந்தர்ப்பம் கிடைக்கும். அதாவது அங்கிருக்கின்ற பெண்களில் அவர் விரும்பும் ஒருவரை தேர்ந்தெடுத்துக்கொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் அங்கு செல்பவர்களது நிலை மது போதை காரணமாக படு மோசமானதாக இருப்பதும் அவர்களது நோக்கத்தை நிறைவேற்ற இயலாமல் போவதும் அநேகமான சந்தர்ப்பங்களில் சர்வ சாதாரணமாக நிகழ்கின்ற சம்பவங்களாகும்.

ஆனால், இங்கு ஒரு வேடிக்கை என்னவென்றால் என்னதான் நடந்தாலும் மீண்டும் ஒருமுறை 'ட்ரைப்' பண்ணுவதற்காக பலர் அங்கு திரும்பத் திரும்பச் செல்கின்றனர்.

தெஹிவளையில் கடற்கரைப் பகுதியில் ஒரு மாளிகை இத் தொழிலுக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் பிரபல விளையாட்டு வீரர்கள் இந்த இடத்தையே நாடுகின்றனர். வேறு நபர்கள் இந்த மாளிகைக்குள் நுழைய பல தடங்கல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பிரபல விளையாட்டு வீரர்களின் கோரிக்கைகளே இதற்குக் காரணமாகும் எனவும் அறிய முடிகின்றது.

வத்தளையில் கடலோரப் பகுதியில் ஒரு விபசார விடுதி நடாத்தப்பட்டு வருகிறது. 70களின் காலகட்டத்தில் இலங்கையில் பிரபலமாகவிருந்த ஒரு நடிகரும் அவரது மனைவியும் இணைந்து இந்த விடுதியை நடாத்தி வருகின்றனர். இதே போன்று பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, கறுவாத் தோட்டம், கொள்ளுப்பிட்டி போன்ற இடங்களில் முழுநேர விபசாரத் தொழிலில் ஈடுபடும் பெண்கள் கூலிக்கு விடப்படுகின்றனர்

பகுதி நேர விபசாரத் தொழிலில் ஈடுபடுகின்றவர்களது விடுதிகள் கொழும்பில் பல பாகங்களிலும் காணப்படுகின்றன.

கொழும்பு நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களில் தொழில் புரிகின்ற பெண்களிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களைக் கொண்டு இந்த விடுதிகள் மிகுந்த உற்சாகத்துடன் நடாத்தப்பட்டு வருகின்றன. குற்றத் தடுப்புப் பொலிஸார் அடிக்கடி சுற்றிவளைத்துப் பிடித்தாலும் கூட இவர்களது தொழில் முயற்சிகள் வெற்றிகரமாகவே நடந்து வருகின்றன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இங்கு முக்கிய விபசாரிகளின் கொள்வனவாளர்களாக, விளங்குபவர்கள் பெண்கள் தொழில் புரிகின்ற நிறுவனங்களின் முக்கியஸ்தாகளுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்துக்கொள்கின்றனர். பின்னர் தங்களது விபசார விடுதிக்கு வருகை தரும் நுகர்வோரின் எண்ணிக்கை மற்றும் அவைகளுக்கு ஏற்ப அந்தந்த நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு பகுதிநேர இன்பத்துக்கான விபசாரிகளை கோருகின்றனர். தங்களது பணி நேரத்திற்குள் இன்னுமொரு 'பார்ட் டைம்' தொழில் கிடைப்பதால் பல பெண்கள் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கின்றனர். இவர்கள் தொழில் பார்க்கின்ற நிறுவனங்களுக்கு இவர்களை சந்திக்க உறவினர்களோ, நண்பர்களோ வந்தால் இவர்கள் 'பார்ட் டைம்' தொழிலுக்காக சென்றுள்ள சந்தர்ப்பங்களில் இவர்களை காட்டிக் கொடுக்காமல் காப்பாற்றும் கடமை நிறுவன முக்கியஸ்தர்களுக்கு உரியதாகும்.

-பாரூக்

# 'ஆயுதம் ஏந்துவது மட்டும் சரியான தீர்வைத் தராது....'

**திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் பிரதமராகப் பதயேற்றதை முன்னிட்டு 1994 நவம்பர் 14இல் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் தோழர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நிகழ்த்திய உரையிலிருந்து.....**

**கௌரவ சபாநாயகர் அவர்களே!**

ஐயா! இலங்கைப் பிரதமர் என்ற பதவியைக் கௌரவ திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் ஏற்பதையிட்டு ஆரம்பத்திலேயே எனது பாராட்டுதல்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். மக்களின் நன்மைக்காக அவரது அரசாங்கம் எடுக்கும் எந்தவொரு முற்போக்கு நடவடிக் கையையும் அமுல்படுத்துவதற்கு சகல உதவிகளையும் ஈ.பி.டி.பி. வழங்கும்.

எதிர்க்கட்சித் தலைவரான கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு எமது வாழ்த்துக் களைத் தெரிவிக்கவும் நாம் விரும்புகின்றோம். அத்துடன் இப் பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் சிறப்பாக அமையவும் வாழ்த்துகின்றேன். சபாநாயகர்அவர்களே!

இச் சபையில் உள்ள நாங்கள் அனைவரும் சமாதானம் பற்றி நம்பிக்கையுடன் பேசினோம். பயங்கரவாதத்தின் விளைவாக இந்த நாடாளு மன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக விளங்கிய அமிர்தலிங்கம் அவர்களை இழந்துள்ள பெரும் சோகம் எங்கும் நிலவுகின்றது. ஜனநாயகத்திற்கு எதிராகப் பயங்கரவாத அச்சுறுத்தல் தொடர்கின்ற காரணத்தால் பல பெறுமதியான உயிர்களை இலங்கை இழந்திருக்கின்றது. கலந்துரையாடல்கள் மற்றும் வாதப்பிரதிவாதங்கள் மூலம் கருத்து முரண்பாடுகளுக்குத் தீர்வுகாணும் ஜனநாயகப் பாரம்பரியங்கள் பலப்படுத்தப்பட வேண்டும். பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஆயுதங்களைப் பயன்படுத்தும் முறைக்கு முடிவு காணப்பட வேண்டுமென்பதில் எந்தவிதமான கருத்து முரண்பாடுகளும் இருக்கக் கூடாது. ஜனநாயக முறையில் தமது கருத்துக்களை வலுப்படுத்த முடியுமென நம்புபவர்கள் தமது எண்ணங்களை நிறைவேற்றுவதற்குப் பயங்கர ஆயுதங் களை நோக்கித் திரும்பமாட்டார்கள். ஆனால், சீனப் புரட்சியின் தலைவர் காலஞ்சென்ற மாஓசேதுங் சுட்டிக் காட்டியதைப் போன்று சில சூழ்நிலைகளின்போது ஆயுதங்களும் தேவைப் படும்.

**கொடு வாளினை எடடா - மிடு**
**கொடியோர் செயல் அறவே.** - இது தமிழ்ப் பேசும் மக்களால் பெரிதும் நேசிக்கப்பட்ட புரட்சிகரக் கவிஞன் பாரதிதாசன் ஒருதடவை கூறியுள்ளதாகும். ஜனநாயகப் பாதையில் பயணிக்க விரும்புகின்றவர்கள்கூட கொடிய அரசு ஒன்றினால் அடக்கி ஒடுக்கப்படும்போது, ஆயுதங்களை ஏந்த நிர்ப்பந்திக்கப்படுவது சில வேளைகளில் அவசியமாகின்றது. கடந்த காலங்களில் நாம் முகங்கொடுத்த நிலைமை இதுவே.

ஆனால், ஆயுதங்களை ஏந்துவது மட்டுமே முற்றுமுழுதான போராட்டம் என்று நாம் எப்போதும் நினைத்தது இல்லை. எமக்கு எதிராக ஆயுதங்களால் பயமுறுத்துபவர்களுக்கு எதிராக மட்டுமே ஆயுதங்களை ஏந்துவது எமது கொள்கையாகும். இக்காரணத்தினால்தான் எம்மோடு அரசியல் ரீதியாக முரண்படுபவர்களை ஆயுதங்களால் அழித்து ஒழிக்க நாம் ஒருபோதும் முனைவது இல்லை. பிழையான கருத்துக்களை விவாதங்கள் மூலம் தோற்கடிக்கும் அணுகு முறையை நாம் கொண்டிருக்கின்றோம்.

எனவேதான் கடந்த காலங்களில் சாதாரண சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக நாம் ஆயுதங்களை ஏந்தவில்லை. இதனால்தான் தகுந்த சூழ்நிலைகள் உருவானபோது ஜனநாயக நீரோட்டத்தில் எம்மால் இணைந்துகொள்ள முடிந்தது.

எமது போராட்டத்தில் விட்டுக்கொடுக்காத இராணுவ மனோபாவத்தை நாம் தொடர்ந்தும் கொண்டிருந்தால் நாம் தேசிய நீரோட்டத்திற்கு திரும்புவதென்பது சாத்தியமற்றதாக இருந் திருக்கும். இதனை இங்குள்ள அமைச்சர் களுக்குச் சொல்லி வைக்க விரும்புகின்றேன். எமது சொந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத சகலரையும் ஒழித்துக் கட்டுவது தனிநபர் பயங்கரவாதமாகும். இந்தப் பயங்கரவாதப் போக்கை நாம் கண்மூடித்தனமாகப் பின்பற்றி இருந்தால் அதே நிலை எமக்கும் ஏற்படுமென்ற தொடர்ச்சியான பீதியினால் நாம் பாதிக்கப்பட்டி ருப்போம். எம்மால் கண்மூடித்தனமாகக் கொல்லப் பட்டவர்களின் பிள்ளைகளும், இரத்த உறவினர் களும் எம்மைப் பழிவாங்கப் பின் தொடர்ந்து கொண்டிருப்பார்களென்ற பயப் பீதியோடு நாம் இன்று இருந்திருப்போம். எமது தலைவர்களையோ அல்லது ஏனைய கட்சிகளின் அங்கத்தவர் களையோ நாம் ஒழித்துக் கட்டியிருந்தால், நாமும் அவர்களினால் பழிவாங்கப் படுவோம் என்று பயந்து கொண்டு இருக்கவேண்டி வந்திருக்கும். ஆனால், அத்தகையதொரு நச்சு வட்டத்தை நாம் உருவாக்கியிருக்காத காரணத்தினால் ஜனநாயகப் பாதைக்கு வர எம்மால் முடிந்துள்ளது.

**(தொடரும்.....)**

# தேர்தல் பயோடேட்டா


## அப்பாத்துரை விநாயகமூர்த்தி

**கோ**பிச்சுக்கொள்ளாதயுங்கோ. நான் இப்ப கொஞ்சம் அமைதியா இருக்கப் போறன். இவ்வளவு காலமும் கத்திக் கத்தி, பொடியங்களுக் காகப் பேசிப் பேசிக் களைச்சுப் போயிட்டன். களைச்சாலும் பரவாயில்லை. நான் கறுப்புக் கோட்டுக்காறன். கொஞ்சமெண்டாலும் கத்திப் பேசுவன். எங்கட குமாரின்ர பொடி இருக்கெல்லே, அது என்னை யாழ்ப்பாணத்தில நிக்க வேணாமெண்டு வன்னிக் காட்டுக்கெல்லே மாத்திப் போட்டுது. நம்மோட நிண்ட குமரகுருபரனுக்குமெல்லே குளிசையைக் குடுத்திட்டுது. வன்னிக்குப் போனா அங்கை என்ன, நினைச்ச மாதிரிக் கத்த ஏலாது. வாய்க்குள்ளதான் வெடி விழும். அதுவும் ட்ரயல் அற் பார் பாணியில. இப்ப பாருங்கோ. 'அடல்ற்ஸ் ஒன்லி'ப் படம் மாதிரி இவ்வளவு காலமும் 'டைகர்ஸ் ஒன்லி' எண்டுதான் நான் எல்லா இடங்களிலயும் பேசினனான். எனக்கு எழுவது வயது கடந்துபோச் செண்டாலும் உந்தப் பொடியள்தான் மந்தைகளை வழி நடத்திற வெள்ளாடுகள் எண்டுதானே சொன்னனான். ஆனா அதுக்குள்ளயும் ஒரு 'பிளக் சீப்'. கஜேந்திரன் குமார் பொன்னம்பலத்தைத்தான் சொல்லுறன். அவங்கட பரம்பரையே கறுப்புத்தானே. ஏகம், போகம் எண்டெல்லாம் நான் எவ்வளவு யாகம் நடத்தியிருப்பன். பார்லிமென்ரிலயும் கத்தினன். றோட்டு றோட்டாக் கத்தினன். வெடி வைக்கும் பொடியளே கொடி நாட்ட வேணுமெண்டு வாய் கிழியக் கத்தினனான். ஆனா, குமாரின்ர பொடி லண்டனில இருந்து வந்து வைச்சுது வெடி. நான் வன்னிக்கை வந்து விழுந்திட்டன். பரவாயில்லை. யாழ்ப்பாணத்தில இல்லை எண்டாலும் எனக்கு வன்னியில சீற் கிடைச்சதே புண்ணியம். அதோட, முந்திப் பிடிபட்ட பொடியளுக்காக வழக்குப் பேசயுக்கைகூடக் குறைய வாங்கினனான் எண்டுமேல்லே எனக்கெதிரா ஆணி இறுக்கி வைச்சிருக்கிறாங்கள். அப்ப பாருங்கோ. மௌனம் கலக நாஸ்தி.

சங்கரி சூரியனைத் தரமாட்டனெண்டு சண்டை பிடிக்கேக்க நான் நினைச்சன் எங்கட சைக்கிளை மிதிக்கலாமெண்டு. எல்லாருக்கும் சொல்லிப் பாத்தன். நாலு கூட்டுக்குள்ளயும் வன்னிக் காட்டுக்குள்ளயும் இருக்கிற ஆக்களுக்குப் பிடிக்கல்ல. பிறகு பழைய வீட்டைத் தேடிப் போனாங்கள். அதுக்கும் சின்னத்துரையல்லோ சண்டித்தனம் விடுகுது. உதுக்குத் தெரியேல்ல யார் பெரிய துரையெண்டு.

நாங்கள், அதுதான் சீ.சீ. பொன்னம்பலம், பேந்து ஜூனியர் பொன்னம்பலம் அதற்குப் பிறகு அதுதான் இந்தப் பெடி ஜூனியர் சூனியர் பொன்னம்பலம் எல்லாம் தமிழ் மக்களுக்குச் செய்த சேவை எம்மளவு தெரியுமே? அப்ப நான் போஸ்ற் மாஸ்டர். எனக்கு இன்னும் ஞாபகமிருக்கு. இப்பத்தைப் பெடி சூனியர் பொன்னம்பலத்தின்ர பேரன் இந்த இந்தியச் சனத்துக்குச் செய்த சேவை. ஒரு கையை உயத்திப் பிரசாவுரிமையைப் பறிச்சதுக்கு மற்றக் கையிலை கிடைச்ச பரிசு மந்திரிப் பதவி. பிறகு பாருங்கோ. இந்துப் பல்கலைக்கழகம்தான் வேணுமெண்டு நிண்டம். ஏன் சொல்லுங்கோ பாப்பம்.? நாங்கள் சீமைக்குப் போய்ப் படிக்கிற ஆக்கள். உதுகளுக்குப் பல்கலைக்கழகம் கொடுத்து கண்டதுகள் நிண்டதுகள் எல்லாம் படிச்சா எங்கட கவுரவம் என்னாகிறது எண்டு எங்கட சீ.சீ. யாற்ர மூளை செய்த வேலை அது. பிறகு நாங்கள் இலங்கைக்கு விசுவாசமாச் சத்தியப் பிரமாணம் செய்யிறதுக்கும் ஆதரவளிச்சம். நீங்க பிழையெண்டு சொல்லலாம். சில பிழைகள் நல்லதுக்கும் வழிவிடும் தெரியுமோ? பார்லிமென்ருக்கு தமிழாக்களைப் போகாமல் செய்ததாலைதானை பொடியங்கள் ஆயுதங்களைத் தூக்கினாங்கள். அதோட பாருங்கோ. எனக்கும் வயது போயிட்டுது. இப்ப எழுவதைத் தாண்டிவிட்டன். வன்னிக் காட்டுக்குள்ளயும் மண் மேட்டிலயும் தமிழ்ச் சனம் அகதியளாய் மரத்துக் கீழே இருக்குதெண்டா அதுக்கு நான் என்ன செய்ய? ஒரு வருசத்துக்கு ஒருக்காத்தானே பிறந்த தினம் வரும். அதை நான் கொண்டாடினது சிலபேருக்குக் கோபம். ஆட்டுக்கு அளந்த அளவுதானை வால் இருக்கும். எண்டாலும் பாருங்கோ 'டமில்' வாழ நான் இனியும் கத்துவன்.

> எங்கட குமாரின்ர பொடி இருக்கெல்லே, அது என்னை யாழ்ப்பாணத்தில நிக்க வேணாமெண்டு வன்னிக் காட்டுக்கெல்லே மாத்திப் போட்டுது. நம்மோட நிண்ட குமரகுருபரனுக்குமெல்லே குளிசையைக் குடுத்திட்டுது. வன்னிக்குப் போனா அங்கை என்ன நினைச்ச மாதிரிக் கத்த ஏலாது. வாய்க்குள்ளதான் வெடி விழும்.



**(இன்னொரு பயோடேட்டாவுடன் சந்திப்போம்....)**


**Swiss நாட்டில் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற Basel.S.P.T. ரவி கடையின் புதிய கிளை நிறுவனமான தங்க மாடம் ஒன்று BERN மாநகரில் கோலாகலத் திறப்பு விழா.**

காலம் :- ஏப்ரல் மாதம் 2ஆந் திகதி திறப்பு விழா

**2004ஆம் ஆண்டிற்கான புதிய மொடல் நகைகளையும் ஆடைகளையும் அத்துடன் அனைத்து ரக D.V.D, V.C.D, A.U.C.D விற்பனை செய்ய உள்ளோம்.**

முக்கிய குறிப்பு :- அனைத்து நாடுகளுக்கும் பணமாற்று சேவை 24 மணித்தியாலத்தில் செய்து கொடுக்கின்றோம். கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் உட்பட சகல நாடுகளுக்கும் தொடர்பு கொள்ளக் கூடிய T. Phone காட் அட்டைகளையும் மிக மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்ய உள்ளோம்.

இடம் :- S.P. TEXTILES & JEWELLERY, SCHLOSS STRASSE. 87A, 3008 BERN.

வரும் வழி :- பேர்ன் புகையிரத நிலையத்தில் இருந்து BUBPLIZ நோக்கிச் செல்லும் 13ஆம் இலக்க பஸ் எடுத்து 5ஆவது தரிப்பிடமான Schlossmatt இல் இறங்கவும்.

அத்துடன் ஏப்ரல் .2ஆந் திகதி தொடக்கம் 12ஆந் திகதி வரைக்கும் அதி விசேஷமான மலிவு விற்பனை.

**சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு BASEL மாநகரில் S.P.T. ரவி கடையின்**

2004ஆம் ஆண்டின் மாபெரும் மலிவு விற்பனை. நகை வழமை போல் மிக மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

காலம் :- 20, 21 சனி, ஞாயிறு - மார்ச் 2004.
ஆடைகள் அனைத்தும் 50% இருந்து 60% கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:-
- கல்லு கோலம் சாறி - 50% கழிவில் (145 S.F)
- பனாறிஸ் சாறி - 100 S.F இருந்து
- சாறி - 8 S.F இருந்து
- பஞ்சாபி - 7 S.F இருந்து
- சிறுவர் உடுப்பு - 9 S.F இருந்து
- சேட் - 6 S.F இருந்து
- டெனிம் - 4 S.F
- ரீசேட் - 1 S.F

மலிவு விற்பனை 20,21 சனி, ஞாயிறு மார்ச் 2004

இடம் :- Casino மண்டபத்தில் Basel புகையிரத நிலையத்திலிருந்து பாபஸ பிளற்ஸ் (Babessa flats) ஐ நோக்கி 1 அல்லது 8 ஆம் இலக்க ட்ராம் எடுத்து 3ஆம் தரிப்பிடத்தில் இறங்கி ஒரு நிமிட நடை தூரம்,

**சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு Zurich மாநகரில் BASEL S.P.T. ரவி கடையின்**

2004ஆம் ஆண்டின் மாபெரும் மலிவு விற்பனை. நகை வழமை போல் மிக மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

காலம் :- 10.11.12 சனி, ஞாயிறு, திங்கள் - ஏப்ரல் 2004.
ஆடைகள் அனைத்தும் 50% இருந்து 60% கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:-
- கல்லு கோலம் சாறி - 50% கழிவில் (145 S.F)
- பனாறிஸ் சாறி - 100 S.F இருந்து
- சாறி - 8 S.F இருந்து
- பஞ்சாபி - 7 S.F இருந்து
- சிறுவர் உடுப்பு - 9 S.F இருந்து
- சேட் - 6 S.F இருந்து
- டெனிம் - 4 S.F
- ரீசேட் - 1 S.F

மலிவு விற்பனை 10, 11, 12 சனி, ஞாயிறு திங்கள் ஏப்ரல் 2004

இடம் :- Volks Haus மண்டபம், Steufacher str - 60, Zurich.

அனைத்து இடங்களுக்குமான தொடர்புகளுக்கு : BASEL S.P.T. ரவி கடை T.P. 061- 2729030, 061-2720990. H.P. 079-3562278






சக்தி தனக்கே உரிமை யாக்கு-நல்ல
தாளவகை சந்தவகை காட்டும் -சித்தம்
சக்தி தனக்கே உரிமை யாக்கு-அதில்
சாரும் நல்ல வார்த்தைகளும் பாட்டும்

-சுப்பிரமணிய பாரதியார்

# யார் அறிவாளி?



பாப்பா முரசு சிறுகதை

அந்தக் கிராமத்தில் நான்கு நண்பர்கள் வசித்து வந்தனர். அவர்கள் எப்போதும் ஒன்றாகவே சுற்றிக்கொண்டிருப்பார்கள். நான்கு நண்பர்களில் மூன்று பேர்கள் நன்கு படித்தவர்கள். ஒருவன் படிக்காதவன். படித்த மூன்று பேர்களுக்கும் கல்வி அறிவு நிறைய இருந்தது. ஆனால், சமயோசித அறிவு என்பது சுத்தமாகக் கிடையாது. படிக்காதவனுக்குக் கல்வி அறிவு இல்லை. ஆனால், சமயோசித அறிவு நிறைய இருந்தது.

நான்கு நண்பர்களும் ஒருநாள் உட்கார்ந்து தங்களது எதிர்காலத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"நாம் நம்முடைய படிப்பறிவை வைச்சு நம்ம எதிர்காலத்துக்காக நிறைய சம்பாதிக்கணும்."

"ஆமா. அவன் சொல்றது கரெக்ட். நாம் நாளைக்கு இந்த ஊரை விட்டுக் கிளம்புவோம். ஊர் ஊரா போய் ராஜாக்களைப் பார்த்து நம்முடைய அறிவை அவர் முன்னால நிரூபிப்போம். ராஜா நமக்கு நிறைய பரிசுகளைத் தருவாரு."

இந்த யோசனை அவனைவருக்கும் நல்ல யோசனையாகப் பட்டது.

இப்போது வேறொருவன் பேசினான்.

"ஆமா. நாம மூணு பேரும் நல்லா படிச்சவங்க. இவன் மட்டும் படிக்காதவன். இவனை நம்ம கூட அழைச்சிகிட்டு போறதுலே ஒரு பிரயோசனமும் இல்லை."

மற்றொருவன் இதை ஏற்கவில்லை.

"வேணாம். அவன் நம்முடைய நண்பன். அவனையும் நம்ம கூட கூட்டிக்கிட்டுப் போகலாம்."

அடுத்தநாள் காலை நான்கு நண்பர்களும் புறப்பட்டனர்.

அவர்கள் நான்கு பேர்களும் ஒரு காட்டில் நடந்துகொண்டிருந்தார்கள். அப்போது வழியில் இறந்து போன ஒரு மிருகத்தின் எலும்புகளைப் பார்த்தார்கள். அவர்களுக்கு இப்போது ஒரு எண்ணம் உதித்தது.

"நம்முடைய அறிவையும் திறமையையும் இப்ப சோதிச்சிப் பார்க்கலாம். இந்த எலும்புகளை வெச்சி ஒரு சிங்கத்தை உருவாக்கலாம். நான் இந்த எலும்புகளை சரியா சேர்க்கிறேன்"

இப்போது இரண்டாவது ஆள் பேச ஆரம்பித்தான்.

"அதற்கு நான் சதையையும் இரத்தத்தையும் கொடுக்கிறேன்."

இருவரும் சேர்ந்து அதை ஒரு உயிரற்ற சிங்கமாக மாற்றினார்கள்.

மூன்றாவது ஆள், "அதற்கு உயிர் கொடுக்கிறேன்" என்றான்.

படிக்காதவன்,

"சிங்கத்தை உருவாக்குவது நல்லதல்ல. அது நம்மை அடித்துக் கொன்றுவிடும்" என்று அதைத் தடுத்தான்.

ஆனால், படித்த மூன்று நண்பர்களும் தாங்கள் படித்தவர்கள் என்ற கர்வத்தால் படிக்காதவன் சொன்னதை ஏற்கவில்லை.

நடக்கப்போகும் விபரீதத்தைப் படிக்காதவன் உணர்ந்தான். உடனே அவன் ஒரு பெரிய மரத்தின் மீது ஏறி உட்கார்ந்துகொண்டான்.

இப்போது மூன்றாவது ஆள் அந்தச் சிங்கத்திற்கு உயிர் கொடுத்தான். அது தன்னை உருவாக்கிய அந்தப் படித்த மூன்று பேர்களையும் கொன்று சாப்பிட்டது.

படிக்காதவன் தன் சமயோசித புத்தியால் உயிர் பிழைத்தான்.

ஆம் பிள்ளைகளே! அறிவு பூர்வமான செயற்பாடு எம்மைப் பெரியோர்களாக்கும். ஆனால், முட்டாள்தனமான செயல்கள் எம்மை ஆபத்தில் சிக்க வைத்துவிடும். ஆதலால் நாம் புத்திக் கூர்மையுடன் சிந்தித்துச் செயற்பட வேண்டும். சில மனிதர்கள் எம் அறிவை அளந்து கொள்ளும் விதத்தில்தான் எம்முடைய தன்மையை விளங்கிக் கொண்டு செயற்படுவார்கள். ஆகவே நாம் என்றும் விழிப்புடன் எம் அறிவினை வளர்த்துக் கொள்வோம். புரியுதா குட்டீஸ்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 13.03.2004

வர்ணம் தீட்டும் போட்டி இல: 538
தினமுரசு வாரமலர்
த. பெ. இல. 1772.
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 535

### பரிசுக்குரியவர்:

செல்வன். தே. அமில்டன் தேவராஜ்,
23/4, திருவள்ளுவர் வீதி, உக்குளாங்குளம்,
வவுனியா.

### பாராட்டுக்குரியவர்கள்

| | |
|---|---|
| சாருஹா ஜெயராஜசிங்கம்,யா/புனித யோண் பொஸ்கோ வித்தியாலயம், யாழ்ப்பாணம் | ஸ்ரீஜீவா சஞ்ஜீவன், ஸ்ரீமுருகன் களஞ்சியம், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. |
| ந.விமலேஸ்வரி, 271, காந்தி நகர், திருகோணமலை. | பி. சுபாசினி, 86, மோதர வீதி, கொழும்பு-15 |
| சி.றாதை, கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை,வெள்ளவத்தை. | ஆர். சின்னையா, கிங்ஸ்ரன் சர்வதேச கல்லூரி, கல்கிசை. |
| கோபால்-விஜிபா, 5ஆம் வட்டாரம், அனலைதீவு. | என். ஜன்ஜீவ் பிரவிந்,நிர்மலா வாசா,2/2 முதலாம் குறுக்கு, முனைத் தெரு,மட்டக்களப்பு |
| சி.மதுரவாணி, 15, காந்தி நகர், திருமலை. | ஆத்மராசா ஜெயந்தி, 212, காந்தி நகர், அன்புவழிபுரம், திருகோணமலை. |

# மரவட்டை

ஊர்ந்து செல்லும் அட்டையைக்
கூர்ந்து பார்த்தேன் நானுமே.

அடடே, கால்கள் எத்தனை!
யாரால் எண்ண முடியுமோ?

ஆயி ரந்தான் இருக்குமோ?
அதற்கு மேலும் போகுமோ?

இரண்டு கால்கள் உடையநான்
என்ன வேகம் செல்கிறேன்.

ஆயி ரங்கால் இருந்துமே
அதற்கு வேகம் இல்லையே!

கிட்டச் சென்றே அட்டையைத்
தொட்டுப் பார்த்தேன் நானுமே.

சட்டென் றந்த அட்டையும்
வட்ட மாகச் சுருண்டதே!



# அதிசய உலகம்



பறவைகளில் மிகவும் வித்தியாசமான அலகைக் கொண்டது டுகான் என்னும் பறவையாகும். இந்த டுகானின் அலகுகள் மிக நீளமாகவும் வண்ண வண்ண நிறங்களிலும் அமைந்திருக்கும். அலகுகளின் நீளம் அதன் உடல் நீளத்திற்கு இணையான அளவிலோ சற்றுக் குறைவாகவோ காணப்படும். தவிர அலகின் இரண்டு பக்க பிளவுப் பகுதிகளிலும் ரம்பத்தின் பற்கள் போன்ற பகுதி காணப்படுகிறது. இந்த ரம்பம் போன்ற அலகு பழங்கள், பல்லிகள் மற்ற சிறு சிறு பூச்சிகளைக் கவ்விக்கொள்வதற்கு ஏதுவாக அமைந்திருக்கிறது. ஒரு பழத்தை டுகான் பறவை பறித்துவிட்டால் அதை மேலே தூக்கிப் போடும். பின்பு கீழே வரும்போது அதைக் கவ்வி விழுங்கிவிடும். பெரிய அளவிலான இரையை தன் கால் பாத நகங்களில் இறுக்கி பிடித்துக்கொள்ளும். பின்பு தனது அலகால் சிறு சிறு துண்டுகளாகக் கத்தரித்து ஒவ்வொன்றாக எடுத்து விழுங்கும். பெண் டுகான் பறவைகளை விட ஆண் டுகான் பறவைகளின் அலகுகள் நீளமாக இருக்கும். மத்திய அமெரிக்காவில் இவை அதிகம் காணப்படுகின்றன. மக்கள் வசிக்கும் பகுதிகளிலும் இவை தாராளமாக நடமாடுகின்றன. காட்டுக்குள்ளும் ஏராளமான டுகான்கள் வசிக்கின்றன.

# மே ஃபிளவர் பார்த்தது உண்டா?



இந்த அழகிய மலரின் பெயர் மேஃபிளவர் ஆண்டுக்கு ஒரு முறை மே மாதம் முதல் வாரத்தில் இந்த வகைச் செடியில் ஒரே ஒரு மலர் மட்டும் மலர்கிறது. ஒரு வாரம் வரை இந்த இளம் சிவப்பு மலர் வாடாமல் இருக்கிறது.

லில்லி போல கிழங்கு வகைச் செடியான இந்த மே ஃபிளவர் கேர்ளாவிலும், கன்னியாகுமரியில் சில பகுதிகளிலும், மலைப் பகுதிகளிலும் தொட்டிகளிலும் வளர்க்கிறார்கள். 15 ஆண்டுகள் ஆனாலும் செடியின் கிழங்கு அப்படியே இருக்கும். ஒவ்வொரு ஆண்டும் புதுச் செடி தோன்றி 'பிளாஸ்டிக்' போல காட்சியளிக்கும் அழகிய 'மே ஃபிளவர்' மலர்கிறது. அதன் பிறகு செடி அழுகி அழிந்துவிடுகிறது. மண்ணுக்குள் கிழங்கு மட்டும் அப்படியே இருக்கிறது.

# உங்கள் பொது அறிவு எப்படி?

1.சூரியக் குடும்பம் என்றால் என்ன?
சூரியனும் அதனைச் சுற்றியுள்ள கோள்களும் துணைக் கோள்களும் சேர்ந்த சமூகம்.

2 சூரியக் குடும்பத்திலுள்ள கோள்கள், இடமும் அதன் பாதைகள் மாறாமலும் இருப்பதற்குக் காரணம்?
சூரிய ஈர்ப்புத்தன்மை.

3 ஒளிமண்டலத்தின் முக்கிய கூறு என்ன?
ஐதரசன்.

4. ஞாயிற்றுத் தொகுதியில் மிகப் பெரிய கோள்?
வியாழன் (88460 மைல் விட்டம்).

5. மிகச் சிறிய கோள்?
புதன்.

6. சூரியனுக்கு அண்மையில் உள்ள கோள்?
புதன்.


7. சூரியனுக்குத் தூரத்திலுள்ள கோள்?
புளூட்டோ.

8. சூரியனில் இருந்து பின்வரும் கிரகங்களின் தூரம் என்ன?
செவ்வாய்... 1417 இலட்சம் மைல்.
வியாழன்... 48 கோடி மைல்.
சனி... 88.7 கோடி மைல்.
வெள்ளி... 67.8 இலட்சம் மைல்.
பூமி... 92.9 இலட்சம் மைல்.

9.சந்திரனுக்கும் பூமிக்கும் இடையில் உள்ள தூரம் யாது?
238,460 மைல்.

10. அதிக துணைக் கோள்கள் உள்ள கோள்?
வியாழன் (I)

## இந்த வாரப் புதிர்




இந்த ஆறு கடித உறைகளில் ஒன்று மட்டுமே சற்று வித்தியாசப்பட்டுள்ளது. அது எது?

## அறிவுத் தேடல்


சென்ற வாரப் புதிரின் விடை : 5,2




## நோய் தீர்க்கும் விளக்கு

அசாம் மாநிலம், குவாஹாட் டியில் நடைபெற்று வரும் சர்வதேச வர்த்தகப் பொருட் காட்சியில், பாகிஸ் தானியரின் கடையில் விற்கப்படும் உப்புப் படிக விளக்குகள், ஆஸ்துமா, நுரையீரல் அழற்சி போன்ற நோய்களைக் குணமாக்கக் கூடியது என்கின்றனர் இதன் தயாரிப்பாளர்கள்.

இந்தச் செய்தி ஆஸ்துமா வினால் பாதிக்கப்படு பவர்களுக்கு ஆறதலாக இருக்கும். ஆனால், இந்த விளக்கை எங்கே பெற்றுக் கொள்வது என்பது கேள்விக் குறியே. எனவே, இது தொடர்பில் எமது நாட்டிலிருக் கும் வைத்தியர்கள் தக்க நடவடிக்கை எடுப்பதை வர வேற்கின்றோம்.



# ஒத்திகை

இயற்கை அழிவுகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுக்கும் அதேவேளை மிருகங்களிடமிருந்தும் பாதுகாக்க முயற்சிப்பது நல்லது. ஆனால், மனித உருவிலுள்ள மிருகங்களால் மனிதன் அழிக்கப்படும்போது அதனை எவ்வாறு தடுக்கப்போகிறீர்கள் ஹீ....ஹீ...

உயிரியல் பூங்காவிலிருந்து விலங்குகள் தப்பினால் அவற்றை எப்படி விரட்டிப் பிடிப்பது என்பதற்கான பயிற்சியை ஜப்பானின் டோக்கியோ நகரப் பூங்காவில் ஊழியர்கள் நடத்துகின்றனர்.

கூண்டிலிருந்து தப்பி ஓடும் வகையில் வைக்கப்பட்டுள்ளது காகிதக் கூழில் தயாரிக்கப்பட்ட காண்டாமிருகம், அது தாக்கி காயமடைந்து கீழே சாய்ந்து கிடக்கிறார் ஒரு ஊழியர். இறுதியாக காண்டாமிருகம் மயக்க மருந்து துப்பாக்கியால் சுட்டு பிடிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் நடக்கும் பயிற்சி இது நல்ல முயற்சி.



# குப்பை சுமக்கும் ஹெர்குலீஸ்

உழைப்பே உயர்வு தரும் என நம்பும் எவருக்கும் வெற்றி நிச்சயம். சுமப்பது குப்பையானாலும் அதையும் மகிழ்ச்சியோடு செய்வது இன்னும் மகிழ்ச்சிதான். ஆகவே, மற்றொருவரை ஏமாற்றாமல் மற்றவரிடம் வறுகாமல் உழைப்பினால் வாழ முடியும் எனப் புறப்பட்ட இப் பெண்மணிக்கு ஒரு ஜே போடு.....

பூமியின் பாரத்தை ஹெர்குலிஸ் சுமப்பதாக கிரேக்க கதை. ஆனால், சீனாவின் குவாங்ஷூ நகரப் பெண்ணோ மலைக்கவைக்கும் அளவுக்கு குப்பையின் பாரத்துடன் சைக்கிளில் அனாயாசமாகச் செல்கிறார்.



படத்தைப் பார்க்கும்போது எந்தப் பகுதியில் எரித்துக் கொல்லப்பட்டவரின் தலையோ என்று எண்ணிவிடாதீர்கள் இது மம்மியின் தலை......

பெரு நாட்டில், லிமாவுக்கு அருகே உள்ள அரிக்யுபா என்ற இடத்தில் ஒரு சிறுவன் மற்றும் நடுத்தர வயது மனிதர் ஆகியோரின் 2 மனித மம்மிகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் நடுத்தர வயது மனிதரின் வயது சுமார் 30 இருக்கும். இந்த 2 மம்மிகளும் சுமார் 700 ஆண்டு பழைமை வாய்ந்தவைகள் ஆகும். அவைகள் தற்போது அந்த நாட்டின் தேசிய கலாசார கழகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் நடுத்தர வயது மனிதரின் மம்மியைப் படத்தில் காணலாம்.

# மம்மிகள் கண்டுபிடிப்பு

# வரவேற்பு



போக் துறைமுகத்துக்கு அதிபர் புஷ் சென்றபோது வரவேற்று மகிழ்ந்த இராணுவ வீரர்களின் குடும்பங்களைப் பார்த்து மகிழ்ச்சியடைந் தவருக்கு, தங்கள் கணவன் மாரைப் பலி கொடுத்துவிட்டு அழுதவர்களின் முகங்கள் தெரியாமல் விட்டிருக்காது. எப்போதுமே யுத்தம் சந்தோசத் துக்குரியது அல்ல, என்றாலும் பயங்கரவாதம், வன்முறை, மனித உரிமை மீறல் என்பவற்றில் ஈடுபட்டு வருபவர் கள் மீது அமெரிக்கா போன்ற பலம் பொருந்திய நாடுகள் நடவடிக்கை எடுப்பதும் இன்றைய தேவையாக மாறி வருகிறது.

அமெரிக்காவின் போக் துறைமுகத்தில் உள்ள இராணுவப் பாசறைக்கு அதிபர் புஷ் சென்றார். ஈராக்கில் அப் பிரிவைச் சேர்ந்த அமெரிக்க வீரர்கள் ஆற்றிவரும் பணிக்கா கப் பாராட்டும், நன்றியும் தெரிவித்தார். தேசக் கொடியுடன் அங்கு நின்றிருந்த இராணுவ வீரரின் மகன் சேஸ் மிடில்டனைத் தோளில் சுமந்து பூரித்தார்.





கபிலேஷ்வர் சுவாசம் CD வெளியீட்டு விழாவில்





ஸ்ரீகாந்த்

**...ஸ், மீனாவின் அன்பு சகோதரன்**

...மாவில் மோகனகிருஷ்ணா இயக்கத்தில் அஜித், மீனா நடித்த படம் 'பட்டணத்துக்கு ரா செல்வி'. அதாவது, பொறந்த ...ல் தங்கச்சி என்ற் வார்த்தை அண்ணன், தங்கை பாசத்தை ... அவரான இந்தப் படம் தமிழில் மொழிமாற்றம் செய்து ...பட்டுள்ளது. இதற்கு 'அன்பு சகோதரன்' என்ற பெயர் சூட்டப்பட்டு ...ள்ளது.



சிம்பு - சோனியா
படம் : கோவில்

**'கம்பீரம்' அறிமுகங்கள்**


சரத்குமார் நடிக்கும் 'கம்பீரம்' படத்தை அரசு சுரேஷ் எழுதி இயக்குகிறார். இதில் தனிகல பரணி, ஜாஸ்பர் ஆகிய இரண்டு அதிரடி வில்லன்களை அறிமுகப்படுத்திய அவர், கதாநாயகி பரணதியை அற்புதமான ஒரு கேரக்டரில் அறிமுகப்படுத்துகிறார். தவிர, மும்பை மாடல் அழகி ராகசீசாயரந்த, நடன இயக்குநர் சாந்தி, பாடகி சங்கீதா, பேபி மோனிகா ஆகியோரையும் சரத்குமார், தயாரிப்பாளர் எஸ்.என்.துரைராஜ் ஆகியோர் ஆதரவு மூலம் தைரியமாக அறிமுகப்படுத்தி இருக்கிறார் சுரேஷ்.

**சரத்குமார் பாடப்போகிறார் !**

திருவள்ளுவர் கலைக்கூடம் சார்பில் கே.பார்த்திபன், தமிழ்ச்செல்வி சேகர் தயாரிக்கும் 'ஏய்' படத்துக்கு 15 இலட்ச ரூபாய் செலவில் மூன்று வித பிரமாண்ட அரங்குகள் அமைக்கப்பட்டு இருக்கிறது. எஸ்.ஏ.சி.ராம்கி அமைத்த இந்த அரங்குகளில் சரத்குமார், நமீதா, வடிவேலு, பரவை முனியம்மா ஆகியோர் பங்குபெற்ற பாடல் காட்சி படமாக்கப்பட்டது. இந்தப் பாடலை சில முன்னணிப் பாடகர்களுடன் இணைந்து வடிவேலு, பரவை முனியம்மா பாடினர். தவிர, தனது சொந்தக் குரலில் சரத்குமார் பாடும் பாடல் ஒன்றும் படத்தில் இடம்பெறுகிறது. இந்தப் படத்தை பக்கா கமர்ஷியல் பட இயக்குநரான ஏ.வெங்கடேஷ் டைரக்ட் செய்கிறார். தேவாவுடைய மகன் ஸ்ரீகாந்த் தேவா இசை அமைக்கிறார்.

**டப்பிங்கில் பிஸியாக....**

ஒளிப்பதிவாளர் ரவீந்தர் மனைவியும், நடிகையுமான நிதயா சினிமாவிலிருந்து விலகி டி.வி தொடர்களில் நடித்து வந்தார். தற்போது டி.வி. நடிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டு, நடிகைகளுக்கு டப்பிங் குரல் கொடுக்கும் பணியில் முழுமூரமாக மூழ்கி இருக்கிறார். ஆங்கிலப் படங்கள் தமிழில் மொழிமாற்றம் ஆகும்போது, அதில் கதாநாயகியாக நடித்துள்ளவருக்கு இவர்தான் டப்பிங் குரல் கொடுக்கிறார். ஆக, டப்பிங்கில் பிஸியோ பிஸி.



பிரியாமணி

**மாறிவிட்டார் சிம்பு**

துடுக்குத்தனமாகவே இருந்த சிலம்பரசன், இப்போது அமைதியின் உருவாக மாறிவிட்டார். யார் எது கேட்டாலும் அதற்கு கோபப்படாமல் பொறுமையாகப் பதில் அளித்து வருகிறார். என்ன விஷயம்? என்று கேட்டால், அவர் மெச்சூர்டு நடிகர் ஆகிவிட்டார் என்ற பதில் கிடைக்கிறது.

ரஜினியை எதிர்க்கும் கட்சி தோல்வி அடைந்தால், நடிகர்களுக்கு மவுசு இருக்கிறது என்று தெரிந்துகொள்ளலாம். அப்படி இல்லாமல் ரஜினியை எதிர்க்கும் கட்சி வெற்றியடைந்தால் நடிகர்கள் அரசியலுக்கு வருவதை மக்கள் விரும்பவில்லை என்று புரிந்துகொள்ளலாம்' என்று ஒரு கணக்குப் போட்டிருக்கிறார்கள். கட்சி ஆரம்பிக்க நேரம், காலம் பார்த்துக்கொண்டிருந்த பல நடிகர்கள் ரஜினியை எதிர்க்கும் கட்சி தோல்வியடைந்தால் நடிகர்களின் பல கட்சிகள் உதயமாகும்.

**...யும் சொல்லும் விஜயகாந்த் ஜோடி**

...வில் அறிமுகமான ஒரு படத்தைப் பற்றி மறைத்து, ஏதோ ...சினிமாவில் நடிக்க வந்ததைப் போல ரீல் விடும் கதாநாயகிகள் ...உண்டு. இப்போது அந்த லிஸ்டில் புதிதாகச் சேர்ந்திருப்பவர் ...இருபத்தைந்து படங்களுக்கு மேல் நடித்த இவர், ...கிருஷ்ணா இயக்கத்தில் உருவாகும் 'கஜேந்திரா' ...விஜயகாந்த் ஜோடியாக நடித்துக்கொண்டிருக்கிறார். ...சொல்கிறார் தெரியுமா? "இது தமிழ்ல நான் ...முதல் படம்..."என்று சகட்டுமேனிக்கு பொய் சொல்கிறார். ...'ஸ்ரீ பண்ணாரி அம்மன்' என்ற படத்தில் கரண் ...நடித்திருந்தவள் யாருக்குத் தங்கையா...? என, ...நடித்த இந்தப் படம்தான் தனது முதல் தமிழ்ப் ...சொன்னால், மார்க்கெட் வேல்யூ குறைந்துவிடும் ...லயா? அடடே, புளுகுவதற்கும் ஒரு அளவு

**...' ரவி ஜோடியாக அசின்**

...செய்து இடிக்கிக்கொண்டிருக்கும் ...' என்ற படத்தில் ஷாம், லைலா ...நடித்துக் கொண்டிருப்பவர் அசின். ...வருகிறதோ இல்லையோ, ...நடித்து வாய்ப்பு வாங்கத் தெரிகிறது. ...ஜெயம் ரவி ஜோடியாக 'சென்னையில்...' என்ற படத்தில் நடித்து வரும் அசின், ...'...சன் ஆஃப் மகாலட்சுமி' என்ற படத்தில் ...எவ்வளவு வேண்டுமானாலும் ஆடைக் ...அசின் பாலிசி. பட்பிழைக்கத் தெரிந்த நடிகை.

**...பட பிடிப்பு ...**

...நடிப்பில் கொடிகட்டிப் பறந்த காலத்தில், மிகவும் ...சென்னையில் ஆங்காங்கே காலி மனைகளை வாங்கிப் ...தற்போது தமிழ்ப் படவுலகில் மறுபடியும் வடிவேலு ...ஒரு பிரமை நிலவுவதால், நடாவென்று ஒரு ...சாலிகிராமம் பகுதியில் பிரமாண்டமாகக் ...சினிமா தலைவாசல். திறப்பு விழா எப்போது

**...**

...படத்துக்கு ...பெருந்தாரி பழனிவேல் ...



ஜெய் ஆகாஷ் - தேவிகா
படம் : ராமகிருஷ்ணன்

**கவுண்டருக்கு வெறுப்பேச்சு**

கவுண்டமணியுடன் இணைந்து நிறைய படங்களில் தன் உடல் மொழியைக் காட்டி நடித்த செந்தில் ... தற்போது ... கவுண்டமணிக்குப் பதிலாக ... வாய்ப்பு ... வடிவேலு, கருணாஸ், விவேக் போன்றவர்கள் ... தொடுக்கடாமலேயே புறக்கணிக்கப்படுகிறார். ஏனிவே, ... கவுண்டமணிக்கு மீண்டும் மார்க்கெட் ... கிடைத்தால் ... மார்க்கெட்டிடும் என்று ... உச்சத்துக்குச் செல்லவேண்டும் இனி, ... தீவிரமாக நம்பும் ... சமீபத்தில் கவுண்டருக்கு செல்போன் மூலம் ஆறுதல் ... சொன்னாராம்.

**நடிகர் ... ?**

... என்ற படத்தில் ஜோடியாக நடிக்கும் ...

**... 8 மனைவிகள்**

**மன்சூர் ...**

சிம்பு நடிக்கும் 'தாசு' என்ற படத்தை ...

**...**



சிம்பு—ஜோ

**காரத்தே கற்ற நடிகர்**

'விபக பாங்க'படத்தில் அறிமுகமான அனுஷ், காரத்தே கலையில் பிளாக் பெல்ட் பெற்றவர். இவரது தந்தை விநியோகஸ்தர் தனியாக காரத்தே பயிற்சிப் பள்ளி நடத்துகிறார். மகன் நடித்த படத்தை ஒரு ஏரியா அவர்தான் வாங்கி இருக்கிறார்.

ரஜினியின் ... மகள் ... படிப்பைத் ... தொடர்ந்து கொண்டிருக்கிறார் ...






## நரகத்தின் சாளரம்

உனக்கு நான்
எழுதும்
ஒவ்வொரு கடிதத்திலும்
கண்ணீர் தன்
கையெழுத்தைப்
போட்டுவிடுகிறது.
இயற்கையும்
உன் நினைவுகளை
என் எண்ணமெல்லாம்
சிறகடிக்கும்
வக்கிரத்தினை
கவிதையால் கற்றறிந்த
இதயத்தால் எப்போதும்
எனக்கும் இம்சைதான்.
மென் காரிகையும்
தென்றலும்
தொட்டுச் செல்லும்
உணர்வுகள்
தீயைப் போலவே
தேகமெல்லாம்
தணலாய் தகிக்கிறது.

பேனா காகிதங்களின்
நடனமெல்லாம்
காதலைச் சிதறியிருக்கிறது.

என் ஆட்டோகிராப்பில்
நான் எழுதி
உன் கையெழுத்தைப்
போட்டுவைத்திருக்கிறேன்.

காரணம்
உன்னை ஏமாற்றவல்ல
என்னை ஏமாற்றிக்கொள்ள....
*பெ.விக்னேஸ்வரன், ஹட்டன்.*



## கண்டாயோ!

அந்திசாயு முன்னர்
அடிவானில் ஒளிவீசி
அர்ச்சனை புரியும்
ஆனந்த வெண்மதியே,
கைதவறிப்போன
என்னவளைக் கண்டாயோ!
பென்னம் பெருந்தோப்பில்
பூத்திருக்கும் புதுமலராய்
ஆகாயப் பரப்பதிலே
கண் சிமிட்டும் தாரகையே,
கைதவறிப்போன
என் காதலியைக் கண்டாயோ!
அந்திச் சிவப்புக்குள்
அஸ்தமித்துப் போய்
குடதிசையைக் குடைந்து வரும்
காலைக் கதிரவனே
கைதவறிப்போன
என் நெஞ்சில் நிறைந்தவளைக்
கண்டாயோ!
தெம்மாங்குச் சோலையிலே
தென்னை இளங்கீற்றைத்
தொட்டுத் தடவி வரும்
இனிமைப் பூங்காற்றே,
கைதவறிப்போன
என் மடக்கொடியைக் கண்டாயோ!
தென்றல் சுழன்றுவரும்
அந்திப் பொழுதினிலே
தேடலில் தவழ்ந்து வரும்
வானமுதத் தேனருவியே,
தொலைந்துபோன
என் வஞ்சியவளைக் கண்டாயோ!
பருவ காலமறிந்து
பாரிலுள்ளோர் வியந்துநிற்க
பருவ மழை கொண்டுவரும்
கார்காலக் கருமுகிலே
கை நழுவிப் போன
என் நங்கையவளைக் கண்டாயோ!
*ஜமால்தீன் அஸ்ஹர், புல்மோட்டை.*



## இதயத்தை திருப்பிக் கொடு

உயிரே,
நீ வானத்திற்குச் சொந்தமானவளா? -
அல்லது
மேகத்திற்குச் சொந்தமானவளா?
இதயமே,
இது என்ன கேள்வி
வானவள் என்னைப் பெற்ற தாய்.
மேகமானவன் என்னோடு வாழ விரும்பி
என் வழி வந்து போகும் காதலன்.
மேகத்தை நான் வெறுக்கவில்லை.
அவனைப் புரிந்து கொள்கிறேன்.
ஆனால்,
வானவள், இடையிடை வந்துபோகும்
வால்வெள்ளியோடு
போ என்று சொன்னாலும்
நான் போக வேண்டியவள்.
மேகமே,
என்னைப் புரிந்து கொண்டு - என்
இதயத்தைத் திருப்பிக் கொடு.
*கா.யாழினி.*



## மீண்டும் பிறப்போம்

கண்களில் கண்ணீர்
காயங்கள்!
சோகங்களின்
முற்றுகை
விடியாத இரவு.

கண்சிமிட்டும்
நட்சத்திரங்கள்
என்னைப் பார்த்து
கண்ணீர் வடிக்கின்றன...!

காற்றும் எனக்காக
கண்ணீர் சிந்தி
அழுகின்றது
ஏனோ என்னுள்
வெறுமை.

நீ...வீட்டுப் போனதால்
நாதியற்றுப் போனது
உணர்வு.

மேகம் உதறிவிட்ட
நீரானேன்
மரமில்லாத
கொடியானேன்
வான் இல்லாத
நிலவானேன்
இவைதீர
மீண்டும் பிறப்போம்
அப்போது எனக்கு மட்டும்
நீ என்ற வாசகத்தோடு.
*செல்வி சுஜானா,*
*புதுக்குடியிருப்பு.*

## திருவிளையாடல்

உனக்கென்ன ஒரு வரியில் சொன்னாய்?
என் ஏக்கத்தைப் புரிந்து கொண்டவனாய்
என் வயதின் வாட்டத்தை அறிந்தவனாய்
இனி இதய சந்தங்களில் எல்லாம்
நம் பெயர் ஒலிவடிவம் எடுக்கும் என்றாய்.

என்ன அதிசயம்! நொடிப் பொழுதே நீ
சொன்னது நடந்தது.
நாளொரு மேனியாய் நான் தூங்கும் நாழிகை
குறைந்தது. சிரித்த என் முகத்தில்
சின்னமுத்து மாதிரிகள் உருவெடுக்க
உயிருள்ளும் ஊடுருவி உட்கார்ந்து விட்டாய்.

காதல் சாஸ்திரங்களால் காவியம் தீட்டினாய்
சந்தனமுகம் என்றாய் இனி சாதிக்க
வேறில்லை என்றாய்
சிலவேளை எனை சோதிக்க மனம் பாதிக்க
பார்க்காமல் வேறு சென்றாய்

பின் பாவிபோல் வந்து என் ஆவி நொந்து
ஆத்திரம் அடங்கிப் போக அன்பு
கொண்டு எனை அடக்கிப் போட்டாய்.
ஒரு வருடம் ஓடிவிட
ஒரு வரியில் சொன்னாய்?
இருந்த உயிரும் எரிந்து போக,
உள்ளம் அழுது சாக,
எனை ஒண்டியாக்கிவிட்டு
என் திருவிளையாடலில் இதுவும்
ஒன்று என்றாய்.
*மேகல் ஜெனன், மன்னார்.*



## நட்பு

நட்பு....
சாதாரணமாகத்தான் இருந்தது
எனக்கு
உன்னை
காணும் வரை

ஏதேனும்
எதிர்பார்ப்புகளுடனே
அன்பு காட்டும்
உலகில்
எந்த எதிர்பார்ப்பும் இல்லா
உன்
அன்பை எண்ணி
வியந்துபோகிறேன்.

தோழனே!
மொழிகளோ.....
தூரங்களோ.....
வயதோ....
மற்ற
எதுவுமே
நட்பை
நிர்ணயிப்பதில்லை...
உன்னாலே
புரிந்துகொண்டேன்.

என்
வாழ்க்கைத் தோட்டத்தில்
எத்தனையோ நட்பு பூக்கள்
ஆனால்
உன்
நட்பைப் போல் எதுவும்
மலர்ந்து மணம் வீசவில்லை.
கால வெள்ளத்தில்
சிதறுண்டு போகும் உறவுகளில்
தோழா.... தொடர்வாயா
உன் நட்பை
இறுதிவரை....
*அகிலா ஜெகதீஸன்,*
*கடியன்லேன.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

“உங்களுடைய கருத்தில் சிறந்த கவிதை என்றால் எது” என்று ஒரு முறை சுந்தர ராமசாமியிடம் கேட்டேன். அதற்கு அவர் பின்வருமாறு ஒரு பதிலைச் சொன்னார். அது என் வாழ்க்கையில் மறக்க முடியாத பதிலாகிவிட்டது.

“நல்ல கவிதை எது என்று நீங்கள் என்னைக் கேட்க, அதற்கு நான் ஒரு பதிலைச் சொல்ல, என் பதிலை வைத்துக்கொண்டு இந்த உலகில் உள்ள கவிதைகளையெல்லாம் நீங்கள் ஆராய்ந்தால், கடைசியில் சுந்தர ராமசாமியின் கவிதைகள்தான் சிறந்த கவிதை என்ற முடிவுக்கு நீங்கள் வரவேண்டி வரும்” என்றார்....

‘ஒரு மனிதனின் வாசிப்பு. எழுத்து மற்றும் வாழ்க்கை அநுபவங்களுக்கு ஏற்றவாறு ஒரு குறிப்பிட்ட தருணத்தில் கவிதை அந்த மனிதன் மூலமாகக் தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறது...

கோட்பாடுகளுக்காகவோ, கொள்கைகளுக்காகவோ எழுதினாலும் சரி, சில புத்தகங்களைப் படித்துவிட்டோ, சில பிரசங்கங்களைக் கேட்டுமோ, சில தலைப்புகளுக்காகவோ எழுதினாலும் சரி, அப்படி எழுதப்படுகின்ற கவிதைகளெல்லாம் குப்பைதான். கவிதை பிறப்பதற்கு ஒரு மனமும் ஒரு கணமும் தேவை. இது வெளியிலிருந்து பெற முடியாதது. காத்திருக்க வேண்டியதுதான். இதுவே என் அநுபவம்.

மேற்கண்டவாறு தனது “நதியின் கால்கள்” என்ற கவிதைத் தொகுப்பின் முன்னுரையில் குறித்திருக்கிறார் நாகூர் ரூமி. ஆங்கிலப் பேராசிரியராகப் பணிபுரியும் நாகூர் ரூமியின் இயற்பெயர் முஹம்மது ரஃபி.

நாகூர் ரூமியின் “நதியின் கால்கள்” தொகுப்பிலிருந்து குறுங்கவிதைகள் சில.

### அவ்வளவுதான்

*எனக்கு இறப்பில்லை*
*ஏனெனில்*
*நான் இன்னும்*
*பிறக்கவே இல்லை*
*வெளியே வர*
*முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்*
*அவ்வளவுதான்.*

### கவிதை

*தூக்கம் பொசுக்கி*
*இரவுகள் எரியும்*
*விடியல் சாம்பல் தட்டும்*
*இருந்தும்*
*வெள்ளைத் தாள்கள்*
*எனைப் புன்னகைக்கும்*
*உலர்ந்த அலைகளில்*
*பதிந்த விரல்களை*
*நனைந்த அலைகள்*
*நக்கிப் பார்க்கும்*
*கண்கள் வெறிக்க*
*வலி மட்டும் மிஞ்சும்.*

### ஞாபகம்

*மறதியைப் போக்க*
*மருத்துவர் கொடுத்த*
*மாத்திரை விழுங்க*
*மறந்து போனது*
*ஞாபகம் வந்தது.*

### தாண்டுதல்

*சில கணங்கள் போதும்*
*நாளொன்றுக்கு*
*ஆனால் கணங்கள்*
*என்னைக் குனியவைத்து*
*தாண்டித் தாண்டிப் போகின்றன*
*என் பன்மொழி அகராதிக் கணங்களில்*
*என்றைக்காவது சில*
*தாய்மொழிக் கணங்கள் தட்டுப்படும்*
*அன்றைக்காவது மூச்சுவிடும்*
*அக்கணங்களை நான்*
*தொகுக்க வேண்டும்.*
*அன்றைக்காவது*
*கணங்களைக் குனியவைத்து*
*நான்*
*தாண்ட வேண்டும்.*

### ஒளி

*தொலைந்து விட்டது நிலவு*
*தொலைவில் எங்கோ*
*அதோடு நிலவொளியும்*
*இருந்த ஒரே விளக்கும்*
*அணைந்து போனது*
*இருந்தும் என் இரவுகள்*
*ஒளிர்கின்றன.*
*உன் நினைவில்.*

### ஆயிரங்காலத்துப் பயிர்

*தலைக்குத் தெரியாமல்*
*நாக்குவழி நழுவும் ஒருசொல்*
*எச்சிலோடு*
*பற்றிக் கொள்ளும் தீ*
*கணத்தில் கன்னத்தில்*
*விரல்களின் சிவப்பு நிழல்.*

*முத்தமிட்ட உதடுகளில்*
*முண்டியடிக்கும் வார்த்தைகள்*
*நூறு டிகிரியில் –*
*நொண்டியடிக்கும் வாழ்க்கை.*

*ஆயிரங் காலப் பயிரின்*
*கிளையொன்று வெட்டப்படும்*
*சப்தமின்றி*
*வேர்கள் தீய்க்கப்படும்*
*சப்தமின்றியே.*

### அம்மா

*குழந்தை பிறக்கும் கணத்திலே*
*பிறக்கிறாள்*
*அம்மா.*

### அழகு(ம்)

*கறுப்பாயிருந்தாள்*
*அதனால் அழகாயில்லை*
*கறுப்பாயிருந்தாள்*
*அதனால் அழகாயிருந்தாள்*
*லைலாவினும் ‘அழகி களை*
*காட்டிய போது கேட்டானாம்*
*கயஸ்*

*“லைலாவை நீங்கள்*
*கண்டதுண்டா*
*என் கண்களால்?”*

### அலைகள்

*இந்த அலைகள்*
*என்றுமே*
*எதுவுமே சாதித்ததில்லை.*

*சப்தமும் எழுச்சியும்*
*குதிப்பும் கொதிப்பும்*
*போட்டியும் பொறாமையும்*
*நுரைப்பும் முறைப்பும்*
*துரத்தலும் முந்தலும்*
*அமுக்கமும் ஆரவாரமும்*
*தரை தொட்டுச் சாகத்தான்.*

*எப்போதுமே தோல்விதான்*
*பூமியின் மகா*
*பொறுமைக்கு முன்னால்*
*இந்த அலைகளுக்கு.*

*அலைகளின் சாதனை*
*அவைகளின் மரணம் தான்.*

*வானத்தில் தான் என்றாலும்*
*சலனமின்றி இருக்கும்போது தான்*
*குளத்திலும் தெரிகிறது*
*சந்திரன்.*

*முத்திருக்கும் இடத்தில்*
*சப்தமில்லை.*



### பூவின் பதில்

*ஒன்றுமே*
*செய்யமுடியவில்லை*
*என்னால் அந்தப்*
*பூவை*
*கடந்து போனாலும்*
*– அதன் மீது*
*நடந்து போனாலும்*
*கசக்கிப்*
*போட்டாலும்*
*நசுக்கிப்*
*போட்டாலும்*
*பறித்து எறிந்தாலும்*
*முகர்ந்து*
*பார்த்தாலும்*
*மென்று பார்த்தாலும்*
*மன்னித்து*
*விடுகிறது அந்தப் பூ*
*தாயைப் போல.*
*தாய்மையும்*
*பூமையும்*
*ஒன்றுதான் போலும்*
*என்னதான்*
*செய்யினும்*
*அதன் ஒரே பதில்*
*நெஞ்சம் நிறைக்கும்*
*நறுமணம்!*

## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி



பெயர் : நூ.அகிலன்
வயது : 22
முகவரி : குமுளமுனை, 7 வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு.
பொழுதுபோக்கு: வானொலி, ரிவி, பத்திரிகை வாசித்தல்.



பெயர் : கே.ஆர்.கதிர்வேந்தன்.
வயது : 22
முகவரி : தலை மன்னார் பியர், தலைமன்னார், மன்னார்.
பொழுதுபோக்கு: தினமுரசு வாசித்தல்.



பெயர் : எம்.ஏ.ஹைறுள்ளா
வயது : 20
முகவரி : இல. 549, சிராஜ் நகர், தம்பலகாமம்.
பொழுதுபோக்கு : கவிதை, தினமுரசு, வானொலி.



பெயர் : ச.கமல்ராஜ்
வயது : 17
முகவரி : கோவில் வீதி, பனிச்சங்கேணி.
பொழுதுபோக்கு : பத்திரிகை, புத்தகம்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## பளபளக்கும் சமையல் அறை வேண்டுமா?

சுத்தமான சமையல் அறையில் சமைக்க வேண்டும் என்றால் எல்லோருக்கும் பிடித்ததுதான். ஆனால், சமையல் அறையைச் சுத்தம் செய்வது யாருக்கும் பிடிக்காத ஒன்று.

அதிக சிரமமின்றி, குறைந்த நேரத்தில் பளபளப்பான, சமையல் அறையைப் பெற உங்களுக்காக சில குறிப்புகள்.

**அலுமாரி :**

முதலில் சமையல் அறையில் உள்ள அலுமாரிகளைச் சுத்தம் செய்வது நல்லது. அதில் உள்ள பொருட்களைக் கீழே வைத்துவிட்டு காய்ந்த துணியால் தூசி யைத் துடைத்துவிடவும்.

ஒரு மேசைக்கரண்டி எலுமிச்சை பழச்சாற்றுடன் 2 மேசைக் கரண்டி தேங்காய் எண்ணெய் என்ற விகிதத்தில் தேவையான அளவு பாலிஷைத் தயாரிக்கவும். உங்கள் மரத்தால் ஆன அலுமாரிகளை இதைக் கொண்டு பாலிஷ் செய்யவும்.

**ஃபிரிஜ் :**

ஃபிரிஜின் உள் பக்கத்தைச் சுத்தம் செய்த பிறகு, வெளிப் பக்கத்தைச் சுத்தம் செய்யவும்.

1/4 கோப்பை பேகிங் பவுடரை 1/2 லீட்டர் தண்ணீரில் கலக்கவும். இதைக்கொண்டு ஃபிரீஜர் மற்றும் உள் பக்கத்தைச் சுத்தம் செய்யவும்.

வெளிப் புறத்தை சோப்பு நீரில் நனைத்த துணியால் சுத்தம் செய்யவும்.



**மிக்ரோவேவ் ஒவன் :**

ஒவனில் வைக்கக் கூடிய பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பவும். அதில் சில துளிகள் எலுமிச்சை சாறை சேர்த்து ஒவனில் வைத்துக் கொதிக்கவிடவும். அதன் பிறகு காய்ந்த துணியால் உட்புறத்தைத் துடைத்துவிடவும்.

வெளிப் புறத்தை சோப்பு நீரில் நனைத்த துணியால் சுத்தம் செய்யவும்.

**டைல்கள் :**

சுவரில் உள்ள டைல்களை (Tiles) முதலில் சுத்தம் செய்துவிட்டு தரையில் உள்ள டைல்களை சுத்தம் செய்யவும்.

ஒரு வாளி தண்ணீரில் 3 மேசைக் கரண்டி பாத்திரங்களை சுத்தம் செய்யும் லிக்விட்டை சேர்க்கவும். அதைக் கொண்டு முதலில் சுவரையும் பிறகு தரையையும் சுத்தம் செய்யவும்.

அடுத்தபடியாக ஒரு கோப்பை வினிகரில் (காடியில்) 1/2 கோப்பை தண்ணீரைச் சேர்த்து பாலிஷ் தயாரிக்கவும். அதைக் கொண்டு டைல்களை துடைக்கவும்.

**அடுப்பு, மேடை :**

அடுப்பிலும் அதை வைக்கும் மேடையிலும் சோடாவைத் தெளித்து 5 நிமிடம் ஊற வைக்கவும். அதன் பிறகு இலேசாகத் தேய்த்து அழுக்கை நீக்கவும்.

இதோ உங்கள் பளபளக்கும் சமையல் அறை தயார்!

## அழகான புருவங்கள்

புருவங்கள் முகத்தின் சிறந்த அம்சங்களில் ஒன்று. புருவங்கள் அழகாக இருந்தால் உங்கள் கண்களில் அழகு கூடும். முகமே புதுப் பொலிவு பெறும். ஆனால், புருவங்களைச் சரியாக வடிவமைப்பதே பலருக்குப் பெரும் பிரச்சனையாக உள்ளது!

புருவங்களை உங்கள் முகத்துக்கு ஏற்ற விததத்தில் வடிவமைக்க சில குறிப்புகள்:



**தேவையான பொருட்கள் :-**

டுவீஜர் (புருவத்தில் உள்ள தேவை இல்லாத முடிகளை அகற்ற)

புருவத்திற்கான பிரஷ் (பல் தேய்க்கும் பிரஷ் கூட உபயோகிக்கலாம்)

ஆஸ்ட்ரின்ஜென்ட் (சருமத்தை மிருதுவாக்கி வலியைக் குறைக்க)

கண்ணாடி (அவசியம் தேவை)

சிறிய கத்தரிக்கோல் (புருவத்தின் முடியை சரி செய்ய)

ஐபுரோ பென்சில்

முதலில் புருவத்தை மேல் நோக்கி பிரஷ் செய்துவிடவும். புருவத்தின் வளைவை விட நீட்டமாக உள்ள முடிகளைக் கத்தரியால் வெட்டி விடவும்.

புருவங்கள் கண்களின் ஒரு முனையில் ஆரம்பித்து மறு முனையில் முடிய வேண்டும் என்பதை மறக்காதீர்கள்.

நீங்கள் எந்த வடிவத்தில் உங்கள் புருவத்தை வடிவமைக்க விரும்புகிறீர்கள் என்பதை முடிவு செய்துகொள்ளுங்கள். இதோ தற்போது ஃபேஷனில் உள்ள சில வடிவங்கள்.

ஆஸ்ட்ரிங்ஜென்டை புருவத்தின் மேல் தடவவும்.

புருவத்தின் மேல் பக்கத்திலிருந்து முடியை எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். புருவத்தின் கீழ் உள்ள முடிகளை ஒவ்வொன்றாக டுவீஜரால் எடுக்கவும்.

ஒரு பக்கம் புருவத்தைச் சரி செய்த பிறகு மறுபக்கமும் அதே வடிவத்தில் அமைய வேண்டும் என்பதைக் கவனத்தில் வைக்கவும்.

அடிக்கடி கண்ணாடியில் சரி பார்க்கவும்.

ஐபுரோ பென்சிலால் புருவத்தில் உள்ள காலியான இடங்களை நிரப்பவும்.

## கருகரு கூந்தல் வேண்டுமா?

சுத்தமான தேங்காய் எண்ணெயில் கறிவேப்பிலைத் துளிர் சேர்த்துக் கொதிக்க வைத்து கூந்தலில் தடவிக்கொள்ளுங்கள்.

ஒவ்வொருமுறை எண்ணெய் தடவும்போதும் மண்டையோட்டுப் பகுதித் தோலை (Scalp) விரல் நுனியால் மசாஜ் செய்யத் தவறாதீர்கள்.

ஷாம்பூ, சோப்பு வகைகளுக்கு 'டாட்டா' சொல்லுங்கள். அதற்குப் பதில் சிகைக்காய், அரப்பு, பாசிப்பருப்பு மாவு போன்ற இயற்கையானவற்றைத் தேர்ந்தெடுங்கள்.

உணவில் கீரை, முளைகட்டிய பயறு வகைகள், உலர் திராட்சை, பேரீச்சை போன்றவைகளைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

இரவில் பால் குடிப்பதை மறக்க வேண்டாம்.

கூந்தலில் அழுக்கு, சிக்கு சேராமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

எப்போதும் சுத்தமான நீரிலேயே கூந்தலைக் கழுவ வேண்டியது அவசியம். குளிர்ந்த அல்லது இளம் சூடான தண்ணீரையே பயன்படுத்துங்கள்.



டென்சனைக் குறையுங்கள். மகிழ்வோடு இருங்கள். அகத்தின் மகிழ்ச்சி முகத்தில் மட்டுமல்ல முடியிலும் தெரியும்.

வாசனைத் திரவியங்கள், பாடி ஸ்பிரே போன்றவைகளைத் தவி ருங்கள்.

அடிக்கடி தலை வலியா? அலட்சியப் படுத்தாதீர்கள். டாக்டரிடம் காட்டுங்கள். தலைவலியால் முடி உதிர்வது நிச்சயம்.

பேன், பொடுகு, முடி நுனி வெடிப்பு போன்ற வகை களுக்கு டாக்டரின் ஆலோசனையைப் பெறுங்கள்.

## சிறுநீரகக் கல் எதனால் ஏற்படுகிறது?

சிறுநீரகத்தில் கல் உருவாகினால் அது சொல்ல முடியாத அளவிற்கு பெரும் அவஸ்தையை ஏற்படுத்திவிடும்.

சிலர் கரடுமுரடான ஓடு, மண் போன்றவற்றைக் கூட கடித்து மென்று சாப்பிட்டுவிடுவார்கள். ஒன்றும் செய்யாது. ஆனால், ஒரு சிலருக்கு தண்ணீரிலோ, சாப்பிடும் சோறிலோ சுண்ணாம்புச் சத்து அதிகம் இருந்தால் சிறுநீரகத்தில் கற்கள் ஏற்பட்டு சிரமப்படுகின்றனர். இதற்குக் காரணம், அவரவர் உடலின் உட்கிரகிப்புத் தன்மைதான்.

அதாவது, நமது உடலில் உள்ள பாராதைராய்டு சுரப்பிகள் தான், சுண்ணாம்புச் சத்தை நன்கு கிரகிக்கச் செய்து எலும்பு, பற்கள் போன்றவற்றை வலுவடையச் செய்கின்றன. அந்தப் பாராதைராய்டு சுரப்பிகள் நன்கு இயங்காதபோது உட்கிரகிப்புத் தன்மை குறைந்து சிறுநீரகக் கல் உண்டாக வழி ஏற்படுத்திவிடுகிறது.

சிறுநீரகத்தில் கல் தோன்றியிருந்தால் அவர்கள் கல்சியம் சத்தை பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். முடிந்தளவு சுண்ணாம்பு கலந்த குடிதண்ணீரைத் தவிர்ப்பது நல்லது.

## நலமாக வாழ்வோம்

### படகு ஆசனம் நவ்காசனம்


"குடல் ஏற்றம் தெரியாமல் கோடி வைத்தியம் பார்த்தானாம்" என்பது பழமொழி.

வயிற்றின் நடுப் பகுதி தொப்புள் ஸ்தானம் 'ஸோலார் பிளக்ஸ்' என்று கூறுவர். தமிழில் வயிற்று மூளை என்று பெயர். காரணம் நமது மனநிலைக்கு ஏற்ப இப்பகுதி மேல் நோக்கி நகர்வதை குடல் ஏற்றம் என்று கூறுவர். இதை எந்த மருத்துவ சிகிச்சையாலும் குணம் செய்ய முடியாது. நகர்ப்புறங்களில் இன்றும் உச்சி முடி எடுத்தல் அல்லது சொருகு எடுத்தல் என்ற முறையில் இதைக் குணம் செய்வர்.

அப்படி மேல் நோக்கி அல்லது கீழ் நோக்கி குடல் நகர்வதால் நமக்கு ஏற்படும் விளைவுகள்:

1. வயிற்றில் எரிச்சல்.
2. தொப்புளைச் சுற்றி வலி.
3. அதிக வாயு பிரிதல்.
4. செரியாமை.
5. மலச்சிக்கல்.
6. வயிற்றுப் போக்கு.
7. வாந்தி எடுத்தல் அல்லது வாந்தி வருவது போல் இருந்தல்.
8. கண்பார்வை குறைதல்.
9. இதய படபடப்பு.
10. தூக்கத்தில் விந்து வெளியேறுதல் அல்லது சிறுநீர் போதல்.
11. பெண்களுக்கு வெள்ளை படுதல்.
12. மாதவிடாய் கோளாறுகள்.
13. குழந்தை இன்மை.
14. இளநரை ஏற்படுதல்.
15. பல் கோளாறுகள்.
16. தலையில் வழுக்கை ஏற்படல் போன்ற கோளாறுகள் தோன்றலாம்.

இவைகள் வராமல் இருக்க இவ்வாசனப் பயிற்சிகள் மிகவும் உதவுகின்றன.



**பலன்கள்:**

1. வயிற்றுத் தசைகள், உள் உறுப்புகளுக்குப் பயிற்சிகொடுப்பதால் கணையம் நன்கு இயங்குகிறது. அதனால் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தலாம்.
2. நரம்புத் தளர்ச்சியைப் போக்குகிறது.
3. வயிற்றில் தோன்றும் புழுக்களையும் பூச்சிகளையும் எளிதில் மலத்தின் மூலம் வெளியேற்றுகிறது.
4. நுரையீரல், கல்லீரல், கிட்னி, மலக்குடல் ஆகியவற்றின் வேலைகளை துரிதப்படுத்துகிறது.
5. ஆண், பெண்களின் போக சக்தியை அதிகப்படுத்துகிறது.
6. உந்திக்கமலம் (தொப்புள் - மணிப்பூரக சக்கரம்) இடம் பெயராதவாறு காப்பாற்றுவதோடு ஏற்கெனவே இடம் பெயர்ந்திருந்தாலும் சரி செய்கிறது.
7. நல்ல ஜீரண சக்தியை அளிக்கிறது.
8. இளமையைக் காப்பதில் இவ்வாசனம் பெரும்பங்கு வகிக்கிறது.

**செய்முறை:**

1. விரிப்பின் மீது கால்களை ஒன்று சேர்த்து மல்லாந்து படுக்கவும்.
2. இரண்டு கால்களையும் 90 பாகைக்கு உயர்த்தவும்.
3. கால் மூட்டுப் பகுதிகளை இரண்டு கைகளால் இறுகப் பிடிக்கவும்.
4. கால்களை மடிக்காமல் வேகமாகப் பூமியை நோக்கிக் கொண்டு வரவும். அதே நேரத்தில் உடம்பை பூமியிலிருந்து உயர்த்தி, இடுப்பு புட்டபகுதி மட்டும் தரையின் மீது இருக்கும்படி வைத்து சமநிலைப்படுத்தவும்.
5. சமநிலைக்கு உடம்பும் கால்களும் வந்ததும் கைகளைப் பிரித்து உள்ளங் கைகளை கால் முட்டியின் மீது சற்று உயர்த்தி நிறுத்தவும். இது ஒரு படகு நீரில் மிதக்கும் அமைப்பு போன்று இருக்கும்.
6. 15 எண்ணிக்கைகள் அப்படியே சாதாரண மூச்சில் இருந்து விட்டு, முதலில் தலையை தரைமீது கொண்டுவந்து படுக்கவும். பிறகு கால்களைத் தரைமீது வைத்து சிறிது ஓய்வு எடுக்கவும். இதுபோல் இவ்வாசனத்தை 3 தடவைகள் செய்ய வேண்டும்.

**குறிப்புகள்:**

1. உடம்பைப் பூமியிலிருந்து உயர்த்த முடியாதவர்கள் ஒரு வாங்கின்மீது முதலில் கால்களை வைத்துவிட்டுப் பிறகு கைகளை ஊன்றி எழுந்து இவ்வாசனத்தைப் பழகலாம்.
2. அடி முதுகு வலி உள்ளவர்கள் இவ்வாசனத்தைச் செய்யக் கூடாது.
3. முதல் மூன்று நாட்கள் அடி வயிற்றில் சிறிது வலி தோன்றும். 4 ஆம் நாள் வலி குறைந்து வலி போய்விடும். அவசரம் வேண்டாம்.
4. காலை கண்விழித்து எழுந்ததும் படுக்கையிலேயே இவ்வாசனத்தைச் செய்து வந்தால் உடலில் சுறுசுறுப்பு தோன்றி, மலம் இலகுவாக வெளியேறும். நாள் முழுவதும் உற்சாகமாக இருக்கும்.

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது :* ஷோபா

### கல்கண்டு வடை

**தேவையான பொருட்கள் :**

| | |
|---|---|
| உளுத்தம் பருப்பு : | 100 கிராம் |
| பச்சரிசி : | 1 மேசைக் கரண்டி |
| கல்கண்டு : | 100 கிராம் |
| எண்ணெய் : | தேவையான அளவு |
| உப்பு : | 1 சிட்டிகை |

**செய்முறை :**

1. உளுத்தம் பருப்பை 1 மணிநேரம் ஊற வைக்கவும்.
2. ஊறிய பருப்பை வடிதட்டில் அள்ளிவைத்து தண்ணீரை வடியவிட வேண்டும்.
3. தண்ணீர் சேர்க்காமல், கல்கண்டையும், உளுத்தம் பருப்பையும் சேர்த்து அரைத்துக்கொள்ள வேண்டும்.
4. வாணலியில் எண்ணெயைக் காயவைத்து, தண்ணீருக்குப் பதிலாக எண்ணெயைத் தொட்டுக்கொண்டு வடைகளைத் தட்டிப் போட்டு, பொன் நிறமாக வெந்தவுடன் எடுக்கவும்.
5. மிதமான தீயில் வடைகளைப் பொரித்து எடுக்கவும். எண்ணெய் அதிகம் காய்ந்து விட்டால் மேல்புறம் சிவந்துவிடும், உள்ளே மாவாக இருக்கும். மாவு தண்ணீர் அதிகம் ஆகிவிட்டால், சிறிதளவு பச்சரிசி மாவைக் கலந்துகொள்ளவும்.




அங்கம் 38

நான் சிஸ்டரிடம் கேட்டபோது, தற்செயலாகக் கடல் அலைகளின் அருகில் சென்றபோது, உள்ளே இழுக்கப்பட்டு தத்தளித்ததாகத்தான் அவர்களுக்குத் தகவல் சொல்லியிருக்கிறார் அர்ஜுன் என்பது தெரிய வந்தது.

நான் குழப்பமான எண்ணங்களுடன் படுத்துக்கொண்டேன்.

ஆஸ்பத்திரியிலிருந்த மூன்றாவது தினம் நான் பூரணமான தெம்பு பெற்றபோது இனி என்ன செய்வது என்கிற கேள்வி மீண்டும் எழுந்தது. அர்ஜுன் தினம் மலர்க் கொத்துடன் வந்து கொஞ்ச நேரம் பேசிவிட்டுப் போவார். நான் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருப்பேன். அந்தச் சம்பவத்தைப் பற்றி எதுவும் பேசவில்லை. மாமனாரும் மாமியாரும் வந்தபோது கூட எலக்ஷன், எங்கள் வீட்டருகில் ஸோடியம் விளக்குகள் போட்டது போன்ற விஷயங்கள்தான் பேசினார்கள். ஒருவரும் அந்த விபத்தைப் பற்றிய பேச்சு எடுக்கவில்லை. ஒருநாள் காயத்ரி வந்து பார்த்தபோது, நானே அந்தப் பேச்சை எடுத்தேன்.

"காயத்ரி நான் ஏன் அந்த மாதிரி செய்தேன்னு அர்ஜுன் சொன்னாரா?"

"சொன்னான்."

"அவ யாரு?"

காயத்ரி யோசித்து, "ரேகா நான் உண்மையைச் சொன்னா அதைத் தாங்கிக்க மனோபலம் இருக்கா உனக்கு?"

"உண்மை எனக்குத் தெரியுமே காயத்ரி."

"உனக்குத் தெரிஞ்சதுக்கு மேலே கொஞ்சம் இருக்கு. நான் இதை அர்ஜுனோட அனுமதியோட



உனக்குச் சொல்றேன். இப்ப வேண்டாம்னா அப்புறம் தக்க சமயத்தில சொல்றேன். ஆனா உனக்குத் தெரிஞ்சாகணும். அர்ஜுனுடைய மனைவி என்கிற உரிமையிலே..."

"என்ன சொல்றீங்க?"

"அந்தப் பொண்ணு, ஓட்டல்ல பார்த்தே இல்லை?"

"ஆமாம்."

"அவளோட அர்ஜுனுக்கு கல்யாணத்துக்கு முன்னாடியே சினேகிதம் இருந்திருக்கு. அவன் யாரை கல்யாணம் செய்துக்கறதுன்னு திணறிக்கொண்டு இருந்தான். கீதாவை செய்துக்கறதா பேச்சு அடிபட்டது, கொஞ்சக் காலம். அதற்கப்புறம் இந்த ரஞ்சனி.

"எல்லாத்தையும் கல்யாணத்துக்கு அப்புறம் நிறுத்திட்டதா என்கிட்ட சத்தியம் அடிச்சுச் சொன்னான். இந்த ரஞ்சனியை இன்னும் விடலைன்னு தெரிஞ்சது. இப்ப நான் அவன்கிட்ட பளிச்சுன்னு சொல்லிட்டேன். ரேகா உன்னை விட்டுப் போய்டுவா! ரேகா மாதிரி ஒரு ஜெம் இருக்க முடியாது. அவளை இழக்காதே. உடனடியா ரஞ்சனியை கட் பண்ணிடுன்னு... ஆமாம் நீ அன்னிக்கு என்ன பார்த்தே. ரஞ்சனி கூட பேசிண்டிருந்ததைப் பார்த்தியாமே, அதுக்கு இத்தனை கோவமா?"

"படுக்கைல படுத்துண்டு பேசிக்கிட்டு இருந்தாங்க!"

"ஓ! ஸாரி." காயத்ரி நாக்கை கடித்துக்கொண்டாள்.

"காயத்ரி நான் ஒண்ணு கேக்கலாமா?"

"கேளு."

"இதெல்லாம் என்கிட்ட முன்னாலேயே கல்யாணம் ஆறதுக்கு முன்னாடியே சொல்ல வேண்டாமா?"

"சொன்னா நீ கல்யாணம் பண்ணிக்க மாட்டியே!"

"அதுக்காக? பொய்... கண்டுபிடிக்காத வரைக்கும் பொய் சொல்லலாமா? பொய்யா வாழலாமா?"

காயத்ரி என் கையைப் பிடித்து, "ரேகா நான் அர்ஜுன் செய்ததை ஏதும் நியாயப்படுத்தறதா நினைக்காதே. அவன் செய்ததுக்கு ஜஸ்டிபிக்கேஷனே கிடையாது. ஏதோ ஒரு விதி எங்க ஃபாமிலில வந்து சிக்கிக்கொண்டுவிட்டாய்.

இதுவரை நடந்ததெல்லாம் மறந்துபோய் இன்னும் ஒருமுறை அர்ஜுனுக்கு ஒரு சான்ஸ் கொடுத்துப் பாரேன்!"

நான் தலையசைத்தேன்.

"ரொம்ப அடிபட்டுட்டேன் காயத்ரி."

"தெரியறது... இப்ப என்ன செய்யணும் சொல்லு. அந்தக் காயம் ஆற்றதுக்கு?"

"கொஞ்ச நாளைக்கு அர்ஜுனைப் பார்க்க விரும்பலை நான். எனக்கு ரெயில் டிக்கெட் வாங்கி டில்லிக்கு அனுப்பிடச் சொல்லு. அப்பா அம்மாகிட்ட நடந்தது எதையும் சொல்ல வேண்டாம். எனக்குத் தனியா யோசிக்க அவகாசம் வேணும்."

அவள் யோசித்து, "சரி அர்ஜுன் கிட்ட சொல்லிப் பார்க்கறேன்."

"சொல்லிப் பார்க்கறதில்லை. சொன்னது நடக்கணும். நான் இங்கே ஆஸ்பத்திரியில இருந்து டிஸ்சார்ஜ் ஆன உடனே நேரே ரயில்ல ஏற்றிவிடச் சொல்லிவிடு."

"சரி இப்பவே போன் பண்ணிச் சொல்லிடறேன்."

" நீ கேக்றது நியாயம்தான். உன் உணர்ச்சிகளை என்னால முழுக்க புரிஞ்சுக்க முடியறது ரேகா. என்னை ஒரு ஃப்ரெண்டாவே நினைச்சுக்க."

காயத்ரி எப்படிப்பட்ட ஃப்ரெண்ட் என்பது அப்புறம்தான் புரிந்தது.

அர்ஜுன் எனக்கு டில்லி போவதற்கு ரயில் டிக்கெட் வாங்கி நேராக ஆஸ்பத்திரியிலிருந்தே ரயில் ஏறும்படி ஏற்பாடு செய்திருந்தார். என் துணிமணிகளை ஒழுங்காகப் பெட்டியில் அடுக்கிக்கொண்டுவந்து கொடுத்தாள். நான் அர்ஜுனைப் பார்க்க விரும்பவில்லை. அவள்தான் ரயிலேற்ற வந்திருந்தாள். எனக்குக் கனகாம்பரம் எல்லாம் வாங்கிக் கொடுத்தாள். ரயில் புறப்பட இருந்த சமயம் அர்ஜுன் வேகமாக ஓடி வந்தார்.

"என்ன அர்ஜுன்?" என்று காயத்ரி விசாரிக்க, அர்ஜுன் என்னிடம் தந்தி ஒன்றைக் காண்பித்தார்.

Cancel trip we are Coming to Madres

- Father

என்று தந்தி வந்திருந்தது.

அப்பா ஏதோ கன்ஸல்டன்சி விஷயமாக இங்கே வருகிறாராம். அம்மாவும் வருகிறாளாம்.

நான் காயத்ரியிடம், "என்ன செய்வது?" என்றேன்.

"அவர்கள் வரும் வரைக்கும்

எழுதுவது -சுஜாதா

அவர்கள் இருக்கும் வரை நீ வீட்டுக்கு வந்துதான் ஆக வேண்டும். ஆஸ்பத்திரியில் பார்த்தால் கலவரப்படுவார்கள். வீட்டில் இல்லையென்றால் சந்தேகப்படுவார்கள். வருத்தப் படுவார்கள்."

நான் வேறு வழியின்றி எந்த வீட்டில் இனி காலடி எடுத்து வைக்க மாட்டேன் என்று மனசுக்குள் தீர்மானித்திருந்தேனோ அந்த வீட்டிற்குத் திரும்பச் சென்றேன்.

நடக்கப் போவது என்ன விபரீதம் என்று தெரியாது.

அப்பாவே வருகிறார் என்று தந்தியைக் காட்டியதில்தான் நான் அந்த வீட்டுக்குத் திரும்பிச் சென்றேன். கொஞ்சம்கூட இஷ்டமில்லாமல்தான் அவர்களையெல்லாம் வெற்றுப் பார்வை பார்த்து என் அறைக்குள் சென்றேன். அர்ஜுன், "நாம கொஞ்சம் பேசலாமா ரேகா?" என்றபோது, அவர் முகத்தில் கதவைச் சார்த்தினேன்.

கதவின் மறுபுறத்திலிருந்து "இப்ப என்ன ஆய்டுத்துன்னு இத்தனை கோபம்?"

"என்ன ஆகலை?"

"எனக்கு ஒரு சான்ஸ் கொடேன், எல்லாத்தையும் சரியா உன்கிட்ட சொல்றதுக்கு!"

"பொய் சொல்வீங்க! அந்தப் பொய்யை மறைக்க அதைவிட பெரிய பொய் சொல்வீங்க."

"நான் இதுவரைக்கும் எத்தனை பொய் சொல்லியிருக்கேன் உன்னிடம்?"

நான் சட்டென்று கதவைத் திறந்து, "உள்ளே வாங்க! உக்காருங்க. நீங்க சொன்ன பொய்யெல்லாம் ஒவ்வொண்ணா சொல்றேன். நம்ம கல்யாணமே பொய்யிலதான் ஆரம்பிச்சது! பாங்க்ல வேலை பார்க்கறேன்னு சொன்னீங்க."

"பாங்க் இல்லை. சொந்த பிஸினஸ். அதனால என்ன?"

"சொந்த பிஸினஸ்னா எங்கப்பா கல்யாணத்துக்கே சம்மதிச்சிருக்க மாட்டார்."

(வண்ணத்துப்பூச்சி சிறகடிக்கும்....)

## 'லீப்' ஆண்டுக் குழந்தைகள்



அழகான ஐந்து குழந்தைகளும் ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள் என்றால் அதிலொன்றும் புதுமையில்லை. ஏன்னெனின் பல பிரசவங்கள் நடந்தாகிவிட்டன. இது சற்று வித்தியாசமாக - 'லீப்' ஆண்டைக் குறிக்கும் விதமாக - பெப்ரவரி 29ஆம் திகதி மதுரை அரச மருத்துவமனையில் பிறந்த குழந்தைகள். புகைப்படத்துக்குச் சிக்காமல் இன்னும் எத்தனை குழந்தைகள் பிறந்தனவோ பிறந்த அன்றே பிரபலமாவதற்கு ஒரு அதிர்ஷ்டம் தேவை...

## எச்சரிக்கை!



அமெரிக்காவில் காது குத்தும் பெண்களுக்கு டாக்டர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நம் நாட்டில் பெண்கள் காது மற்றும் மூக்கு ஆகியவற்றைக் குத்தித் துளையிட்டு ஆபரணங்கள் அணிகிறார்கள் அல்லவா? இதேபோன்று அமெரிக்காவில் உள்ள இளம் பெண்களும் போட்டி போட்டுக்கொண்டு காது குத்திக்கொள்கிறார்கள். இதற்கென ஸ்பெஷலிஸ்டுகளும் இருக்கிறார்கள். எனினும், சிலர் போலிகளை நம்பி ஏமாறுகிறார்கள். அந்தப் போலிகள், துருப்பிடித்த ஊசிகளைக் கொண்டு காது மற்றும் மூக்கில் துளை போட்டுவிடுகிறார்களாம். இதனால் பலவிதமான பாக்டீரியாக்கள் தொற்றும் ஆபத்து உள்ளது என்று டாக்டர்கள் எச்சரித்துள்ளனர். அமெரிக்கப் பெண் ஒருவர் மூக்கில் குத்திக்கொள்ளும் காட்சியைப் படத்தில் காணலாம். சில கிராமங்களில் தோடை முள்ளாலும் காது, மூக்கு ஆகியவற்றில் துளையிட்டுக்கொள்கிறார்கள். எதற்கும் கொஞ்சம் கவனம் அவசியம்.


## புது யுக்தி

ஹாங்காங்கில் உள்ள ஒரு புதிய தொலைக்காட்சியில், நிர்வாண செய்தி நிகழ்ச்சி இடம்பெற உள்ளது.

பல்கேரியாவில் உள்ள, எம்.சேட். என்ற சேட்லைட் தனியார் தொலைக்காட்சியில், 'நேக்கட் ட்ருத்' என்ற பெயரில் செய்தி ஒளிபரப்பப்படுகிறது. இதில் செய்தி வாசிக்கும் பெண்கள், தொடக்கத்தில் முழுமையாக ஆடை அணிந்திருப்பார்கள். ஒவ்வொரு செய்தி வாசித்து முடிந்தவுடனும் தங்களது ஆடையைக் குறைத்துக்கொண்டே வருவார்கள். கடைசியில் செய்திகள் முடியும்போது அவர்கள் முழு நிர்வாணமாகக் காட்சி அளிப்பார்கள். இதேபோன்ற நிகழ்ச்சி ஹாங்காங்கில் உள்ள ஒரு புதிய தொலைக்காட்சியிலும் இடம்பெற உள்ளது. பல்கேரிய டி.வி.யில் டயானா வெலிகோவா என்ற பெண் செய்தி வாசித்துக்கொண்டே தனது ஆடையைக் களைந்த காட்சியைப் படத்தில் காணலாம். என்னடா உலகமிது! தொலைக்காட்சியை விட்டு ஒருவர் விலகிப் போய்விடக் கூடாது என்பதற்காக இப்படியா.... கலியுகம் ரொம்பக் கண்ராவிதானாக்கும்.



8



# ஒரு பெண்ணின் வாழும் வரலாறு

## ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்



எனது தந்தையார் தனது வாடிக்கையாளர்களை வழியில் சந்திக்க வேண்டி இருந்தமையால் எமது குடும்ப வாகனமான காரை ஒவ்வொரு நாளும் அவரே ஓட்டிச் செல்வார். எல்ம் மற்றும் வின்ஸர் தெருச் சந்தியில் இருக்கும் இரு மாடி செங்கல் வீட்டிற்குரிய தொகையை எனது தந்தை ரொக்கப் பணமாகக் கொடுத்தார். எம்மிடம் இரண்டு Sundecks இருந்தன; ஒன்று, முன் வராந்தாவில் திரையாகப் பயன்பட்டது. மற்றது கொல்லைப்புறத்தில் வேலியாகப் பயன்பட்டது. அங்கேதான் பக்கத்து வீட்டுப் பிள்ளைகள் விளையாடுவதற்கு அல்லது எமது மரங்களில் செர்ரிப்பழங்கள் திருடுவதற்கு வருவார்கள். போருக்குப்பிந்திய குடித்தொகை பல்கிப்பெருகிக்கொண்டிருந்தது. எங்கும் குஞ்சு குறுமான்கள் நிறைந்து காணப்பட்டன. ஒருதடவை எனது தாயார் எண்ணிப்பார்த்தபொழுது எமது பகுதியில் மட்டும் 47 குழந்தைகள் இருந்தன.

எமக்கு அடுத்த வீட்டினர் வில்லியம்ஸ் - 4 குழந்தைகள். வீதிக்கு மறுபக்கம் ஓ'கொலகென்ஸ் - 6 குழந்தைகள். திரு வில்லியம்ஸ் குளிர்காலத்தில் அவரது கொல்லைப்புறத்தை பனிபடர்ந்ததாக ஆக்கியிருப்பார். அதில் நாம் பனிச்சறுக்குவோம், ஹொக்கி விளையாடுவோம், பாடசாலை விட்டபிறகும் வார இறுதியிலும் மணிக்கணக்கில் நாம் விளையாடுவோம். திரு. ஓ'கொலகென்ஸ் தனது கராச்சில் பாஸ்கட்போல், ஹூ·.ப் - கட்டைப்பந்து தாங்கி - ஒன்றைப்பொருத்தியிருந்தார். அது எல்லா இடத்திலிருந்தும் குழந்தைகளையும், வளர்ந்தவர்களையும் ஈர்த்தது. நான் மிகவும் விரும்பிய விளையாட்டுத்தான் நாங்களே உருவாக்கிய 'விரட்டிவிட்டு ஓடு' (Chase and Run) அது 'ஒழித்து விளையாடுதலை' விடவும் சிக்கலானது. மேலும் அநேகமாக தினந்தோறும் மென்பந்து மற்றும் உதைபந்து விளையாட்டும் விளையாடப்பட்டது. வடிகால் மூடிகளை நாம் Base களாகப் பாவிப்போம்.

எனது தாயார் ஓர் அற்புதமான இல்லத்தரசி. நான் நினைத்துப் பார்க்கிறேன். - அந்த நாட்களில் அவர் ஒரு பம்பரம்போல் சுழல்வார். படுக்கைகளை அமைத்தல், பாத்திரங்களைக் கழுவுதல், சரியாக மணி ஆறு அடிக்கும்போது இராப்போசனத்தை மேசையில் தயாராக வைத்தல். ஒவ்வொரு நாளும் .·.பீல்ட் ஸ்டெலில் இருந்து பகல்சாப்பாட்டுக்காக வீட்டுக்கு வந்துவிடுவேன். தக்காளி அல்லது சிக்கன் நூடில்ஸ், சூப், சீஸ், பீற்றுட்பட்டர் அல்லது பொலக்னா சேன்விச் நானும் என் தாயாரும் விருப்பமான வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டவாறே சாப்பிடுவோம். 'ஒரு கதை சொல்லுங்களேன்' - என்று தொடங்கும். 'என்ன மாதிரியான கதை?'
'எதுவாயிருந்தாலும் சரி' இப்பொழுதெல்லாம் மனிதர்கள் கூறுகிறார்களே Quality Time (தரமான நேரம்) என்று அத்தகைய நேரத்தை எனக்காகவும் எனது தம்பிக்காகவும் எனது தாயார் அவர்கள் ஏற்படுத்தித் தந்தார்கள். 1960களின் ஆரம்பகாலம் வரை அவர் வாகனம் ஓட்டக் கற்றுக் கொள்ளவில்லை. ஆகவே எங்கும் நாம் நடந்தே போனோம். குளிர்காலத்தில் எங்களை சிலெட்ச் - (பனியில் பயணிக்கத்தக்க சக்கரமில்லாத வாகனம்) இல் ஏற்றிக்கொண்டு அதை இழுத்தவாறே எம்மை கடைக்குக் கூட்டிச் செல்வார். பிறகு கடையில் இருந்து வீட்டுக்கு வரும்போது மலிகைச் சாமான்களை நாம் பத்திரமாக தொங்கவைத்துக்கொள்வோம். கொல்லைப்புறத்தில் கழுவிக் காயப்போட்ட உடு துணிகள் தொங்கிக் கொண்டிருக்கும். அவற்றின் நடுவே பந்தை எவ்வாறு எறிய வேண்டும்? என்று எனக்குச் சொல்லிக் கொடுப்பார் அல்லது புல் தரையில் என்னுடன் படுத்தவாறு தலைக்கு மேலே அசைந்து கொண்டிருக்கும் மேகங்களின் உருவங்களை வர்ணிப்பார்.

ஒரு கோடையின்போது ஒரு பெரிய காட்போட் பெட்டியின் உள்ளே ஓர் அழகிய உலகத்தை உருவாக்குவதற்கு அவர் எனக்கு உதவினார். நாம் குளங்களுக்காக முகம்பார்க்கும் கண்ணாடிகளையும், மரங்களுக்காக சிறு கிளைகளையும் பாவித்தோம். அத்துடன், எனது பொம்மைக்காகவேண்டி கற்பனைக் கதைகளை உருவாக்கினேன். இன்னுமொரு கோடையின்போது எனது தம்பி டோனிக்கு உற்சாகம் ஊட்டிக்கொண்டிருந்தார்.

அவனுக்கு மண்ணுக்கடியில் சுரங்கம் தோண்டிக்கொண்டு சீனாவுக்குப்போக வேண்டும் என்று ஆசை. அவர் அவனுக்கு சீனாவைப்பற்றி வாசித்துக்காட்டினார். எங்கள் வீட்டிற்கு அடுத்தாற்போல் அவன் 'சுரங்கம்' தோண்டுதலிலேயே தனது காலத்தைச் செலவிட்டான். சில வேளைகளில் அவன் தனது சுரங்கப்பாதையின் நடுவே சீனர் பாவிக்கும் உணவுக் குச்சிகளையோ, அதிர்ஷ்டவசமாக பிஸ்கட்டுகளையோ கண்டுபிடிப்பான். அவை எனது தாயாரால் மறைத்து வைக்கப்பட்டவையாகும்.

எனது தம்பி பெற்யூக் அச்சமற்றவன் ஆபத்துக்களுக்கு முகம்கொடுக்க அஞ்சாதவன். ஒரு தடவை அவன் தத்தித் தள்ளாடும் வயதிலேயே கதவைத் திறந்துகொண்டு வெளியே போய் பனிப்படலத்தினுள்ளே மூன்றடிவரை சுரங்கம் தோண்டிவிட்டான்.

நல்ல வேளை! எனது தாயார் அவனைக் காப்பாற்றிவிட்டார். ஒரு தடவைக்கும்மேலாக அவன் தனது நண்பர்களுடன் எமது அண்டை அயலில் எழும்பிக் கொண்டிருக்கும் கட்டட நிர்மாணப்பணிமனையில் விளையாடப்போய் பொலிஸ் பாதுகாப்போடு வீட்டுக்கு திரும்பிவர வேண்டியதாயிற்று. மற்றப்பையன்கள் பொலிஸ் வாகனத்தில் ஏறிக்கொண்டார்கள் ஆனால், பெற்யூக்கோ அந்த வாகனத்தோடு நடந்துவருவேன் என்று அடம்பிடித்தான். தனக்குத் தெரியாத ஒருவருடைய வாகனத்தில் ஒருபோதும் ஏறக்கூடாது என்பதில் அவன் மிகவும் கவனமாக இருந்தான்.

(இன்னும் வரும்)

**இருபதாம் நூற்றாண்டின் வரலாறு நமது கண்முன் உள்ளது. ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளின் வரலாற்றை நாம் காண முடியாதுள்ளது.**

**ஆனாலும், நம்மைக் கடந்து சென்ற 19ம் நூற்றாண்டு வரலாறு கண்ணீர் சிந்தவைப்பதும், அழகியதும், அரியதுமான படங்களினூடாக உங்கள் முன் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கதையைக் கூறுவன. 19ம் நூற்றாண்டின் வரலாறானது முன்னெப்போதுமில்லாத வகையில் அதிக மாற்றங்களை சந்தித்தது. எல்லா மாற்றங்களும் இயல்பாக ஏற்பட்டுமல்ல, அவற்றுள் சில யுத்தங்கள், எதிர்ப்புகளைத்தாண்டி நடந்துள்ளன. பல சாம்ராஜ்யங்கள் சிதைந்து, புதிய நாடுகள் உருவாகியுள்ளன. விஞ்ஞான, அறிவியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.**

**19ம் நூற்றாண்டு தொடக்கத்தில் உலகின் முழு நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. இப்போது? இப்படியான பல கதைகள்... இவைகளை நமது வாசகர்கள் தரிசிக்க ஒரு வாய்ப்பை தினமுரசு ஏற்படுத்துகிறது.**

## இந்தியாவின் சக்கரவர்த்தி எட்வர்ட்



**இந்தியாவின் சக்கரவர்த்தியான அரசர் எட்வர்டினால் கர்சன் பிரபு இந்தியாவின் ராஜப்பிரதிநிதியாக அதிகாரபூர்வமாக நியமிக்கப்பட்டார். அது தொடர்பாக 1903 ஜனவரி 01ம் திகதி அபாரமான வைபவமொன்று புதுடில்லிக்கு வெளியே உள்ள சம்வெளியொன்றில் நடந்தேறியது. ராஜாங்க தர்பார் என்று வழங்கப்பட்ட அந்த வைபவத்தில் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட சீருடையணிந்த 100 இந்திய இளவரசர்கள் தமது பட்டத்து யானைகளுடன் கலந்து கொண்டனர். இங்கிலாந்தின் எஜமானரான அவருக்கு தமது மரியாதையை செலுத்துமுகமாய் அந்த இளவரசர்கள் யானைகளுடன் பயணித்தனர். புண்டி மகாராஜா கர்சன் பிரபுவுக்கு தனது பணிவைக் காட்டுவதை இப்படம் காட்டுகிறது.**

## 'போல்கன்' படுகொலைச் சம்பவம்



**'சர்பிய' அரசரும் ராணியும் அதிருப்தியுற்ற படையதிகாரிகளினால் கொலை செய்யப்பட்டனர். அரசர் அலெக்ஸாந்தரும், ராணி டிரெசாவும் தமது படுக்கையறையிலிருந்த அலுமாரிக்குள் ஒழிந்திருந்த போதே படையதிகாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். ராணியின் வெறுப்பூட்டும் கீர்த்தியாலும், அரசரின் அதிகாரபூர்வமான அடக்குமுறை ஆட்சியொன்றினை தனது நாட்டில் அமைக்கும் திடமான நோக்கத்தினாலும் அதிக கோபமுற்றபடியினாலேயே படையதிகாரிகளினால் அவர்கள் இருவரும் கொலை செய்யப்பட்டனர். ஒரு பெண்ணுடனான அரசரின் கடந்த கால திருமணத்தினால் மிகவும் ஆழமாக அவமானத்திற்குள்ளாகிய அந்நாட்டு மக்களுக்கு 'பெல்கிரேட்'டிலிருந்து சர்பிய போர்ப் பயிற்சிக் கூடத்தினை அங்கிருந்து அகற்றி விடுவதற்கான அவரது தீர்மானம் ஒரு துரும்பாக அமைந்தது. எப்படியிருப்பினும் இந்தக் கொலைகள் மிகவும் ஆழமான தாக்கத்தினையே ஏற்படுத்தியது. அரசர் பீட்டர் என்பவரால் அலெக்ஸாந்தர் வெல்லப்பட்டார்.**

# பாதணி இல்லாத பாதங்களோடு வி.பி...

இவ்வாறு 'சுதந்திரன்' ஏடு செய்தி வெளியிட்டிருந்தது. அந்தக் கூட்டம் காஞ்சிபுரத்திலுள்ள ஏகாம்பரநாதர் ஆலயத்தில் நடந்தது. செய்தியறிந்து முதலில் திகைத்தவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினர்தான்.

உண்மையில் கூட்டணியினர் அதை வரவேற்றிருக்க வேண்டும். மாறாக அதை நக்கலும் நளினமுமாகக் கிண்டல் செய்திருந்தனர்.

**தந்தை செல்வாவை எதிர்த்த வைகுந்தவாசன் தமிழீழத்தை பிரகடனம் செய்வதா?**

தங்களை எதிர்த்தவர்கள் தமிழ் மக்களின் உரிமை குறித்துப் பேச முடியாது என்ற கருத்தியலை அப்போதே கொண்டிருந்தனர் கூட்டணியினர்.

மாற்றுக் கருத்துக்கொண்டவர்கள் துரோகிகள் என்ற கருத்தையும் அவர்களே அன்று ஆரம்பித்து வைத்திருந்தனர். அதே கருத்துக்கு அவர்களே பின்பு பலியாக்கப் பட்டனர்!

இதில் ஒரு விடயத்தை குறிப்பிட வேண்டியுள்ளது. பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலுக்கு வழிபடச் சென்றிருந்தார் யாழ். மேயர் துரையப்பா! வழிபாட்டுத்தலத்தில் வைத்து அவர் சுட்டுக் கொல்லப்பட்டாரல்லவா? அதில் சம்பந்தப் பட்டார்களில் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனும் ஒருவர்!

சுட்டுவிட்டுத் தப்பி வந்த பிரபாகரன் யோகேஸ்வரன் விட்டிற்குள் நுழைந்து விட்டார். களைத்துப்போய் வந்த பிரபாகரனுக்கு சுடச்சுட தேநீர் கொடுத்து உபசரித்தவர் வேறு யாருமல்ல! திருமதி சறோஜினி யோகேஸ்வரன்தான்.

அன்று சுடச்சுடத் தேநீர் கொடுக்கும் போது துரையப்பாவின் கொலை அவர்களுக்குச் சரியாகத்தான் பட்டது. பின்பு அவரே அதே புலிகள் இயக்கத்தால் சுட்டுச் சரிக்கப்பட்டார்.

பின்னாளில் சுடச்சுடக் கொல்லப்பட்டவர்களுக்காக அஞ்சலி செலுத்தவே ஆட்கள் இருக்கவில்லை. கண்டனம் தெரிவிக்கவே யாரும் துணியவில்லை. இது குறித்து பின்பு விரிவாக பார்க்கலாம்.

வைகுந்தவாசன் தந்தை செல்வாவை எதிர்த்தவர்! அதனால் தமிழீழப் பிரகடனம் செய்ய அருகதையற்றவர்! இவ்வாறு கூட்டணியினர் தெவித்த கருத்திற்கு தக்க பதிலடி கொடுத்திருந்தார் வைகுந்தவாசன்.

"தந்தையை எதிர்த்து தேர்தலில் நின்ற வி.பொன்னம்பலம் அதே கூட்டணியோடு சமரசம் செய்து கூடிக் குலாவுகிறார்! நான் மட்டும் இதற்கு விதிவிலக்கா" என்று கேள்வி எழுப்பினார் வைகுந்தவாசன்.

75 இடைத்தேர்தலின்போது வி.பொன்னம்பலத்திற்கும் இதுதான் நடந்தது. வி.பி தமிழ் இனத்திற்கு எதிரானவராகவும் தமிழரசுக் கட்சியினர் மட்டும்தான் தமிழ் இனத்தின் மீட்பர்களாகவும் மக்கள் முன் காண்பிக்கப்பட்டனர்.

ஆனால், உண்மை அதுவல்ல. தேர்தல் காலத்தில் நடந்த ஒரு சம்பவம்! தேர்தலுக்காக வி. பொன்னம்பலத்திற்கு ஆதரவாக இருபதினாயிரம் கைநூல்கள் அச்சடிக்கப்பட்டிருந்தன. அதில் ஆயிரம் புத்தகம் அளவில் விநியோகிக்கப்பட்டு முடிந்துவிட்டன.

பாதணி இல்லாத பாதங்களோடு வெள்ளை வெட்டியும் சேட்டுமாக ஒரு கறுப்பு உருவம் கொண்டவர் பாமரன் போல் கிராமங்கள் தோறும் சென்று அந்தக் கைநூல்களை விநியோகித்திருந்தார். அது வேறு யாருமல்ல தோழர் வி.பி. தான்.

மறுநாள் வேட்பு மனு தாக்கல் செய்ய வேண்டிய தினம்! தனது தோழர்களை அழைத்து கலந்துரையாடிக்கொண்டிருந்தார் வி.பி.!

நாளை வேட்பு மனு தாக்கல் செய்து முடிந்ததும் சூட்டோடு சூடாக மீண்டும் மக்கள் மத்தியில் இறங்க வேண்டியதுதான். கைநூல்கள் அனைத்தையம் விநியோ கித்து முடிக்க வேண்டும்!

"அடுத்ததாக முதலில் எந்தக்கிராமத்தில் இறங்குவது?" வினவினார் வி.பி! அந்த நேரம் பார்த்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது.

தொடர்புகொண்டவர் வேறு யாருமல்ல. கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியஸ்தர் பீட்டர் கெனமன்தான் அவர்.

அவரோடு லெஸ்லி குணவர்த்தன, மற்றும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் செல்லையா குமார சூரியருமாக மூவரும் காங்கேசன்துறை விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்தனர்.

"உடனடியாகச் சந்திக்க வேண்டும்!" வி. பி. க்கு அவசர அழைப்பு விடுத்தார்கள். உடனே வி.பி. தனது பரிவாரங்களோடு புறப்பட்டுச் சென்றார். வி.பொன்னம்பலத்தையும் அவரது தோழர்களையும் கண்டவுடன் காத்திருந்தவர்கள் கை கொடுத்து வரவேற்றார்கள்

குமாரசூரியர் மட்டும் வி.பி.க்கு கை கொடுக்கும்போது தடுமாறிவிட்டார். வழக்கமாக கைகளை நன்கு அழுத்தியபடி கைகொடுக்கும் அவர் அன்று மட்டும் வழமைக்கு மாறாக சட்டென்று கையைப் பிடித்து சட்டென்று கையை விட்டார்.

வி.பி. க்கு குதிக்காலில் இருந்து மண்டை வரையும் மூளை! ஏதோ பிரச்சனை! அது குமாரசூரியரால்தான் கிளப்பி விட்டிருக்கப்பட வேண்டும் என்று தன்னுடன் கூடச் சென்ற தோழர்களுக்கு இரகசியமாக எச்சரிக்கையோடு தெரிவித்துக்கொண்டார்.

எல்லோரும் ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர். வி.பி. மட்டும் குமாரசூரியரின் முகம் பார்த்துப் பேசுவதற்கு வசதியாக அமர்ந்துகொண்டார். எந்தக் கருத்தையும் எந்த நேரத்திலும் எப்படியும் சந்திக்கத் தயாரான துணிச்சல் மிக்கவர் வி.பி!

"பிரசாரத்திற்காக அச்சிடப்பட்ட கைநூல்களை இனிமேல் விநியோகிக்கக் கூடாது!" என்றார் குமாரசூரியர். ஏதோ பிரச்சனை என்று எதிர்பார்த்திருந்த ஒன்றுதானே! ஆகவே வி.பி. ஆச்சரியப்பட வில்லை.

அந்தக் கைநூல் இலங்கை கம்யூனிஸ் கட்சியின் மத்திய குழுவினால் அங்கீகாரம் பெற்றே அச்சடிக்கப்பட்டது.

அதில் கையொப்பமிட்டிருந்தவர்களில் ஒருவர் கட்சியின் தலைவர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க அவர்கள். அடுத்தவர் பொதுச் செயலாளர் பீட்டர் கெனமன் அவர்கள். அவரும் கூடவே அங்கு பிரசன்னமாகியிருந்தார். ஆகவே தடைக்கு அவர்கள் காரணமாயிருக்கமாட்டார்கள்.

அப்படியானால் யார் சூத்திரதாரி! வி.பி. நினைத்ததைப் போல செல்லையா குமாரசூரியர்தான். தமிழ் அமைச்சர் குமாரசூரியர் பேசத் தொடங்கினார்.

இந்தப் பிரசுரத்தில் உள்ளவைகள் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளே ஒழிய சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கருத்துக்களோ கொள்கைகளோ அல்ல! மக்கள் ஐக்கிய முன்னணியில் போட்டியிடும் வி.பி. இது குறித்து சுதந்திரக் கட்சியுடன் முதலில் பேச வேண்டும்! ஆகவே விநியோகிப்பை தயவு செய்த இடை நிறுத்தவும்!" என்றார் குமாரசூரியர்.

அப்படி சர்ச்சைக்குரிய விடயம் என்னதான் அதில் இருந்தது?

**தமிழுக்கு அரச கரும மொழி என்ற சம அந்தஸ்து!**

**பாரம்பரிய பிரதேசங்களில் தமிழ் பேசும் மக்கள் மீளக் குடியேறுதல்!**

**மற்றும் நிதி!... நீதி!...... கல்வி!...... குறித்த அதிகாரங்கள்!**

அரசியல் தீர்வில் இந்த அதிகாரங்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது. அந்தக் கைநூலில் உள்ள விடயங்கள் குறித்து தமிழரசுக் கட்சியினர் தெரிந்தே வைத்திருந்தனர்.




ஆனாலும் தமக்கு எதிராகக் களமிறங்கியவர்கள் எந்தக் கொள்கைகளையும் கொண்டிருப்பவர்கள் அல்ல என்ற கருத்தையே மக்கள் முன் அவர்கள் விதைத்து வந்தனர்.

நடைமுறைத் தவறுகள் இருந்தாலும் தமிழ் பேசும் மக்களின் தீர்வு குறித்து தந்தை செல்வா கொண்டிருந்த கருத்துக்களை குறைத்து மதிப்பட முடியாது. ஆனாலும் வி.பி. கொண்டிருந்த கருத்துக்கள் தெளிவானவை என்று கூறலாம்! ஆனால் அந்த உண்மைகள் மூடி மறைக்கப்பட்டன.

இலங்கை அரசியல் வரலாற்றில் வெறும் உணர்ச்சிகளும் எழுச்சிகளும் உணர்வு பூர்வமான கருத்துக்களையும் அதற்கான நகர்வுகளையும் மூடிமறைத்தே வந்திருக்கின்றன.

'அச்சிடப்பட்ட பிரசாரப் புத்தகத்தை இனி விநியோகிக்கக் கூடாது" என்று கூறி விட்டார் குமாரசூரியர்! வி.பி கெனமனின் முகத்தைப் பார்த்தார். ஆனால் அவர் எதுவும் பேசவில்லை. வி.பியும் எதுவும் பேசவில்லை.

வி.பி கூட்டத்திலிருந்து எழுந்து சென்றுவிட்டார். போகும்போது ஒன்றை மட்டும் சொல்லிச் சென்றார். நான் நாளை வேட்பு மனு தாக்கல் செய்யப்போவதில்லை! தேர்தலில் போட்டியிடப்போவதில்லை!

இதுதான் வி.பி கூறிச் சென்றது. குமாரசூரியருக்கு இடி விழுந்த மாதிரியான அதிர்ச்சி!

என்ன செய்வது? யோசித்தார்கள்!

> **பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலுக்கு வழிபடச் சென்றிருந்தார் யாழ். மேயர் துரையப்பா! வழிபாட்டுத் தலத்தில் வைத்து அவர் சுட்டுக் கொல்லப் பட்டாரல்லவா? அதில் சம்பந்தப் பட்டவர்களில் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனும் ஒருவர்!**

அதே நாள் இரவு ஒரு மணியிருக்கும் வி.பொன்னம்பலத்தின் வீட்டு வாசலில் அமைச்சர்களின் வாகனத் தொடர் வந்து அணிவகுத்து நின்றது. அதன் பின்பு என்ன நடந்தது?

வைகுந்தவாசனின் ஐ.நா. மன்ற உரை வெறும் அரசியல் சித்து விளையாட்டுக்கள் தான் என்று கூறிய கூட்டணியினரின் சித்து விளையாட்டுக்களும் இனிவரும் தொடரில் பதிவாகும்!

நன்றி:- பூகோளம்

தொடரும்......

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.

## அமிர்தலிங்கத்தின் சங்கடம்

**1977** இன் பொதுத் தேர்தல் முடிவுகளை அடுத்து சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. கண்டி, கேகாலை, கம்பஹா, குருநாகல் போன்ற மாவட்டங்களில் இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் மோசமான கட்டத்தை அடைந்திருந்தன. ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அதனைப் பொருட்படுத்தாமல் ஆளும் ஐ.தே. கட்சி ஆதரவாளர்கள் வன்செயல்களில் ஈடுபட்டனர். வாகனங்கள் அடித்து நொறுக்கப் பட்டன. வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன. இவ்வாறான இன்னோரன்ன சம்பவங்கள் இடம்பெற்றபோதும் தமிழ் மக்கள் பாதிக்கப்படவில்லை. எனினும்




ஒரு விதத்தில் பாதுகாப்பற்ற பதற்றமான நிலைமை காணப்பட்டது. இந்தத் தருணத்தில் கண் முன்னால் நிகழ்ந்த அநீதி குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி கண்டுகொள்ளவே இல்லை. தமிழ் மக்கள் பாதிக்கப்படவில்லை என்பது மட்டும் அதற்குக் காரணமல்ல. புதிதாகப் பதவி ஏற்றுள்ள பிரதமர் ஜே.ஆர். ஜயவர்த்தனா அவர்களைச் சங்கடத்துக்கு உள்ளாக்கக் கூடாது என்பதுதான் கூட்டணித் தலைவர்களின் அக்கறைக்கு உரியதாக இருந்தது.

ஆனால், அரசாங்கத்துடன் நல்லெண்ணப் புரிந்துணர்வை ஏற்படுத்தக் கூட்டணித் தலைவர்கள் மேற்கொண்டு வந்த முயற்சி சில நாட்களுக்குள்ளாகவே சீர்குலைந்தது. யாழ்ப்பாணம் புனித சம்பத்தரிசியார் கல்லூரி மைதானத்தில் நடந்துகொண்டிருந்த களியாட்ட நிகழ்ச்சியில் இடம்பெற்ற ஒரு சிறு சம்பவம் நாடு முழுவதையும் இனக் கலவரத்துக்குள் இழுத்துச் சென்றுவிட்டது. சாதாரண உடையில் வந்த சில சிங்களப் பொலிஸார் அனுமதிச் சீட்டைப் பெறாமல் இக் களியாட்ட மைதானத்துக்குள் செல்ல முனைந்தனர். இவர்கள் தடுக்கப்பட்டதும் வாக்குவாதம் எழுந்தது. பின்னர் அனுமதிச் சீட்டடுக்களைப் பெற்றுக்கொண்டு உள்ளே நுழைந்த இப் பொலிஸார் போதையை ஏற்றிக்கொண்டு சர்ச்சைகளில் இறங்கினர். யாழ்ப்பாணத்தில் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் அமைப்பதற்கான நிதி சேகரிக்கும் நோக்குடன் றோட்டறிக் கழகத்தால் இக் களியாட்ட விழா நடத்தப்பட்டுக்கொண்டு இருந்தது குறிப்பிடத் தக்கது. இவ் விழாவின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான டாக்டர் பிலிப் இச் சர்ச்சையைக் குறித்துப் பொலிஸ் நிலையத்திற்குச் தெரியப் படுத்தினார். சாதாரண சிவிலுடையில் பொலிஸார் விழாவுக்கு வருவதை விரும்ப வில்லை எனவும் அவர் தெரிவித்தார். இந்தச் சம்பவம் ஆகஸ்ட் 12இல் நடந்து முடிந்தது. ஆனால், மறுநாள் சிவில் உடையில் பல நூறு பொலிஸார் மைதானத்திற்கு வந்து குவிந்தனர். இவர்களைப் பொது மக்கள் துரத்தினர்.

ஆகஸ்ட் 14இல் பொலிஸார் இச் சம்பவத்திற்குப் பதிலடியாக வீதிகளில் போய் வருவோரைக் காரணமின்றித் துன்புறுத்தினர். இத்தகைய அசம்பாவிதங்கள் தொடர்ந்து கொண்டிருக்கையில் பொலிஸாரை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. இதனால் ஆத்திரமுற்ற பொலிஸார் சகல கட்டுப்பாடுகளையும் மீறி கண்மூடித்தனமான தாக்குதல்களில் இறங்கினர். யாழ்ப்பாணத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வெ. யோகேஸ்வரன் பொலிஸ் தலைமையகத்துடன் தொடர்புகொண்டு வன்முறைகளைக் கட்டுப்படுத்தும்படி கோரிக்கை விடுத்தார். ஆனால், சிவிலுடையில் வந்த பொலிஸாரின் அட்டகாசம் குறைந்ததாக இல்லை. யாழ்ப்பாண பஸ் நிலையம் முன்பாக இருந்த கடைகள் எரியூட்டப்பட்டன. சந்தைகள் தீக்கிரையாகின. துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் கொல்லப்பட்டனர்.

துப்பாக்கிப் பிரயோகம் பொலிஸாரால் மேற்கொள்ளப்படுவதாகக் கேள்வியுற்ற அமிர்தலிங்கம் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்தார். அங்கு தாம் சந்தித்த துன்பகரமான அநுபவங்கள் குறித்து ஆகஸ்ட் 19இல் நாடாளுமன்றத்தில் அவர் விபரித்தார்.

"அசம்பாவித சம்பவங்கள் இடம்பெற்ற இடத்திற்கு நேரில் சென்றேன். அப்போது பொலிஸார் தமது துப்பாக்கிகளை என்னை நோக்கித் திருப்பினார்கள். நான் இன்று இங்கு வந்திருப்பது அதிர்ஷ்டவசமானது. பொலிஸ் சீருடை அணிந்திருந்த அவர்களது உடையில் இலக்கத் தகடுகள் காணப்படவில்லை. அப்பாவிப் பொதுமக்களை நோக்கி ஏன் துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றீர்கள் எனக் கேட்டேன். அவர்கள் அதனைப் பொருட் படுத்துவதாக இல்லை. தூஷண வார்த்தைகளால் என்னை ஏசித் தள்ளினர்." என்று அமிர்தலிங்கம் விபரித்தார்.

**இணைந்து எழுதுவது**
**த.சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

அத்துடன் சம்பவ இடத்திலிருந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரிடம் தன்னை அடையாளப்படுத்தி இனங் காட்டியபோது அருகிலிருந்த கான்ஸ்டபிள் ஒருவர் துப்பாக்கிப் பிடியால் தாக்கியதாகவும் அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். இத்தகைய ஒரு பொலிஸ் படையை வைத்துக்கொண்டு நாட்டை ஆட்சி செய்ய முடியுமா எனக் கேள்வி எழுப்பியதோடு, பொலிஸாரால் தாக்கப்படும் இறுதி முனையில் தமிழ் மக்கள் இருப்பதாகவும் சுட்டிக் காட்டினார்.

பிரதமர் ஜயவர்த்தனா உடனடியாகவே நடவடிக்கை எடுத்தார். பொலிஸார் பொலிஸ் நிலையங்களுக்கு மீள அழைக்கப்பட்டு அந்த இடங்களில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பணி இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இதனிடைப்பட்ட சம்பவங்களில் நால்வர் உயிரிழந்திருந்தனர். சுமார் முப்பதுக்கும் மேற்பட்டோர் காயங்களுடன் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டிருந்தனர். யாழ்ப்பாணக் குடாநாட்டு நிலைமை இவ்வாறிருக்க நாட்டின் இதர பகுதிகளிலும் தமிழ் மக்கள் மீதான தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. இதற்குக் காரணமாக அமைந்தது இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாக மாணவர்கள் அப்புறப்படுத் தப்பட்ட விதமாகும்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தில் பயின்றுகொண்டிருந்த சிங்கள மாணவர்கள் பாதுகாப்பின்மை காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேரூந்துகள் விசேடமாக அமர்த்தப்பட்டு அவைகளில் சிங்கள மாணவர்கள் திரட்டி அனுப்பிவைக்கப்பட்டனர். இம் மாணவர்கள் சென்ற இடம் எல்லாம் தமிழர்கள் அவர்களைத் தாக்கி அனுப்பி விட்டதாகச் செய்திகள் பரவவிடப்பட்டது. இதனால் அநுராதபுரம், குருநாகல், மாத்தளை, பொலநறுவை, பாணந்துறை, கண்டி போன்ற இடங்களிலிருந்த தமிழர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்தன. இப் பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு அமுலானபோதும் நிலைமை கட்டுக்குள் வரவில்லை. வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்தன. சில தினங்களுக்குள் கொழும்புக்குள் இனக் கலவரம் வெடித்தது.

> *ஆகஸ்ட் 29இல் வெளியான 'டெயிலி நியூஸ்' பத்திரிகைச் செய்தியின்படி 112 தமிழர்கள் கொல்லப்பட்டிருந்தனர். சுமார் 25,000 தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டிருந்தனர். சுமார் 1000 மில்லியன் ரூபா பெறுமதியான தமிழர்களின் சொத்துக்கள் சிதைத்து நாசமாக்கப்பட்டிருந்தன. இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக சுமார் 4000 பேர் கைதுசெய்யப்பட்டபோதும் பெரும்பாலானவர்கள் உடனடியாகவே விடுதலை செய்யப் பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.*

ஆகஸ்ட் 19இல் கொழும்பின் தெகிவளைப் பகுதியில் கூடிய காடையர் கும்பல் தமிழர்களுக்குச் சொந்தமான வீடுகளை இனங்கண்டு கொள்ளையடித்தது. தமிழர்களது கடைகளை எரித்து நாசமாக்கியது. தமிழர்களுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பி ஆரவாரம் செய்தது. ஆகஸ்ட் 30ஆம் திகதி காலை 5.00 மணிக்கு முன்பான சுமார் முப்பத்தைந்து மணி நேரம் நாடு முழுவதிலும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டது. இராணுவமும் கடற்படையினரும் சேவைக்கு அழைக்கப்பட்டு நிலைமை ஒருவாறு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. ஆனால், ஆகஸ்ட் 29இல் வெளியான 'டெயிலி நியூஸ்' பத்திரிகைச் செய்தியின்படி 112 தமிழர்கள் கொல்லப்பட்டிருந்தனர். சுமார் 25,000 தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டிருந்தனர். சுமார் 1000 மில்லியன் ரூபா பெறுமதியான தமிழர்களின் சொத்துக்கள் சிதைத்து நாசமாக்கப்பட்டிருந்தன. இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக சுமார் 4000 பேர் கைதுசெய்யப்பட்டபோதும் பெரும்பாலானவர்கள் உடனடியாகவே விடுதலை செய்யப் பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

இவ்வேளையில் ஐ.தே.க. அரசு பாராளுமன்றத்தில் முன்வைத்த கொள்கைப் பிரகடனத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி பூர்வாங்க ஆட்சேபனையொன்றைக் கிளப்பியது. தனித் தமிழீழ அரசு ஒன்றை அமைப்

## (அரசியல் தொடர்)

பதற்காகத் தமிழ் மக்கள் வழங்கியுள்ள ஆணையை அரசாங்கம் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளவில்லை என்பதே இந்த பூர்வாங்க ஆட்சேபனையின் சாராம்சமாக இருந்தது. இது அரசாங்கத் தரப்பிலிருந்த சிரேஷ்ட தலைவர்களைச் சீண்டிவிட்டது. ஐ.தே.க. தரப்பிலிருந்த பலரும் ஒருவர் பின் ஒருவராக எழுந்து 'அமிர்தலிங்கமும் கூட்டணித் தலைவர்களும் பேசிய வெற்று வாய் வீரமும் உசுப்பிவிட்டுள்ள இனவாத உணர்வுகளும்தான் இனக் கலவரத்துக்குக் காரணம்' எனப் பகிரங்கமாகக் கண்டனம் தெரிவித்தனர்.

தனித் தமிழீழ அரசு அமைக்கப் போவதாக வாக்குறுதி வழங்கி வாக்குகளைப் பெற்றுக்கொண்ட அமிர்தலிங்கம் நாடாளுமன்ற வரையறைகளுக்குள் செயற்பட முனைந்தமை யானது தமிழ் இளைஞர்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தி இருந்தது. எதிர்க் கட்சித் தலைவர் பதவிக்காக அவர் தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை மறந்து போயிருப்பதாகக் குற்றச்சாட்டுகள் மேலெழுந்தன. அமிர்தலிங்கம் எதிர்நோக்கிய இந்த நெருக்கடி குறித்துச் சிங்களத் தலைவர்கள் எவரும் கவனத்திற்கு எடுக்கவில்லை. அமைச்சர்கள் கலந்துகொள்ளும் வைபவங்களைப் புறக்கணிப்பது என்றும் அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கான குழுவைப் பகிஷ்கரிப்பது என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் எடுத்த முடிவு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களுக்கு எரிச்சலையே ஊட்டியது.

(தொடர்ந்து வடியும்....

இரகசியம் காத்தல் அவசியம் என்பதால் பெயர்கள், இடங்கள் யாவும் கற்பனையில்...

# நெஞ்சினில் என்ன காயமோ...? 48

### மெய்ப்பாட்டு நோய் என்றால் என்ன?

மீளவும் மீளவும் தோன்றுகின்ற, அடிக்கடி மாற்றம் அடைகின்ற பல்வேறுபட்ட உடல் நோய் அறிகுறிகளே இந்த நோயின் பிரதான அம்சமாகும்.

இப்படியான உடல் அறிகுறிகள் பொதுவாக, ஒருவர் உளநல உதவியைப் பெறுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே காணப்படும். இந்த நோயாளிகளில் பெரும்பாலானோர் முதல் நிலை மற்றும் விசேட மருத்துவ சேவைகளுடன் நீண்ட சிக்கலான தொடர்புகளைக் கொண்டிருப்பார்கள். இக் காலப் பகுதியில் அவர்கள் எவ்வித பிரயோசனமும் அற்ற சத்திரசிகிச்சைகளுக்கு உள்ளாகி இருப்பதுடன் அவர்களில் செய்யப்பட்ட பரிசோதனைகளில் பெரும்பாலானவை சாதாரண முடிவுகளையே காட்டுவதாயும் அமைந்திருக்கும்.

### இந் நோய் யாரைக் கூடுதலாகப் பாதிக்கும்?

இந் நோய் கூடுதலாக விடலைப் பருவத்தினரில் அல்லது வாழ்க்கையின் ஆரம்பப் பகுதியில் தொடங்குகிறது. இது ஆண்களை விடப் பெண்களில் அதிகம் காணப்படுகிறது.

## உள மருத்துவம்

### இந் நோய்க்கான காரணங்கள் யாவை?

இந் நோய் பல்வேறுபட்ட காரணிகளின் இடைத்தாக்கத்தால் ஏற்படுவதாக அறியப்பட்டுள்ளது. இக் காரணிகளில் முக்கியமானவை வருமாறு.

1. உடல் உணர்ச்சிகள் தொடர்பான மிகையான அவதானிப்பு.

2. சாதாரண உணர்வொன்றை நோய் ஒன்றின் அறிகுறியாகப் பிழையாக விளங்கிக்கொள்ளுதல்.

> உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விட உள நோயினால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாகக் காணப்படும் இன்றைய கால கட்டத்தில், உள நலம், உளப் பாதிப்புகள், உள நோய்கள் பற்றி அறிந்துகொள்வதும் இவற்றிற்கான வைத்திய முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகிறது. எனவே மேற்படி உள மருத்துவத் துறையில் அநுபவம் பெற்றவர்களும், நிபுணர்களுமான வைத்திய கலாநிதி திரு. த. கடம்பநாதன் (எம்.பி.பி.எஸ். எம்.டி. உள மருத்துவம்) அவர்களும் உளவியலாளர் திரு. தி. ரவீந்திரன் (எம்.ஏ.எம்,ஏ., எம்.பில்., உள மருத்துவம்) அவர்களும் இணைந்து தமது அநுபவங்களைப் பகிர்வர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

3. நோய் ஒன்று தொடர்பான அதீதமான எண்ணங்கள்.

4. சிறு வயதுப் பராயத்தில் இன்னும் ஒரு குடும்ப அங்கத்தவரில் காணப்படுகின்ற ஒரே விதமான உடல் அறிகுறிகள்.

5. இளமைப் பருவத்தில் ஏற்படுகின்ற இயல்புகளும் பிரிவுகளும்.

### மெய்ப்பாட்டு நோய்களின் பொதுவான அறிகுறிகள் யாவை?

இந்த அறிகுறிகள் உடலின் எந்த ஓர் பாகத்தையோ தொகுதியையோ சார்ந்ததாக அமையலாம். ஆயினும், சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்புடைய வாந்தி, ஓங்காளம், புரையேறுதல், வலி போன்ற அறிகுறிகளும் சொறி, எரிவு, விறைப்பு போன்ற மாறுபட்ட தோல் உணர்வுகளும் மிகவும் பொதுவாகக் காணப்படுகின்ற அறிகுறிகளாகும். பாலியல் மற்றும் மாதவிடாய்க் குறைபாடுகளும் ஒரு சிலரில் பொதுவாகக் காணப்படுகிறது.

### மெய்ப்பாட்டு நோயுடன் இணைந்து காணப்படுகின்ற மற்றைய பிரச்சினைகள் யாவை?

ஒரு சில குறிப்பிட்ட நோயாளிகளில் குறிப்பிடத் தக்க அளவு மனச்சோர்வும் பதற்ற நிலையும் காணப்படலாம். நோய்க்கான அறிகுறிகளைக் குறைப்பதற்காக இவர்கள் அடிக்கடி வலி நிவாரண மாத்திரைகளையும் தூக்க மாத்திரைகளையும் உட்கொள்வதால் காலப்போக்கில் அந்த மருந்துகளுக்குப் பழக்கப்பட்டுவிடும் அல்லது அடிமைப்பட்டு விடும் நிலையும் ஏற்படுகின்றது.

### மெய்ப்பாட்டு நோயால் ஏற்படும் பாதிப்புகள் யாவை?

தொடர்ச்சியாக நீடிக்கும் இந் நோய் அறிகுறிகளால் குடும்ப உறவுகளிலும் சமூக செயற்பாடுகளிலும் நட்புகளிலும் பாரிய அளவு தாக்கங்கள் ஏற்படுகின்றன. இது அவர்களின் தொழிலையும் சமூகத்தில் அந்தஸ்தின் நிலைமையையும் மாற்றக் கூடும்.

# கணவனைக் கண்டாலே வெறுப்பு

இந்த அணுகுமுறை வந்தபின், எதையும் 'லைட்' ஆக எடுத்துக்கொள்ளத் தோன்றும். இது கணவன் மனைவி மீதும், மனைவி கணவன் மீதும் செலுத்துகிற அக்கறைக்கு ஒரு முட்டுக்கட்டை போல அமைந்துவிடுகிறது. இந்தக் கால கட்டத்தில், ஆழ்மனதில் இரண்டு பேருக்குமே ஒருவர் மீது ஒருவருக்கு அன்பும் அக்கறையும் உண்டு என்றாலும் அது அடிக்கடி வெளிப்படாது. இதனால், சிறு சிறு விஷயங்களுக்குக் கூட சச்சரவு ஏற்படும்.

திருமணமாகி, ஆறேழு ஆண்டுகள் ஆகிவிட்ட ஒரு தம்பதியர், 'எங்களுக்குள்ளே அடிக்கடி சச்சரவு வருகிறது' என்று என்னிடம் வந்தார்கள். இரண்டு பேருடனும் நான் ஒருசேரப் பேசினேன். சண்டை வருகிறது என்பதை இரண்டு பேரும் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டே இருந்தார்களே ஒழிய, அதற்கு என்ன காரணம் என்பதை அவர்கள் வெளிப்படையாகப் பேசவே இல்லை.

சிறிது, நேரம், மனைவியை வெளியே இருக்கச் சொல்லிவிட்டு, கணவரிடம் நான் பேசினேன். சச்சரவு, கருத்து வேறுபாடு என்பது கணவன், மனைவியிடையே சகஜமான ஒன்றுதான். இரண்டு பேரும் எப்போதும் எல்லா விஷயங்களிலும் நூற்றுக்கு நூறு சதவீதம் கருத்து ஒற்றுமை கொள்ளுவது என்பது சாத்தியமே இல்லை. வாழ்க்கை என்றால் கருத்து வேறுபாடுகளும், அதன் காரணமாகச் சச்சரவு விவாதங்களும் இருக்கவே செய்யும்.



அது இல்லை என்றால், வாழ்க்கை சுவாரசியமாக இருக்காது என்று அவருக்கு எடுத்துச் சொன்னேன். அடுத்தபடியாக அவரை வெளியில் சிறிது நேரம் அனுப்பிவைத்துவிட்டு, அவரது மனைவியிடம் பேசினேன்:

"சர்ச்சை உருவாவதற்கும் வளருவதற்கும் உங்கள் கணவர்தான் காரணம் என்று குற்றம் சாட்டுகிறீர்களா?" என்று நான் அவரைக் கேட்டபோது,

"சில சமயங்களில் அவர் காரணம், பல தடவைகளில் நான் காரணம்" என்றார் அவர்.

"நீங்கள்தான் காரணம் என்பதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள்! அப்புறம் அதைத் தவிர்ப்பது சுலபம்தானே? நீங்கள் அதை முயற்சி செய்யலாமே!" என்றபோது, அவர் கொடுத்த விளக்கம் எனக்கு இலேசாக அதிர்ச்சியைக் கொடுத்தது.

"எனக்கு என் கணவரைக் கண்டாலே வெறுப்பாக இருக்கிறது" என்பதுதான் அவர் பதில்.

"அவரிடம் ஏதாவது கெட்ட பழக்க வழக்கங்கள் இருக்கிறதா? புகைப் பிடிக்கிறாரா? குடிகாரரா? எதற்கெடுத்தாலும் கோபப்படுபவரா? உங்களை அடித்துத் துன்புறுத்துகிறாரா?"

"அப்படி எந்தப் பழக்கங்களும் அவரிடம் கிடையாது; ஆனால், அவர் என்னை நெருங்கினாலே எரிச்சல் வருகிறது."

இப்படிச் சொன்னவுடன் எனக்கு இலேசாக விஷயம் புரிய ஆரம்பித்தது. "ஏன்? எரிச்சல் வர என்ன காரணம்?"

உடனடியாக என் கேள்விக்கு அந்தப் பெண்மணியிடமிருந்து பதில் வரவில்லை. உடனே நான் அந்தப் பெண்மணியிடம், "உங்களிடம் ஏதோ ஒரு விதத் தயக்கம் இருக்கிறது. என்ன என்று தயக்கம் இல்லாமல் என்னிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.

தொடர்ந்து வரும்.........

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.58க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எம்.ஜே.எம்.றம்ஸி, 10. பியரத்னாராம பிளேஸ், தெஹிவளை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. வே.குமாரசுவாமி, தர்மசோக மாவத்தை, வட்டப்புளுவ, கண்டி.
2. கேக்கே டீன், பழைய சந்தை, ஏறாவூர் - 03.
3. க.கமால்தீன், புன்னக்குடாவீதி, ஏறாவூர் - 03.
4. கே.அரசேஸ்வரன், கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
5. த.ஹரிதாசன், டைக் வீதி, திருகோணமலை.
6. ஜே.அன்ரன் யூலியஸ், மத்திய வீதி, திருகோணமலை.
7. க.நிரஞ்சன், பிரதிபிம்பராம விதி, கலுபோவல.
8. இ.சுதர்சினி, வாசிகசாலை வீதி, கொம்மாந்துறை, செங்கலடி.
9. பா.செல்வராணி, மாவடி, வட்டுக்கோட்டை.
10. ஜெ.அபிலாசினி, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை.

## குறுக்கெழுத்துப் போட்டி 60

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ |
| 5 | ■ | 6 | ■ | 7 |
| 8 | 9 | 10 | ■ | 11 |
| 12 | ■ | 13 | 14 | ■ |
| 15 | 16 | 17 | ■ | 18 |
| 19 | 20 | ■ | 21 | 22 |

### இடமிருந்து வலம்

1. வாக்காளர்களை வேட்பாளர் தேடிவரும் காலம்.
8. புல் (திரும்பியுள்ளது)
13. பலம்
15. இராசிகளில் ஒன்று (குழம்பியுள்ளது)
19. இராவணன் சீதையைக் கவர மாரீசன் போட்ட வேடம் (திரும்பியுள்ளது)
21. மகாபாரதத்தில் சகுனி போல, இராமாயணத்தில்.

### மேலிருந்து கீழ்

1. கமலஹாசன், சிவாஜிகணேசன் நடித்த படம்.
3. மகன் (குழம்பியுள்ளது).
7. சரஸ்வதியின் கையில் இருப்பது.
16. மானமுடையவன் (தலைகீழாக உள்ளது)
18. பேரறிவுடையோன்.

## குறுக்கெழுத்துப் போட்டி 58 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ஜ | 2 னா | 3 தி | 4 ப | 5 தி |
| 6 ன | ■ | 7 ணை | 8 அ | ■ |
| 9 நா | 10 கு | ■ | 11 ய | ■ |
| 12 ய | ■ | 13 கு | 14 ம் | 15 ண |
| 16 க | 17 வி | 18 ல் | ■ | 19 பி |
| 20 ம் | 21 ப | 22 ரு | 23 ப | 24 ம் |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 10.03.2004 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

**குறுக்கெழுத்துப் போட்டி இல-60**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ. இல. - 1772,**
**கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.


## ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

## வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

**RATHAA TEXTILE**
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 2364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

34

பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்: .........................
கையொப்பம்: .................

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 13-03-2004

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு சேலை? புங்குடுதீவு வாசகிக்கு அதிர்ஷ்டம்! 32

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**க.யாழினி.**
10ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# வீடுவரை உறவு

வீட்டு முற்றத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு கூட்டம் சவத்தைப் புதைக்க வேண்டுமென்று பேசிக்கொண்டது. எதிரே நின்று கொண்டிருந்த ஒரு கூட்டம் அதைத் தடுத்து இல்லை சவத்தை எரிக்க வேண்டுமென்றது.

"என்னதான் நாம் முடிவெடுத்தாலும் அவர்களது மகன் வராமல் சவத்தை எடுக்கக் கூடாது"


அந்தக் கூட்டத்தில் நின்றுகொண்டிருந்த சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு மனிதர் கூறினார்.

மனைவி செல்லம்மாள் நிரந்தரமாக உறங்கிக்கொண்டிருக்கும் கணவர் செல்லையாவைச் சுற்றிச் சுற்றி தலையிலடித்துக்கொண்டு கதறிக் கதறி அழுது தொண்டையும் கட்டிப்போனது. மகள் சுபாங்கி தந்தையின் காலடியில் உட்கார்ந்து கொண்டு கண்ணீரைச் சிந்திக் கொண்டிருந்தாள்.

மகன் செல்வம் மட்டும் இன்னும் வரவில்லை. அவன் எப்போது வருவது? எப்போது சவத்தை எடுப்பது? எல்லாம் குழப்ப நிலையில் இருந்தன.

செல்லையாவின் குடும்பம் ஒரு சாதாரண குடும்பம்தான். ஒரு ஆண் பிள்ளையும் ஒரு பெண் பிள்ளையும் மட்டுமே. ஏழையாக இருந்தாலும் ஊரில் மிகவும் கௌரவமாக வாழ்ந்தவர்தான் செல்லையா. வீட்டுக் கஷ்டத்தின் மத்தியிலும் மகனைப் பல்கலைக்கழகம்வரை கொண்டு சென்றவர் அவர். பல்கலைக்கழகம் சென்ற பட்டதாரிகளில் வேலையில்லாதோர் பட்டியலில் செல்வமும் ஒருவன்.

கஷ்டப்பட்டுப் படித்து வேலை கிடைக்காததால் வீட்டாரின் சம்மதத்துடன் இரண்டு வருடம் வெளியூரில் போய் இருந்துவிட்டு வருவதாக முடிவெடுத்தான். அப்பா செல்லையாவும் மகனின் முயற்சிக்கு இடம் கொடுத்து உறவினர்களிடம் கொஞ்சம் கொஞ்சமாகக் கடன் பெற்று எல்லாவற்றையும் ஒழுங்கு பண்ணி மகன் செல்வத்தை அனுப்பி வைத்தார். அன்றைய தினம் அப்பாவின் முகத்தைக் கண்டுவிட்டுச் சென்றவன், இன்று கண் அயர்ந்து நிரந்தரமாக உறங்கிக் கொண்டிருக்கும் அப்பாவின் முகத்தை இறுதியாக் காண வருகின்றான்.


இராமச்சந்திரன் தவேந்திரன்
ஹாலி-எல.

என்ன செய்ய? செல்லையாவுக்கு தொடர்ந்து நீடித்திருந்த நோயாக இருந்திருந்தால் ஏற்கனவே செல்வத்திடம் மகள் சுபாங்கி அறிவித்திருப்பாள். திடீரென "நெஞ்சை அடைக்குது. கொஞ்சம் தண்ணீர் கொடு செல்லம்மாள்" என்று சொன்னவர், ஓரிரு நிமிடங்கள் வெட்டி வெட்டி இழுத்தது. அவ்வளவுதான். செல்லையாவின் உயிர் பரிதாபகரமாக அவர் உடலை விட்டுப் பிரிந்தது.

செல்லையாவின் உடல் மயானத்தை நோக்கி எடுத்துச் செல்லப்பட்டது..

மகன் செல்வம் வந்துவிட்டான்.

"அப்பா என்னைய விட்டுப் போயிட்டிங்களா? உங்கட முகத்த உயிரோட பார்க்கக் கூட கிடைக்கவில்லையே" என்று அப்பாவின் உடலைக் கட்டிப் பிடித்து அழுதான். அவன் அழுததில் அவ்விடத்தில் இருந்த பாதி இதயங்கள் கண்ணீர் வடித்தன. மயானத்தில் தகப்பனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்துவிட்டு கண்ணீருடனே வீடு திரும்பினான்.

வீட்டிற்குச் சென்றதும் அம்மா செல்லம்மாளும் தங்கை சுபாங்கியும் செல்வத்தின் காலடியில் வீழ்ந்து புரண்டு புரண்டு கத்தினார்கள். இனி என்னதான் அழுது புரண்டாலும் என்ன செய்ய முடியும்? காலனவன் பறித்துவிட்டான் அந்த அப்பாவி உயிரை. ஒருவாறு காலங்கள் ஓடிச் செல்லையாவின் கருமக்கிரியை எல்லாம் முடிவடைந்து விட்டது. ஒரு நாள் அந்த அந்திச் சாயலில் செல்வம் மீண்டும் மெதுவாக அம்மாவிடம்-

"அம்மா திரும்பவும் நான் வெளியூர் செல்லப் போகின்றேன். போகும்போது தங்கை சுபாங்கியையும் கூட்டிக்கொண்டு போகப் போறேன். இப்ப அப்பாவும் இல்ல. உங்களுக்கும் உதவிக்கு யாரும் இல்ல. அதனால நீங்களும் எங்களுடன் வந்திடுங்கம்மா" என்று மெதுவாக விழிகளில் நீர் வழிந்தபடி கூறிமுடித்தான்.

"மகனே வேண்டாமப்பா. உங்க அப்பாவும் போய் சேர்ந்திட்டாருதான். அதுக்காக நான் அங்க உங்களுடன் வந்து என்ன செய்யப்போறேன். இன்னும் கொஞ்ச நாளைக்குத்தான் நானும் இருப்பேன்.

அப்புறம் உங்க அப்பா மாதிரி நானும் போய்ச் சேர்ந்திடுவன்.

நானும் உங்க கூட வந்திட்டா அந்த மனுசனுக்கு விளக்கு ஏற்றி வைக்கக் கூட ஒரு நாதி இல்லை. அதனால நான் இங்கே இருக்கிறேன். எங்களது வாழ்வு காலமெல்லாம் முடிஞ்சு போச்சு. உங்களுக்கு இன்னும் வாழ வேண்டிய வயசிருக்கு. நீங்க ரெண்டு பேரும் நல்லப் படியாப் போய்ச் சேருங்கப்பா. நான் உயிரோடு இருந்தா மட்டும் என்னை வருடத்திற்கு ஒரு முறை வந்து பார்த்துவிட்டுப் போங்கப்பா" என்றாள் செல்லம்மாள். விழிகளில் நீர் ததும்பியது.

செல்வம் தன் தங்கை சுபாங்கிக்கு விசா எல்லாம் ஏற்பாடு செய்துகொண்டு டிக்கட் ஓ.கே நாள் வந்ததும் இருவரும் அம்மாவிடம் ஆசி பெற்று வீட்டை விட்டு கிளம்பினார்கள்.

செல்லம்மாள் விழிகளில் நீர் வழிந்தோட அவர்களை வழியனுப்பி வைத்தாள். அப்பா மடிந்து போனார். அம்மா இங்கு அவர் நினைவுகளுடன் தனிமையில். மகனும் மகளும் இந் நாட்டு மண்வாசனையை விட்டே போய்ச் சேர்ந்தனர்.

## இவ்வார சிறு கதைகள்

# ஏக்கம்

ஈஸ்ஜின் கஜோஷ்,
யாழ்ப்பாணம்.



எல்லாரும் இப்பவெல்லோ இடப் பெயர்வைக் கண்டவையள். நாங்கள் முதல் முதலில பலாலியை விட்டு எழும்பினனாங்கள். அண்டைக்குப் பிடிச்ச தரித்திரம் இன்னும் விட்டுப் போகேல. எத்தனை அகதி முகாமில் இருந்திட்டம். ஆண்டவா எப்ப விடிவு வருமோ! என்ன மாதிரி இருந்தம். தொழிலுக்குக் குறைச்சலில்ல. கடலில கால் வைச்சால் அண்டைக்கு உழைச்சது பத்து நாளைக்குக் காணும். அப்பிடி உழைப்பு. இப்ப என்ன செய்யுறது. நாளாந்தத்திற்கே கஷ்டமாய் இருக்குது.

"என்னப்பா செய்யுறியள்? தேத்தண்ணி ஆறப் போகுது"

மனைவி கூப்பிடும் சத்தம் கிணத்தடியில நிண்ட எனக்குக் கேட்டது. என்னை நம்பி வந்தவள். பத்து வருசமாச்சு. கஞ்சி குடிச்சாலும் உங்களோடதான் வாழுவன் எண்டு வீட்டைவிட்டு வந்தவள், அண்டு தொட்டு இண்டைக்கு வரையும் அகதி முகாமில வாழுறம். அண்டைக்கு இரண்டு பேர் நாங்கள். இனசனம் எங்களைச் சேர்க்கேல. இப்ப ஐஞ்சு பேராய்ப் போட்டம். மூத்தவனுக்கு எட்டு வயசு. இரண்டாவது பெட்டைக்கு ஆறு வயசு. கடைக்குட்டியும் பெட்டைதான். தை பிறந்தால் நேசறிக்கு அனுப்ப வேணும். அதுகளுக்கு ஆசைக்கு ஒண்டும் வாங்கிக் குடுக்கேலாது இருக்கிறன். ஆண்டவா எப்ப விடிவு வருமோ? மீண்டும் மனைவியின்ர அழைப்புக் கேட்டது. பழசையெல்லாம் நினையாமல் இருப்பமெண்டால் மனசு கேட்டாவல்லோ.

மனிசி தந்த தேத்தண்ணியைக் குடிச்சுக்கொண்டு நேரத்தைப் பாத்தன். நாலு ஆச்சு.

"என்னப்பா பிள்ளையள் பள்ளிக்கூடம் போக முதல் வந்திடுங்கோ! நேற்றும் மூத்தவன் சாப்பிடாமல்தான் போனவன்."

"எனக்கு விருப்பமில்லாத மாதிரியல்லோ கதைக்கிறீர்! என்ன செய்ய? நேற்றைக்கு ஒண்டும் மாட்டேல. பயப்பிடாதயும். இண்டைக்கு கடவுள் வழிவிடுவார்" எண்டு மனைவியைத் தேற்றினேன். ஏக்கத்தோட வழியனுப்பி வைக்க வாசல் வரைக்கும் வந்தாள்.

சைக்கிளும் கிறவல் றோட்டில ஊரத் தொடங்கியது. சைக்கிள் போடுற சத்தம் காணாது எண்டு பாத்தால் நாயின்ர தொல்லை ஒரு பக்கம். குமார் போட்டானோ தெரியாது. மூண்டு மணிக்கு வாறனெண்டு சொன்னனான். எதுக்கும் குமாரைப் பாத்திட்டுப் போவோம் எண்டு சைக்கிளைத் திருப்பினன். குமார் வீடு வந்ததும் கூப்பிட்டுப் பாப்பம் எண்டு சைக்கிள விட்டு இறங்கமுன்...

"இவ்வளவு நேரமும், உம்மைத்தான் பாத்துக்கொண்டு நிண்டுட்டுப் போறான்" எண்டு தாய் கூறியது காதில விழுந்தது. நலம் விசாரிச்சபடி மீண்டும் மிதிக்கத் தொடங்கினன். குமார் யாருமில்ல. என்னோட தொழிலுக்கு வாறன். நண்பன் சற்று வசதியானவன். நாலு பிள்ளையள் அவனுக்கு. எத்தின தரம் உதவி செய்திருக்கிறான். மறக்க முடியுமே.

கடல் காத்து உடம்பில பட்டுக்கொண்டிருந்தது. குளிரும் தாங்கேலாமல் இருக்குது. கடவுளை வேண்டிக்கொண்டு கடலில காலடி எடுத்து வைச்சன்.

என்ர வலையை நெருங்கினன். வலையை இழுக்கும்போது தலை சுத்தத் தொடங்கிச்சு. கடவுளே! ஆரோ வேளையோட வந்து வலையை அறுத்திட்டாங்கள். வலையைத் தூக்கித் தூக்கி ஒண்டாவது மாட்டாதா எண்ட ஏக்கத்தோட பாத்தன் ஒண்டையும் காணேல. நெஞ்டைச்சது. வாய்விட்டுக் குழறி அழுதன். இதைத் தவிர என்னதான் செய்ய முடியும்? வீட்டை மனைவி சொன்ன கடைசிச் சொல்லு காதில ஒலிச்சுக்கொண்டிருந்தது. கரையை நோக்கி கால் போன போக்கிலே நடந்தன். ஏதோ மிதந்துகொண்டு என்னை நோக்கி வருவது தெரிந்தது. என்னையறியாது அதுக்கிட்டே ஓடிப் போனன். உற்றுப் பாத்தன். அட, தலையில்லாத முண்டம். பயத்தில உடலில் இருக்கிற வலுவைப் பயன்படுத்திக் கொண்டு கரையை நோக்கி ஓடி வந்தன். கரை வந்ததும் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது. வீட்டு நினைவு வந்தது. சுற்றும் முற்றும் பார்த்தன். ஒருவரும் இல்லை எண்டதை உறுதிப்படுத்திக்கொண்டன். இன்னும் இருட்டாய்த்தான் கிடந்தது. மனதைத் திடப்படுத்திக்கொண்டன். அந்த முண்டத்தை நோக்கி ஓடினன். கையில மின்னியதுகளைக் கழட்டினன். பொக்கற்றுக்குள் கையை வைச்சுப் பாத்தன். தாள்களும் சிறிய பையும் கையில வந்தது. அவற்றை சறத்துக்குள் வைச்சு மறைவாச்சுக் கட்டினன். மீண்டும் சுத்திப் பாத்தேன். கரையை நோக்கி வேகமா ஓடி வந்தன். என்ர பிள்ளையள் மூண்டும் சந்தோசமாய் சிரிச்சுச் சிரிச்சுச் சாப்பிடுறதைப் பாத்தபோது மனம் குளிர்ந்தது.

மனைவி "பின் பக்கம் ஆரோ குழறிக் கேக்குது" எண்டு சொல்லிக்கொண்டு ஓடினாள். இதுதான் சந்தர்ப்பம் எண்டு மேல் செத்தைக்குள்ள மறைச்சு வைச்சிருந்த பையை எடுத்து ஆராயத் தொடங்கினன். அடையாள அட்டையோட நூறு ரூபாய் காசும் அதுக்குள்ள கிடந்தது. ஆரண்டு அடையாள அட்டையில கிடந்த படத்தை உத்துப் பாத்தன். கண்ணைக் கசக்கிக் கசக்கிப் பாத்தன். கைகால் விறைச்சது. மயக்கம் வந்துதிடுமோ எண்ட பயம். கண்களால நீர் சொரிஞ்சுது. யாற்ர வீட்டை குழறிக் கேட்குது எண்டதை ஊகித்துக்கொண்டன். மெல்லமா எழுந்து அடுப்புக்குள்ள அடையாள அட்டையைப் போட்டன். குமார் சிரிச்சபடி எரிஞ்சு போவதைப் பாத்து அழுதேன்.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

# சிந்தித்துப் பார்க்க....

## வாழ்வு ஒரு கனவு !

மரண அநுபவம், ஓர் உண்மையான ஆன்மீகவாதிக்கு அடிக்கடி ஏற்படும். ஆகவே, அவன் எதையுமே என்னுடையது என்று சேர்த்து வைக்க ஆசைப்பட மாட்டான். அப்படி ஏதும் தானாக வந்தால், அதை அனுமதித்து அப்பொழுதே மறந்துவிடுவான். அதைப் பற்றி நினைக்கவேமாட்டான். அதைத் தன் எதிர்காலக் கனவுகளாகக் காணமாட்டான். அதற்காக மீண்டும் மீண்டும் பிரார்த்தனை செய்யமாட்டான்.

இறந்த காலத்தின் தூசுதான் மனம். அந்தப் பற்றே உங்கள் மனம். அந்தத் தூசு உங்கள் ஆத்மா அல்லது விழிப்புணர்வு என்ற கண்ணாடியில் படிந்திருக்கிறது. அந்த மனதோடு, நீங்கள் எதைப் பார்த்தாலும் அதன் உண்மை வடிவம், உண்மைத் தன்மை விளங்காது மாறுபட்டுக் காண்பிக்கும் தன்மையே மனத்தின் குணம்.

நீங்கள் மூச்சை வெளியே விடும்பொழுது நேரும் அந்த மரண அநுபவத்தைக் கவனியுங்கள்! அதை உண்மை என்று ஏற்றுக்கொள்ளுங்கள். அப்படி இயல்பாக ஏற்றுக்கொண்டால் அந்தக் கடைசி மரணத்தையும் வெகு இயல்பாக ஏற்றுக்கொள்ள முடியும்.

"உலகத்தைத் துறந்துவிடுங்கள்" என்று கீழைநாட்டில் உள்ளவர்கள் போதிக்கிறார்கள். "நீங்கள் எதையும் இந்த உலகத்தில் சேர்த்து வைக்காதீர்கள். அப்படிச் சேர்த்து வைத்தால் மரணம் அவைகளை எடுத்துச் சென்றுவிடும்" என்றும் போதிக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள், சாதாரண எளிய மக்களை விட அடிப்படையில் மிகவும் பேராசை நிரம்பியவர்கள்.

நீங்களே கடவுள்கள். நீங்கள் சக்தியாகவும் சிவனாகவும் இருக்கிறீர்கள் என்று நான் சொல்லும்பொழுது உங்களால் நம்ப இயலவில்லை. ஏனென்றால் உங்களோடு யார் யார் வருகிறார்கள், உங்களுக்குள் யார் அமர்ந்திருக்கிறார்கள், யார் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் மறந்து வெகுகாலம் ஆகிறது. நீங்கள் சுத்தமாக மறந்துவிட்டீர்கள்.

நீங்கள் திருமணமே செய்துகொள்ளக் கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால், ஒன்றை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். அன்புதான் உண்மையானது. அன்பு வற்றிவிட்டால் திருமணம் அர்த்தமற்றதாகிவிடும்.

தியானம் பற்றி பல புத்தகங்கள் எழுத முடியும். ஆனாலும், தியானம் பற்றிய அநுபவத்தை நீங்கள் ஒருபோதும் தொட்டிருக்க முடியாது. வார்த்தைகளை கையாளுவதில் நீங்கள் மிகவும் கெட்டிக்காரர்களாக இருக்கலாம். விளங்க வைப்பதிலும் சர்ச்சைகளிலும், நீங்கள் திறமைசாலிகளாக இருக்கலாம். ஆனால், இதைப் போன்ற அறிவுக்கு வேலை கொடுக்கும் பல காரியங்களில் ஈடுபட்டு உங்களையே மறப்பதன் மூலம் பிற்பாடு இவைகள் அனைத்தும் உங்களை நீங்களே அறிந்துகொள்ள உபயோகப்படாது எனத் தெரிந்து கொள்வீர்கள்.

– ஓஷோவின்
பொன் மொழிகளிலிருந்து

# "மரத்தில் மருந்தெடுப்பார் பட்டுவிடச் செய்வாரோ மருவி நலங்கெடுத்தார் மறந்திடவும் செய்வாரோ...."

குளக்கரையில் அமர்ந்திருந்தாள் எழிலரசி. குளத்தில் தவழ்ந்து குளிரேந்தி வந்த தென்றலும் மாலைப் பொழுதின் இரம்மியமும் அவள் மனதைச் சாந்தப்படுத்துவதாக இல்லை.

அவள் உடம்பும் சுட்டது. குதித்தால் குளத்து நீரே கொதி நீராகிவிடும் என்று எண்ணினாள்.

சுகுமாரன் மேல் கோபம் கோபமாக வந்தது. 'உடம்பின் எல்லா நலன்களையும் எடுத்துப் போய்விட்டான். சூறாவளியடித்துச் சென்ற பாழ் நகரம் போலக் கிடக்கிறேன் நான். எந்தவித அக்கறையுமில்லாமல்...'

அதற்கு மேல் எண்ணவும் முடியவில்லை அவளால். உள்ளம் விம்மி உடல் குலுங்கியது.

அவள் கண்களில் நீர் திரளவில்லை; இதயத்தில் திரண்ட காரணத்தால். இமைகள் கனத்தன.

கை விரல்களைக் கோர்த்து நெரித்தாள்.

சுகுமாரன் கைகளுக்குள் அந்த விரல்கள் நெரிபட்டதை நினைத்தாள். தினவேறிக் கண்களில் அக்கினி எரிய அவன் பார்த்திருந்த நாளை நினைத்தாள்...

காதலின் கள்வெறி கொண்ட இரு உள்ளங்கள் ஒன்றில் ஒன்று கலந்துவிடத் துடித்து நின்ற நேரம் அது.

இருவருடலின் ஒவ்வொரு அணுவிலும் ஆசை துடித்து நின்றது. எழிலெல்லாம் எழுந்து நோக்க எதிரே அமர்ந்திருந்த அவளைச் சில விநாடிகள் விழிகளை அகற்றாமல் பார்த்திருந்தான் சுகுமாரன்.

அவள் மலர்க் கரங்களைப் பிடித்து நின்ற அவன் விரல்கள் அவள் உணர்ச்சிகளுடன் பேச விரும்பி, விரல்களுக்கிடையே புகுந்து இலேசாக அவற்றை நெருக்கவும் செய்தன. அந்த மலரிதழ் விரல்களும் திடீரென வலிமை பெற்று அவன் விரல்களைக் கடுமையாக அழுத்தின. அச்சமயம் வாய்கள் பேசாத எத்தனை எத்தனையோ செய்திகளை அந்த விரல்கள் பேசிக்கொண்டன. இருவர் விரல்களும் இருவர் உடல்கள் முழுவதும் பாய்ச்சிவிட்ட உணர்ச்சியலைகள் அந்த உடல்களை நெருங்கவும் வைத்தன.

சுகுமாரன் கைகளை மெல்ல விடுவித்து அவள் தோளின் மீது வைத்தான்.

அவன் கை பட்ட இடம் நோக்கி அவள் உயிர் துள்ளியது. உணர்ச்சிகள் அபரிமித வேகத்துடன் சுழன்றதால் நிலை தடுமாறிய அவள் உடல் மெல்ல நடுங்கியது.

அதே உணர்ச்சிகள் விளைவித்த தடுமாற்றத்தால் சுகுமாரன் உடலும் அதிர்ந்தது. ஊன்றுகோலாக அவளது இன்னொரு தோளையும் பற்றிப் பிடித்துக்கொண்டான்.

அப்படியும் தடுமாற்றத்தைச் சமாளிக்க முடியாதவனாய் முன் சரிந்து அவள் முகத்தோடு மோதி கன்னத்தில் இதழ்களைப் பதித்தான்.

அவன் இதழ்கள் அளித்த இன்ப வேதனையில் எழிலரசி நெளியக்கூடச் சக்தியற்றவளானாள். நெளிந்தால் பின்னால் இலேசாக அழுந்திய அவன் உடல் அதிகமாக அழுந்திவிடுமே என்ற பயமும், ஏன் அழுந்தவில்லை என்ற ஏக்கமும், ஏக்கம் விளைவித்த பலவித எதிர்பார்ப்புகளும் அவளைச் சாட்டை நுனியெனத் துடிக்க வைத்ததால், தளர்ந்து பெருமூச்சு விட்டாள்.

எந்த ஒரு அசைவையும் தனது அத்துமீறலுக்கான அழைப்பாகவே கருதும்



நிலையிலிருந்த சுகுமாரன், அவள் பெருமூச்சை விசேட அழைப்பாக எடுத்துக்கொண்டான். அத்துமீறினான்.

அதையே விரும்பியிருந்தவளாக அவள் இழைந்தாள்.

அவளுடலின் ஒவ்வொரு அணுவிலுமிருந்த உயிர்ப்பை உறிஞ்சிக் களித்தான் சுகுமாரன்.

"என்னடி, ஆள் வருவது தெரியாத யோசனையிலிருக்கிறாய்?" என்று கேட்டபடி நந்தினி வந்தாள்.

எழிலரசி நிமிர்ந்து பார்த்தாள். பிறகு தலையைக் குனிந்தபடி, "வரவேண்டியவர் இன்னும் வரவில்லையே..." என்றாள் தனக்குள்ளாகவே சொல்வது போல.

நந்தினி அவள் முகத்தை நிமிர்த்தி விஷமம் சொட்டும் கண்களுடன் நோக்கினாள்.

"கள்ளீ, அதுதானா விஷயம்? இப்படித் தனியே இருந்தால், கவலை இன்னுமல்லவா அதிகமாகும். எழுந்திரடி..." என்று அவள் தோள்களைப் பற்றினாள்.

இருந்த இடத்தை விட்டு அசையாது நந்தினியை நிமிர்ந்து பார்த்த எழிலரசியின் கண்களில் நீர்த்துளிகள் எட்டிப் பார்த்தன.

"மரத்திலிருந்து மருந்தெடுப்போர் கூட, அந்த மரம் பட்டுப் போகும்படியாக விட்டுவிடுவதில்லை. மரம் உயிர்ப்புடனிருக்கும்படி பேணிப் பாதுகாத்தபடியேதான் தமக்கு வேண்டிய மருந்தையும் எடுத்துக்கொள்வர். இந்தத் தலைவனோ, என் நலமனைத்தையும் உண்டுவிட்டு, நான் மெல்ல மெல்ல உயிரை விட்டுக்கொண்டிருப்பதைக் கவனியாது விட்டிருக்கிறாரே... இது சரியாடி?" என்று கேட்டுக் குரல் தழுதழுக்க நிறுத்தினாள்.

அருகே உட்கார்ந்துகொண்ட நந்தினி, அவள் முகத்தை நிமிர்த்திக் கண்களுக்குள் ஊடுருவினாள். "மனம் தளராதே" என்று மெல்லச் சொன்னாள்.

"போடீ, தம்முடைய வலிமையும் உயிரும் கெட யாரும் தவம் செய்வார்களா? அப்படி உயிர் கெடச் செய்யும் தவத்தால் அவர்களுக்கு என்ன பயன்? மன்னரும் தம் குடிமக்களின் செல்வத்தை முற்றாகக் கறந்துகொள்ளும்படியாக வரி வசூலிக்க மாட்டார். என் தலைவனோ என்னை முழுவதுமாக உறிஞ்சி நலங்கெடச் செய்துவிட்டு, நான் என்ன ஆனேன் என்று கூடப் பார்க்க வராமல் இருக்கிறாரே... இது நியாயமாடீ?"

"வராமல் எங்கு போகப் போகிறார்? ஏன் வீணாக அலட்டிக்கொள்கிறாய்?"

"போடி, உயிர் நைந்த பிறகு வெறும் கூட்டைப் பார்க்கவா வரப் போகிறார்? தங்கள் நலனுக்காகவும், சந்தோஷத்திற்காகவும்... ஏன் தங்களுக்காகவென்றே இருப்பதை யாரும் கெட்டழிந்து போக விடுவார்களா? அதைப் பேணியபடியேதானே தங்கள் நலனை அடைந்துகொள்வார்கள்? நீ மெச்சுகிற தலைவரோ, முற்றிலும் அழிந்துபோன பிறகும் கூட, அவர் இன்பம் துய்த்த உயிரின் ஞாபகம் வராதவராக இருக்கிறார்... கொடுங்கோல் மன்னரை விடக் கொடுமையானவரல்லவோ இவர்!" என்று சொல்லிக் கண்ணீர் சிந்தினாள் எழிலரசி.

நந்தினி அவளை இறுகக் கட்டிக்கொண்டாள்.

"இந்தப் பொக்கிஷத்தைத் தேடி விரைவாய் வந்துவிடுவார். நீ ஒன்றும் புலம்ப வேண்டாம்" என்று சொல்லித் தோழியை மடி சாய்த்தாள்.

*மரஞ்சா மருந்துங் கொள்ளார்*
*மாந்தர் உரஞ்சாச் செய்யார்*
*உயர்தவம் வளம்கெடப் பொன்னும்*
*கொள்ளார் மன்னர் நன்னுதல்*
*நாம்தம் உண்மையின் உளமே*
*அதனால் தாம்செய் பொருள் அளவு*
*அறியார் தாம்கசிந்து என்றூழ்*
*நிறுப்ப நீள் இடை ஒழியச்*
*சென்றோர் மன்றநம் காதலர்...*
*(நற்றிணை : 226 : 1 – 7)*

✍ வாகன விபத்துக்கள் அதிகரித்து வருகின்றனவே, என்ன காரணம்?

–க.தர்சன், கொழும்பு.

வேகமாகச் சென்று அதிகமாகப் பணம் சேர்க்கும் ஆசைதான்! அமெரிக்காவில் ஒரு வீதியில் இப்படி ஒரு அறிவிப்புப் பலகை எழுதப்பட்டிருக்கிறது :

"நாற்பது மைல் வேகத்திற்கு மேல் சென்று எங்கள் அருமையான சிறைச் சாலைக்கு விஜயம் செய்யுங்கள்! ஐம்பது மைல் வேகத்திற்கு மேல் சென்று எங்களது அற்புதமான ஆஸ்பத்திரியில் படுத்துக் கொள்ளுங்கள்! எண்பது மைல் வேகத்திற்கு மேல் சென்று எங்களது அபூர்வமான கல்லறைக்கு வாருங்கள்!"

✍ தங்கர் பச்சானின் 'தென்றல்' எப்படி?

–பெ.விக்னேஸ்வரன், ஹட்டன்.

'அழகி' வெற்றி தந்த போதையில், அதே பாணியில் கதைகளை அமைத்து, தன் கருத்துக்களை எல்லாம் அதற்குள் கொட்டித் திணித்துக்கொண்டிருந்தாரென்றால் பச்சான் வாய் ஓயாமல் பேசுகிற 'நல்ல சினிமாவுக்கும்' அவர் படங்களுக்கும் சம்பந்தமில்லாமல் போகும். மற்ற மசாலாப் படங்கள் போலவே நம்ப முடியாத காட்சிகளை நிறைத்துவிட்டு, இலட்சத்தில் ஒருத்தி ஆண்டாள் போல இப்படியும் இருப்பாள் என்று சொல்வதன் மூலம் தங்கர் பெண்களுக்குச் சொல்ல வருவதென்ன? பார்த்திபனின் அதே 'புதிய பாதை'யைத்தானா? மற்றப்படி சிறைச் சாலைக்குள் நடக்கும் அந்த 'பறை' பாட்டு தனியாக ஒரு நவீன நாடகம் போலவே இருந்தது!

✍ முன்னாள் இந்திய அதிரடி வீரர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்தின் **Golden Movments of Cricket** பார்க்கிறீர்களா?

–வி.மாலினி, கொழும்பு –13.

அதை விடுங்கள். ஒரு விளம்பரத்தில் அந்த 'பாய்ஸ்' பட நாயகி ஹரினியைப் பார்த்து வழிசலாக ஒரு 'லுக்' விடுறாரே.....அந்த நடிப்புக்கு முன்னால் சிக்ஸராவது, ஃபோராவது!

✍ சிந்தியா, விருந்துக்குப் போவதுண்டா? பொதுவாக யார் வீடுகளுக்குப் போகப் பயப்படுவீர்கள்?

–சி.அகல்யா, மண்டூர்.

காரில் ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டோ, ரீவி அல்லது ஹைஃபை ரேடியோ செற்களின் மேல் கையை வைத்தபடியோ, கொம்ப்யூட்டர் முன்னால் அமர்ந்து மவுஸில் கைவைத்துக்கொண்டு படமெடுப்பவரைப் பார்த்துச் சிரித்தபடியோ இருக்கும் புகைப்படங்களைக் கொண்ட அல்பங்களை வைத்திருக்கும் வீடுகளுக்கு.

✍ சிந்தியா, நீங்கள் பிரமிப்பது?

–முகமட் இர்பான், ஏறாவூர் – 03.

வேலைத் தளங்களில் ஜெயமோகன், யமுனா ராஜேந்திரன், இரா.முருகன் போன்றோர் மலை மலையாய் எழுதிக் குவிப்பதைப் பார்த்து!

✍ 'ஆயுத எழுத்து' படத் தலைப்பிற்கு என்ன அர்த்தம் சிந்தியா?

–எம்.விஜயகுமார், வவுனியா.

ஆய்த எழுத்து '∴' ஐத்தான் அப்படிச் சொல்கிறார்கள். மூன்று புள்ளிகளின் கதையாக இருக்கக் கூடும்.

## சிந்தியா பதில்கள்

✍ இந்தியாதான் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும் என்கிறாரே புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வன்?

–கே.திருச்செல்வம், யாழ்ப்பாணம்.

தமிழ்ச்செல்வன் மட்டுமல்ல, தமிழர்களாகிய எங்கள் எல்லோர் நினைப்பும் கிட்டத்தட்ட அந்த மாதிரித்தான் ஆகிக்கொண்டிருக்கிறது. இந்தியா தன் நிலைப்பாட்டை மாற்ற வேண்டும்; அமெரிக்கா தன் நிலைப்பாட்டை மாற்ற வேண்டும; மற்றும் ஜப்பான், கொரியா, ஹங்கேரி, பெல்ஜியம், ருவாண்டா, சோமாலியா....போன்ற நாடுகளும் மாற்றிக் கொள்ள வேண்டும், எங்களைத் தவிர.

தனித்தனி மனிதர்களுக்கு வரும் இம் மாதிரியான நோயை 'ஓட்டோ ஹிப்னோஸிஸ்' என்று மருத்துவ உலகில் சொல்கிறார்கள். நம் தமிழ் ஊடகங்களும் பேராசிரியர்களுமாக இதை தமிழ்ச் சமூகம் முழுவதுக்குமாகப் பொது நோயாக்கி வெற்றி கண்டிருக்கிறார்கள். அதனால்தான் பொங்கியெழுந்து ஏகக் குரலில் முழங்குகிறோம் : "எங்களைத் தவிர எல்லாரும் படுபிழை!"

✍ எங்கள் விருப்பத்துக்குரிய விஜய் நடித்து, இனி வரவிருக்கும் படங்கள் எவை?

–எம்.ஆர்.எம்.றிஸ்வான், கொழும்பு – 12.

'திருமலை' வெற்றிக்குப் பின் மேலும் நிதானமாகியிருக்கிறார். 'கில்லி' ஏப்ரலுக்கு வருகிறது. அதன் பிறகு ஷங்கரின் உதவியாளர் ஆர்.மாதேஷின் இயக்கத்தில் 'மதுர'.

✍ யாழ்ப்பாணத்தில் எடுக்கப் பட்டிருக்கும் அசோக ஹந்தகமவின் 'இவ்வழியால் வாருங்கள்' நாடகம் எப்படி?

–எஸ்.சுதாஷ், பூண்டுலோயா.

ஓர் அங்கம்தானே போயிருக்கிறது. மிகுதியும் வரட்டும். ஆனால், உடனடியாகத் தெரிவது, அட, நம்முடைய கதை! என்று ஒட்டிக்கொள்ள முடியாமலிருப்பதுதான். தமிழகத்திலிருந்தபடி கமல்ஹாசன், மணிரத்னம் செய்தாலென்ன, கொழும்பிலிருப்பவர்கள் யாழ்ப்பாணத்திற்கே நேரடியாகப் போய்ச் செய்தாலென்ன...யாழ்ப்பாணத்தை அதன் ஆன்மாவுடன் இவர்களால் காட்ட முடியவில்லை. அங்கிருந்து எழுதப்பட்ட சில நாவல்களும் கதைகளும் கவிதைகளும், அந்நாளைய வானொலி நாடகங்கள், பி.விக்னேஸ்வரன் தயாரித்த சில தொலைக்காட்சி நாடகங்கள்..... யாழ்ப்பாணத்தை அறிய இன்றைக்கும் உள்ள சில கலைப் படைப்புக்கள் மேற்கூறியவைதான். இன்றைய யாழ்ப்பாணம் பதிவு செய்யப்படாமலே பயத்தில் விடப்பட்டிருக்கிறது.



✍ புலிகளின் பகுதிகளிலும் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டால் தமிழ்க் கூட்டமைப்பினருக்கு வாய்ப்பு எப்படி இருக்கும்?

–ஏ.அகமது முகம்மது, காத்தான்குடி – 01.

பரீட்சை மண்டபத்தில் பாடப் புத்தகம் கிடைத்தது போல!

✍ வெற்றிகரமான கணவர்கள் யார்?

–ஜி.விக்னேஸ்வரன்,
குளியாப்பிட்டிய.

புத்தி இருந்தும், அது இல்லாத மாதிரி நடித்து குடும்பம் நடத்திக்கொண்டிருப்பவர்கள்!

✍ புலிகள் ஆனந்தசங்கரியாரை விட்டுவைத்திருக்கும் மர்மம் என்ன?

–க.கமலநாதன், ஏறாவூர் – 05.

இப்படியாகிவிட்டது நம் சமூகத்தின் ஆவலும் எதிர்பார்ப்பும்! நம் பெரியவர்கள், பிரமுகர்களுக்கும், உண்மையை உரைத்து மக்களைத் தகவலறிவுள்ளவர்களாக்கும் ஊடகத்தினருக்கும் இக் கேள்வி சமர்ப்பணம்! (ஒரு வேளை அவர்கள் விரும்புவதும் இதைத்தானோ!)

✍ வாயைப் பிளந்தபடி பார்த்து இரசிக்கக் கூடியதாக உலகில் அப்படி என்னதான் உண்டு? உங்களுக்குத் தெரிந்த ஒன்றைச் சொல்ல முடியுமா?

–மனோ கோபாலன், ஹப்புத்தளை.

பல் வைத்தியரின் அறைச் சுவரில் மாட்டியிருக்கும் படம்!

✍ சிந்தியா, உங்களுக்குப் பிடித்த கவிதை ஒன்றை எடுத்து விடுங்களேன்?

–செ.கோகிலா, கோணப்பிட்டிய.

மகளிர் தினம் வருவதால் 'தீர்வு' என்ற தலைப்பில் வத்ஸலாவின் இந்தக் கவிதை :

குருடாய் செவிடாய் ஊமையாய்
முடமாய்
மூடமாய்
எனக்கே நான் சுமையாய்
இன்னும் எத்தனை காலம்?
பொறு பெண்ணே!
வருவானொருவன் உனை சுமக்க
மேள சப்தத்தில்
மந்திரம் முணுமுணுத்தது

நாண் பூட்டி
சங்கிலி மாட்டி
இட்டுச் செல்வான்
அவன் இருப்பான்
உன்
கண்ணாய் காலாய்
நாவாய் செவியாய்
ஓ! எவ்வளவு நல்ல செய்தி!
ஆனால்....
அதற்கு நான் என்ன விலைதர
வேண்டும்?
அதிகம் இல்லை பெண்ணே!
சிறிதளவு தங்கமும் வெள்ளியும்
வசதிக்கேற்ப வாகனமும்
குடித்தனம் நடத்த பாத்திரங்களும்
ஆயுசுக்கு விசுவாசமும் உழைப்பும்
அவன் பசிகளுக்குணவும்
தந்து
நீ
குருடாய் செவிடாய் ஊமையாய்
முடமாய்
மூடமாய்
நின்றால் போதும்.

# நெட்டிலிருந்து

## கவச உடை



ஜப்பானில் பறவைக் காய்ச்சலுக்குப் பயந்து பாதுகாப்புக் கவச உடை பயன்டுத்தப்பட்டு வருகிறது.

ஜப்பானில் உள்ள அசாடா நோசன் கோழிப்பண்ணையில் கடந்த ஒரு வாரத்தில் சுமார் 18 ஆயிரம் கோழிகள் பறவைக் காய்ச்சலுக்குப் பலியாகியுள்ளன. இங்கு மொத்தம் 2 இலட்சம் கோழிகள் உள்ளன. இறந்த கோழிகள் போக மீதமுள்ள கோழிகளைக் காப்பாற்றும் பணியில் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அதற்காக அவர்கள், பறவைக் காய்ச்சல் நோய்க்கிருமிகள் தாக்காத கவச உடைகளை அணிந்து, கோழிப்பண்ணைக்குச் சென்று, பாதுகாப்புப் பணிகளைச் செய்து வருகிறார்கள். விண்வெளி வீரர் போல அணிந்து உடை அதிகாரிகள் வரிசையாக சென்ற காட்சியைப் படத்தில் காணலாம்.பயங்கரவாதம், தீவிரவாதம் என மனிதனின் அட்டகாசத்தைச் சமாளிக்க திண்டாடிக்கொண்டிருக்கும் நேரத்தில் அந்திரக்ஸ் என்ற ஒரு வகை நோய்கிருமி உலகை ஒரு கலக்கு கலக்கி விட, அடுத்ததாக சார்ஸ் வந்து ஒரு போடு போட்டது. இப்போது பறவைக் காய்ச்சல் கொஞ்சம் கொஞ்சமாக உலகில் அழிகிறதா?...

## ஆங்கிலம் கற்போம்


தென் கொரியாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஐரோபி என்ற புதிய ரோபோவை அறிமுகப்படுத்தியுள்ளனர். இந்த ரோபோ, குழந்தைகளுக்கு டியூஷன் சொல்லித் தருகிறது.

குறிப்பாக ஆங்கிலம் கற்றுக் கொடுக்கிறது. அதற்கு ஏற்ப இதில் மனிதக் குரல் ரிமோட் கன்ட்ரோலில் இயக்கப்படுகிறது. இதில் உள்ள புரோகிராம்கள் இன்டர்நெட் மூலம் அப்டேட் செய்யப்படுகிறது. நவீன ரோபோவில் ஒரு குழந்ரத ஆங்கிலம் கற்கும் காட்சியைப் படத்தில் காணலாம். இனி எதிர்காலத்தில் வீட்டுக்கு வீடு டியூசன் சொல்லித் தருகின்ற தொழிலிலிருக்கும் வாத்தியார்களுக்கு வேலையில்லாமல் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. என்ன, பிழைவிட்டால் அடிக்காது. ரோபோ பிள்ளைகளுக்குக் கொண்டாட்டம்தான்.




## மூழ்கும் கப்பல்

கப்பல் கடலில் மூழ்குவது போல் எந்தக் காட்சியைக் கண்டாலும் உடனடியாக ஞாபகத்துக் வருவது டைட்டானிக்தான் ஆனாலும் அதற்கு முன்னரும் பின்னரும் பல கப்பல்கள் கடலில் மூழ்கியுள்ளன அவையெல்லாம் சரித்திரத்தில் பதிவு செய்யப்படவில்லை. இங்கே மூழ்கிக்கொண்டிருப்பது. பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலா அருகே வெள்ளிக்கிழமை தீப்பிடித்த பயணிகள் கப்பல், ஒரு பக்கமாகச் சாய்ந்து மூழ்கத் தொடங்கிய காட்சி இது. இதில் பயணம் செய்தவர்களில் 110 பேரைக் காணவில்லை.



## அலங்கார ஊர்தி

மேற்கு ஜேர்மனியில் உள்ள டஸ்சல்டார்ப் நகரில், பாரம்பரிய கலாசாரத் திருவிழா பேரணி நடந்தது. இதில், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மிக நீண்ட மூக்குடன் இருப்பது போன்ற அலங்கார ஊர்தி இடம் பெற்றது. அவரது மூக்கில் "ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் உள்ளன" என்ற வாசகங்கள் இடம் பெற்றிருந்தன. அந்த நூதன ஊர்தியை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்த்த காட்சியைப் படத்தில் காணலாம்.

விமர்சனம் என்று வந்துவிட்டால் எவர் என்ற பேதமில்லாமல் கலைஞர்கள் உருவங்களை வடிவமைத்து பார்ப்பவரை வியக்க வைத்துவிடுகின்றனர். இதற்கு அமெரிக்க ஜனாதிபதி விதிவிலக்கா என்ன?.....




## எந்தக் கிழமையில் பிறந்தீர்கள்? என்ன அதிர்ஷ்டம் பெறுவீர்கள்?

மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிட தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என்அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.

சொல்பவர் :
ஜோதிட அறிஞர், பேராசிரியர்,
டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.
(J.P. சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)

### பிறப்பெண் 1, 10, 19, 28 வெள்ளிக்கிழமை பிறந்தவர்களுக்கு

ஆதிக்கம் 1 : பிறந்த கிழமை வெள்ளி

பொதுவாக எல்லா சமயத்தவர்களும் சிறப்பான புனிதமான நாளாகக் கருதும் வெள்ளிக்கிழமையினையும், அதிக சக்தி கொண்ட எண் ஒன்று 1ஐயும் (ஒன்று) கொண்டு அவதரித்திருக்கின்றீர்கள் நீங்கள். மென்மையான நல்ல மனதைக் கொண்டவராக இருப்பீர்கள். இரக்க குணம் உங்களுக்குக் கூடப்பிறந்த குணம். துன்பப்படுகின்றவர்களுக்கு இரங்குவதும், கஷ்டப்படுகின்ற ஏழைகளுக்கு உதவுவதும் உங்களது சிறப்பான பண்பாகும்.

உதவி செய்ய வேண்டுமாக இருந்தால் கண் மூடித்தனமாக உதவி புரியமாட்டீர்கள். பாத்திரமறிந்து பிச்சையிட வேண்டும் என்பார்கள். அதற்கேற்ப யாருக்கு உதவி செய்ய வேண்டும் என்று நன்கு அறிந்து தெரிந்துதான் உதவிபுரிவீர்கள். ஏமாற்றுக்காரர்களுக்கோ, பொய் பித்தலாட்டம் புரிபவர்களுக்கோ ஒருபோதும் உதவிபுரிய மாட்டீர்கள். தீயவழியில் நடப்பவர்களைக் கண்டால் வெறுத்து ஒதுக்கி விடுவீர்கள்.

நீங்கள் ஒரு வேலை செய்து அதனால் காலத்தைத் தள்ளமாட்டீர்கள். பல தொழில்களையும் நன்கு தெரிந்திருப்பீர்கள். இதன் காரணமாக பல தொழில்கள் மூலமும் வருமானம் பெறுவீர்கள். அதிகம் படித்திருக்க மாட்டீர்கள். என்றாலும் அதிகம் படித்தவர்கள் போல் உங்களுடைய நடையுடை பாவனை பேச்சு அமைந்திருக்கும். இதனால் ஆளுமையும், அறிவும், ஆற்றலும் உங்களுக்கு நிறையவே இருக்கும். இவ்வாறான திறமைகளை உடைய நீங்கள் ஆசிரியத் தொழில் புரிவீர்கள். எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்பதற்கேற்ற புனிதமான இந்தத் தொழிலைப் புரிவீர்கள். அத்தோடு மென்மையான மனம், இரக்க குணம் கொண்டவராக நீங்கள் இருப்பதனால் கலைத்துறை ஈடுபாடு மிக்கவர். இதனால் அழகான ஓவியங்களை வரைந்து அடுத்தவர்களின் மனதை இலகுவாகக் கவர்ந்து விடுவீர்கள். வைத்தியத்துறை சம்பந்தமான ஈடுபாடும் உங்களுக்கு நிறையவே இருக்கும். பலதுறைகளில் உங்களுக்கு ஆர்வமும் ஆற்றலும் இருந்த போதிலும் எதிலும் நிலைத்து நிற்கமாட்டீர்கள். இந்த நிலை உங்களுடைய 30 ஆவது வயதுவரை தொடரும். இந்தக் காலத்தில் சில நேரம் நல்ல வருமானம் கிடைக்கும். சில சமயம் குறைந்த வருமானம் கிடைக்கும்.

30 வயதிலிருந்து 55 வயது வரை வேறு வகையில் உங்களுடைய வருமானம் பெருகும். இந்தக் காலத்தில் நீங்கள் ஒரு நிலையான தொழிலில் அமர்ந்திருப்பீர்கள். உலோகம் சம்பந்தமான வியாபாரம், இயந்திரம் சம்பந்தமானவை, காகிதம் சம்பந்தமான வியாபாரம் இவைகளில் ஒரு தொழிலில் ஈடுபடுவீர்கள். 55 வயது வரை இந்தத் தொழிலில் ஈடுபட்டு நல்ல வருமானம் அடைந்து ஆயுள்வரை சொத்து சுகங்களுடன் நிம்மதியாக வாழ்வீர்கள்.

தலைவலி, வயிற்றுவலி, இலேசான காய்ச்சல், நெஞ்சுவலி போன்றவை அடிக்கடி ஏற்பட்டுக் குணமடைவீர்கள். இதனால் உயிருக்கு ஆபத்து நேரிடுமோ என்று நீங்கள் அஞ்சத் தேவையில்லை. 42 வயதளவில் உங்களது தேக ஆரோக்கியம் பாதிப்பிற்குள்ளாகும். நீங்கள் போசாக்கின்மையால் பலஹீனமடைவீர்கள். சோர்வு, சுறுசுறுப்பின்மை, ஆர்வமின்மை, சோம்பல் என்பன ஏற்படும். இந்தக் காலங்களில் உங்கள் ஆரோக்கியத்தை ஏற்படுத்தும் போசாக்கான உணவுகளை நீங்கள் சாப்பிட வேண்டும்.

உங்கள் வாழ்க்கையில் எந்தவிதமான ஆபத்துக்களும் ஏற்படாது. உங்களுடைய அதிர்ஷ்ட எண் எது தெரியுமா? அந்த எண் 8 (எட்டு) 8, 17, 26 ஆகிய திகதிகளில் நீங்கள் செய்யும் எந்தக் காரியமும் வெற்றியினைத் தரும். இந்தத் திகதிகள் நீங்கள் பிறந்த கிழமையான வெள்ளிக்கிழமையில் அமையுமானால் நீங்கள் செய்கின்ற காரியத்தின் வெற்றி அதிகமாகும்.

நீங்கள் எந்தவிதமான நிறங்களிலும் ஆடை அணியலாம். எல்லா நிற ஆடைகளும் உங்களுக்கு அதிர்ஷ்டமானவைதான். நீங்கள் மோதிரம் அணிவதற்கு ஆசைப்பட்டால் நீண்ட சதுர சிவப்புக்கல் பதித்த தங்க மோதிரம் அணிய வேண்டும்.

ஆகவே, எண் 1ஐயும் வெள்ளிக்கிழமையினையும் கொண்ட நீங்கள் வாழ்க்கையில் சகல நலன்களும் பெற்றுவாழ என் ஆசீர்வாதங்கள்.

வெள்ளி, ஒன்றோடு இணையும்போது அள்ளித்தரும் நிறை செல்வம். சொல்லிச் சொல்லி சிறப்புத் தரும். எல்லா நலமும் சேர்ந்துண்டாகும்.

*( சனிக்கிழமை பிறந்தவர்களைப் பற்றி அடுத்த வாரம் பார்ப்போம்)*


"மாஜிக் தந்திரங்கள்" குறித்த பயிற்சியும் அதனோடு ஒட்டிய சுவைமிகு தகவல்களும் தொடர்ந்து வெளிவரும். மாஜிக் பிரியமுடைய நீங்களும் மாஜிக் நிபுணராகத் திகழ எமது வாழ்த்துக்கள்.

# மாஜிக் தந்திரங்கள்



மறுபடி மந்திரக் கோலைக் கொண்டு மேலே இருந்து எதையோ வரவழைப்பது போல நடித்து, கைக்குட்டையை எடுத்துவிட்டு உள்ளே பார்த்துப் புன்முறுவல் செய்து கையை விட்டு மற்றொரு சாத்துக்குடி ஆரஞ்சுப் பழத்தை எடுத்து தாம்பாளத்தில் விடவேண்டும். மறுபடி இதே போல செய்து மூன்றாவது பழத்தையும் எடுத்து விட வேண்டும்.

முதலில் மேலே உள்ள 3ஆவது எண் குழாயை எடுத்து அதனுள் கையை விட்டு, மறுபக்கம் நீட்டி, உள்ளே ஒன்றும் இல்லை என்பதைக் காட்டிவிட்டு, அதைப் பக்கத்தில் வைத்துவிட்டு, எண் இரண்டை எடுத்து




உள்ளே கையை விட்டு, வெளியே நீட்டிக் காண்பித்து, மறுபடி வைக்கும்பொழுது எண் ஒன்றின் மேல் வைத்துவிட்டு எண் ஒன்றையே வெளியே எடுத்துக் காண்பித்துவிட்டு அதையும் வாங்கின் மேல் வைத்துவிட்டு, வலது கையினால் பொருள் இருக்கும் குழாயை எண் 2 உடன் இணைத்துத் தூக்கி வாங்கின் மேல் ஒன்றுமில்லை என்பதைக் காண்பித்துவிட்டு, மறுபடி வாங்கின் நடுவில் வைத்து எண் ஒன்றை எண் 2இன் உள்ளே வைத்து, எண் மூன்றை அதன் மேல் வைத்து, கைக்குட்டையினால் மூடி, மறுபடி மந்திரக் கோலினால் மந்திரம் போட்டு, மேலே எதையோ வரவழைப்பது போல நடித்து, கைக்குட்டையினால் மூடி, மறுபடி மந்திரக் கோலினால் மந்திரம் போட்டு, மேலே எதையோ வரவழைப்பது போல நடித்து, கைக்குட்டையை எடுத்து முன் போல நடித்து, மூன்று வாழைப் பழங்களையும் ஒவ்வொன்றாக எடுத்து தாம்பாளத்தில் வைக்க வேண்டும். மறுபடி முன்போல குழாயை எடுத்து கையை விட்டுக் காண்பித்து மறுபடி ஒன்றாகச் சேர்த்து சாத்துக்குடி ஆரஞ்சு எடுத்தது போலவே இப்போது இரப்பர் பந்துகளை ஒவ்வொன்றாக எடுத்து தாம்பாளத்தில் வைக்க வேண்டும். இதே போல காகித ரிப்பனையும் இழுக்க, இழுக்க, நீளமாக வரும். அவ்வளவையும் எடுத்து தாம்பாளத்தில் போட்டு, மறுபடி குழாயில் கைவிட்டுக் காண்பித்து முன் போலவே வைத்து மூடிபோட்டு, உள்ளே இருக்கும் கொடிச் சரத்தை மெதுவாக எடுத்து கடைசியில் வரும் அடித்தட்டையும் சாமர்த்தியமாக கையில் பிடித்து தாம்பாளத்தில் வைத்துவிட வேண்டும். இப்போது பொருள் வைக்கப்பட்ட குழாயின் அடிப்பாகம் திறந்திருக்கும். எனவே, எல்லாக் குழாய்களையும் ஒரு கையில் உள் குழாயை பிடித்தபடி எண் 1ஐயும் மறுகையில் 2-3 எண் குழாய்களையும் எடுத்து அடிப்பாகம் சபையோருக்குத் தெரியும்படி தூக்கிக் காண்பித்துவிட்டு உள்ளே கொண்டுபோனால் இந்தக் குழாயிலிருந்தா இவ்வளவு பொருள்கள் வந்தனவென்று சபையோர் ஆச்சரியப்படுவார்கள்.

### கரன்ஸி நோட்டை எரித்துவிட்டு, முன்போல வரவழைத்தல்.

இந்தக் காட்சியை நடத்துவதற்கு ஒரு சிறிய மரப் பெட்டி தேவை. இந்த மரப் பெட்டி மற்றும் பல மாஜிக் வேலைகளுக்குக் கூட பயன்படக் கூடியது.

5 மி.மீட்டர் கனமுள்ள நல்ல பலகையில் இந்த மரப் பெட்டியைத் தயாரிக்க வேண்டும்.

உள் அளவு நீளம் 15 1/2 செ.மீ., உள் குறுக்களவு 10 செ.மீ., உள் உயரம் 2 செ.மீ. இருக்க வேண்டும். இந்த அளவில் ஒரு மரப் பெட்டி தயாரிக்க வேண்டும். இந்த மரப் பெட்டியை மூட, திறக்க தனி மூடி அமைக்க வேண்டியதில்லை. இந்தப் பெட்டியின் நடுவில்



திறக்கும் வாய்ப்பகுதி இருக்க வேண்டும். அதாவது மேல் மூடி பாதியாகவும், அடிப் பெட்டி பாதியாகவுமிருக்க வேண்டும். பெட்டியைத் திறந்தால் மேலே பாதிப் பகுதியும், கீழே பாதிப் பகுதியும் இருக்க வேண்டும். அந்தப் பெட்டி மேல் பகுதி கீழாகவும், கீழ் பகுதி மேலாகவும் மேல் மூடி கீழ் தட்டாகவும் மாறிவிட வேண்டும். இந்த விதமாக இரண்டு சிறிய கீல் வைத்துத் திருகிவிட வேண்டும்.

இந்தப் பெட்டியின் ஓர் அடையாளமாக மேல் மட்டத்தின் ஒரு பகுதியில் மட்டும் ஏதாவது ஓர் அடையாளம் போட்டுவிட வேண்டும். இந்த அடையாளம் 2 செ.மீ. அகலத்தில் இருக்க வேண்டும். இந்த அடையாளம் பெட்டியின் மேல் பகுதி என்பதை தெரிந்துகொள்ள உதவும்.

அதன்பின் இந்தப் பெட்டியின் உள்ளே 5 செ.மீ. கனமுள்ள ஒரு மரப் பலகையில் ஒரு தட்டு தயார் செய்ய வேண்டும். இந்தத் தட்டு பெட்டியின் உள் அளவில் சற்று சிறியதாக இருக்க வேண்டும், அதாவது இந்தத் தட்டை பெட்டியைத் திறந்து உள்ளே வைத்து பெட்டியை மூடி பெட்டியை தலைகீழாகத் திருப்பித் திறந்தால் அந்தத் தட்டு மேல் மூடியில் விழுந்து மட்டமாக இருக்க வேண்டும். இந்த விதமாக இந்தப் பலகை மேலும், கீழுமாக சரளமாக மாறும் அளவில் தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

காட்சி ஆரம்பிக்கும் முன் ஒரே மாதிரியானதும் ஒரே நிறத்திலும் அதே நேரத்தில் தயார் செய்த பெட்டியினுள் இடை வெளியோடு இருக்கக் கூடியதுமான இரண்டு காகிதப் பைகளைத் தயார் செய்து அல்லது கடையில் வாங்கி ஒரு காகித கவரில் ஒரு ரூபாய் அளவில் வெட்டப்பட்ட ஒரு காகிதப் பையில் அதாவது காகிதத் துண்டை வைத்து கவரை ஒட்டி இந்தப் பெட்டியினுள் மரத்தட்டுப் பலகையை எடுத்து வைத்து கவரை மூடி விட்டுப் பெட்டியின் மூடியை மூடி மேடையில் ஒரு நாற்காலி அல்லது மேஜையின் மேல் வைத்துவிட வேண்டும். அதன்மேல் மற்றொரு கவரை பார்வையாக வைத்துவிட வேண்டும்.

இந்தக் காட்சியை ஆரம்பிக்கும் பொழுது, பெட்டியை எடுத்து அதைத் திறந்து, பெட்டியின் உள் பக்கத்தில் இரண்டு விரல்களை வைத்து உள்ளே இருக்கும் மரப்பலகை கீழே விழுந்து விடாதபடி விரலினால் அழுத்திப் பிடித்துக்கொண்டு பெட்டியை சபையோர் பக்கம் காண்பித்து உள்ளே ஒன்றும் இல்லை என்பதை தெளிவுபடுத்திவிட வேண்டும். (ஆனால் உள்ளே மரத் தட்டுப் பலகையின் அடியில் வெறும் காகிதம் வைத்து ஒட்டப்பட்ட கவர் இருப்பது நமக்கு மட்டும்தான் தெரியும். பலகை மேலே மறைத்துக்கொண்டிருப்பதால் சபையோர் அது வெறும் பெட்டி என்றே நினைப்பார்கள்.

பிறகு, ஒரு கையில் பெட்டியும், ஒரு கையில் ஒரு கவரையும் எடுத்துக் கொண்டு சபையின் முன் வரிசையில் உள்ள ஒருவரிடம் ஒரு ரூபாய் நோட்டு இருக்கிறதா? என்று கேட்டு ஒரு நோட்டை எடுத்து, நோட்டு கொடுத்தவரையே அந்தக் கவரில் நோட்டை வைத்து ஒட்டித் தருமாறு கேட்டு அதேபோல செய்தபின் அவரை பெட்டியினுள் வைக்கும்படி செய்து பெட்டியை மூடிக்கொண்டு எடுக்கும்போதே அதை தலைகீழாகத் திருப்பி கையில் வைத்துக்கொண்டு பெட்டியைத் திறந்தால், ஒரு ரூபாய் உள்ள கவர் கீழே படிந்து அதன் மேல் பெட்டியிலுள்ள மரத்தட்டு அதை மூடிக்கொள்ளும்.

தொடர்ந்து வரும்..........

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.
*-காதில பூ கந்தசாமி-*

இந்த முறை தேர்தல் களத்தில குதிக்காமல் விடுறதில்லை எண்டு ஒரு சபதம் செய்திருக்கிறனுங்கோ. என்ன ஒரு மாதிரிப் பாக்கிறியள். இவருக்கெல்லாம் தேர்தல் ஒரு கேடோ எண்டு நினைக்கிறியள் போல. எனக்கென்ன குறை? சீமான் மாதிரி இருக்கிறன். அடிசனலா காதில ஒரு பூவோட நிக்கிறன். அவ்வளவுதானே. இங்க எவனெவனோ எல்லாம் எலக்சன் எண்டவுடன முந்தியடிச்சுக்கொண்டு போட்டிபோட நிக்கிறான். நாளைக்குக் கட்டையில போற கிழம் முதல் இன்னும் மீசை முளைக்காத வட்டுக்காய் வரைக்கும் எல்லாருக்கும் எலக்சன் கேட்டு எம்.பியா வரவேணும் எண்டு நப்பாசை இருக்கு தெண்டா எனக்கு வந்த ஆசை என்ன தப்பாசையோ சொல்லுங்கோ?

சோ... வட் டு டு? ரிக்கெற் தர்றவன் யாரெண்டு யோசிச்சிட்டு சும்மா ஒரு கோல் எடுத்தன் நம்ம சம்பந்தன் ஐயாவுக்கு.

"ஐயா! நான் உங்களைப் பற்றி எழுதாத எழுத்தில்ல. நல்லா அறிவியள். எலக்சனில உங்கட கட்சிக்குள்ள ஒரு சீற்றுத் தாங்களன்" எண்டு கேட்டுப் பாத்தன்.

அதுக்கு அவர் சொன்னார், "தம்பி! நீர் என்னை நம்பிக் கேக்கிறீர். உள்ளதைச் சொன்னா என்ன, இப்ப என்ர கையில எதுவும் இல்லை. எல்லாம் அங்கதான் முடிவெடுக்கப்படுகுது. நான் ஒரு ரபர் ஸ்ராம். அவ்வளவுதான். இப்ப பாரும், இம்மாம் பெரிய கட்சியெண்டு இருந்ததுக்கென்ன, எங்களுக்கு யாழ்ப்பாணத்திலையும். மட்டக் களப்பிலையும் இவ்விரண்டு சீற்தானே ஒதுக்கியிருக்கிறாங்கள். அதுக்குள்ள உம்மையும் புகுத்தச் சொல்லி நிண்டா என்னாலையும் முடியாது. அதை பெமிசன் இல்லாமல் செய்ய முனைஞ்சா எனக்கிருக்கிற சீற்றும் இல்லாமல் போயிடும். அதால ப்ளீஸ், வேற யாரையும் பாரும்" எண்டிட்டார்.

'அட கெட்ட காலமே! இந்தப் பழம்பெரும் கட்சிக்கும் இப்படியொரு கெதியோ' எண்டிட்டு, அடுத்ததா சுத்தினன் நம்மட விநாயகத்தாற்ர நம்பருக்கு.

"ஐயா! விநாயக ஐயா! நீங்கள்தான் சரண் எனக்கு. அந்தக் காலம் முதல் நான் எங்கப்பா பரம்பரையில இருந்து காங்கிறஸ்காறன்தான். இந்தமுறை தேர்தலில உங்கட பட்டியலில எனக்கு ஒரு சீற் ஒதுக்கித் தந்திட வேணும்" எண்டு ஒரு கதையை விட்டன்.

அதுக்கு ஒரு குதிரைக் கனைப்புத்தான் பதிலா வந்திச்சுது முதலில.

"என்ன ஐயா! ஏதோ வித்தியாசமான சத்தம்" எண்டு கேட்டன்.

"நோ! நோ! தம்பி! அது நான்தான் சிரிச்சனான்" எண்டிட்டு "என்ர கதியே திரிசங்கு சொர்க்கமாகி நிக்கிற நேரத்தில நீர் வந்து சீற்றுக் கேக்கிறதைப் பாக்க எனக்கு அழுகிறதோ சிரிக்கிறதோ தெரியேல்லை."

"சரி, சிரிச்சதைக் கேட்டனான், அதுவே சகிக்கேல்ல. தயவுசெய்து அழுது போடாதயுங்கோ" எண்டு சொல்லிட்டு, "ஏன் ஐயா! அப்பிடி என்ன திரிசங்கிட சங்கடம் வந்தது உங்களுக்கு" எண்டு கேட்டன்.

"தம்பி! நான் நாளுக்கு நாலு தரம் 'நமசிவாய' எண்டு சொல்லாமல் விட்டாலும் 'ஏகப் பிரதிநிதிகள் அவைதான்' எண்டு எந்த நாள்தன்னும் சொல்ல மறந்திருக்கிறனோ? அப்பிடிச் சொல்லி வந்த என்னையே யாழ்ப்பாண லிஸ்றில இருந்து அப்படியே கழட்டிக் கொண்டு வந்து வன்னியில நிக்கச் சொல்லி தொப்பெண்டு போட்டிட்டாங்கள். இந்தக் காட்டுக்குள்ள யாரிட்டப் போய் நான் வோட்டுக் கேக்க? காக்காக்கு மிஞ்சி காக்காய் பிடிச்ச என்னையே தூக்கி எறிஞ்சிட்டாங்கள் எண்டா, உம்மைக் கொண்டு போய் லிஸ்றில போடச் சொல்ல எனக்கு என்ன 'தில்' இருக்குமெண்டு நினைக்கிறீர்? தயவுசெய்து ஒரு அட்வைஸ் சொல்லிறன். புத்திசாலித்தனமாக் கேட்டுக்கொள்ளும். தொழில் துரவெண்டு உமக்கு ஏதும் இருந்தா அதையே கொண்டினியூ பண்ணும். எங்களைப் போல ஏதேதோ ஆசையில ஏகப் பிரதிநிதித்துவம் எண்டு கொண்டு வந்து எலிப்பொறிக்குள்ள மாட்டிக்கொள்ளாதேயும். இதை நான் சொன்னனெண்டு எங்கேனும் எழுதிக் கிழுதிப் போடாதேயும், தயவு செய்து."

"பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" எண்டுவாங்கள். எனக்கு ஏனப்பா வம்பு. ஏதோ கூட்டு எண்டாங்கள். நிறைய வோட்டுக் கிடைக்கும் எண்டு ஆசைப்பட்டு உள்ளுக்குள்ள பூருவம் எண்டு பாத்தா அங்க ஆளாளப் பிடிச்சு ஆணியறைஞ்சு வச்சிருக்கிறாங்கள். தோளால சுமந்துகொண்டு வாயால மட்டும் கோஷம் போடுகினம்! எல்லாம் வேஷம்தான்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்தவாரம் உங்கள் பலன்

(07.03.2004 தொடங்கி 13.03.2004 வரை)

**சோதிட மாமணி தில்லை**

### இந்த வாரக் கிரக நிலை

கும்பம் - சூரியன், மீனம் - புதன், மேடம் - வெள்ளி, இராகு, இடபம் - செவ்வாய், மிதுனம் - சனி, சிங்கம் - வியாழன், துலாம் - கேது, சந்திரன் சிங்கம், கன்னி, துலாம், விருட்சிகம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) மனக் குறை நீங்கும், காரியத் தடை, மனக் கலக்கம், உறவினர் உதவி, வீண் பிரயாசம், பிரயாண மிகுதி, குடும்ப நன்மை, உத்தியோகப் பேறு, புதிய பதவி கிடைத்தல், மாணவர் கல்வி உயர்ச்சி, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 02

**இடபம் :** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் பலிதம், பணவரவு, காரியானுகூலம், வெளியிடப் பயணம், செலவு மிகுதி, உத்தியோகக் கலக்கம், பெரியோர் சகாயம், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05

**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) தொழில் மந்தம், செலவு மிகுதி, உறவினரால் தொல்லை, அற்ப சுகம், உத்தியோகப் பேறு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 04

**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் மாற்றம், பிரயாச மிகுதி, கௌரவம், குடும்ப நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி, அன்னியர் உதவி, உத்தியோக நன்மை, புதிய பதவி கிடைத்தல், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 06

**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் கஷ்டம், பிரயாண மிகுதி, செலவு அதிகம், உறவினர் இழப்பு, மனக் கவலை, உத்தியோகம் சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 07

**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை, பெரியோர் உதவி, கௌரவம், வெளியிட வாழ்க்கை, உத்தியோகக் கஷ்டம், மனக் கவலை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 06

**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் மந்தம், பணவிரயம், பெரியோர் உதவி, வெளியிடப் பிரயாணம், தேகசுகம் பாதிப்பு, உத்தியோக நன்மை, பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 04

**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை ) தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி, பணவரவு, உயர்ந்த நிலை, பிரயாண மிகுதி, வீண் அலைச்சல், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம் :- 03

**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் சிரமம், வீண் கவலை, உறவினரால் தொல்லை, தூர இடப் பயணம், அன்னியர் நட்பு, உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 06

**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் அலைச்சல், மனக் குழப்பம், குடும்பத் தொல்லை, செலவு மிகுதி, அன்னியர் நட்பு, கௌரவக் கேடு, உத்தியோக நன்மை, பதவி மாற்றம், மாணவர் கல்வி குழப்பம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 02

**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) தொழில் மேன்மை, கௌரவம், காரியானுகூலம், உறவினர் உபத்திரவம், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், பிரயாச மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 04

**மீனம் :** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் பலிதம், உயர்ந்த நிலை, உறவினர் பகை, கடன் தொல்லை, உத்தியோகச் சிக்கல், பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, புதிய முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)


## அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகம்



[illegible]

ஜோதிட தத்துவ ஞானி PRF.DR.P.K. SAMY(DGANJ.P.
182, KOTA HENA STREET
COLOMBO-13.
T.P 011 2342483, 011 2342484, 011 2431187, 011 2470615

d@ta KORTET LUR.as

DATAKORTET MED TAMILSK LAERER

Datakortet Består av 7 moduler og går over 100 timer. Laar; Regnark, Tekstbehandling, Presentasjoner, Internett, Mail, Databaser mm.

Kurset koster 7500 NOK og går i Jerikoveien 20 i Oslo, Norge.
Oppstart : 19-01-04 mandag og onsdag kveldstid 1700 - 2100.
Tel 22821500 fax 22821501 www.lur.as

நோர்வேயில் கொம்பியூட்டர் பாட நெறி தமிழ் மூலம் கற்பிக்கப்படும்.


## நிபுணத்துவ கைரேகை





[illegible]

கே.மங்களாதரன் (M.A) J.P
162, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13.
Booking Time 4.00 p.m To 7.00 p.m Only

## பிரிவு

இதைப் பார்க்கும்போது [illegible] ......



## பரபரப்பு.....

இலங்கை – அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் இலங்கையில் நடைபெற்று வந்த ஒருநாள் ஆட்டங்கள் இலங்கை இரசிகர்களுக்குக் கவலையளிப்பதாகவே முடிந்துள்ளது. நான்கு போட்டிகளில், மூன்றுக்கு ஒன்று என்ற அடிப்படையில் அவுஸ்திரேலியா, இலங்கையைத் தோல்வியடையச் செய்துள்ளது. தம்புள்ளையில் நடைபெற்ற இரு போட்டிகளையும் கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் 25.02.04, 27.02.04 ஆம் திகதிகளில் நடைபெற்ற இரு போட்டிகளும் இரு அணிகளுக்கும் பெரும் சவாலாக அமைந்ததோடு முடிவு வரை யாருக்கு வெற்றி என்பதைத் தீர்மானிக்க முடியாதளவு பரபரப்பு இரசிகர்கள் மத்தியில் காணப்பட்டது. அடுத்ததாக இரு டெஸ்ட் ஆட்டங்கள் உள்ளன. பார்ப்போம் யார் வெற்றியாளர் என்று....





## அழிவு

நவீன ரக ஆயுதங்களின் கண்டுபிடிப்பால் தேசங்களின் சகல எல்லைகளிலும் அழிவுகள் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. ஆனால், இங்கே உடைந்து நொருங்கிப்போய் காட்சி தருவது இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட அழிவின் வடுதான். மொராக்கோ நாட்டில் இம்மஸ்ரோன் கிராமத்தில் பூகம்பத்தால் ஏற்பட்ட அழிவுகளின் ஒரு பகுதிதான் இது.

## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி ஸவீனா றெஜி

### 02.03.2004

லண்டன் Newbury Park இல் வசிக்கும் றெஜி - [illegible] தம்பதிகளின் செல்வப் புதல்வி ஸவீனா 02-03-04 இல் வரும் தனது முதலாவது பிறந்த தினத்தை 28-03-04 சனிக்கிழமை அன்று தனது இல்லத்தில் மிக விமரிசையாகக் கொண்டாடுகிறார். அன்புச் செல்வம் ஸவீனாவை அன்பு அப்பா - அம்மா, லண்டனில் வசிக்கும் [illegible]

[illegible]

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து



08.03.2004

### செல்வி அகிராம்வரன் சந்தியா

[illegible]